Government of Karnataka

# செம்மொழித் தமிழ்

# Chemmozhi Thamizh

# 9

## Tamil First Language

## Ninth Standard

## 2015

**Karnataka Textbook Society (R.)**
100 Ft. Ring Road, Banashankari 3rd Stage,
Bengaluru - 560 085.

©KTBS Not to be republished

# Preface

The Textbook Society, Karnataka has been engaged in producing new textbooks according to the new syllabi which in turn are designed on NCF - 2005 since June 2010. Textbooks are prepared in 12 languages; seven of them serve as the media of instruction. From standard 1 to 4 there is the EVS and Mathematics and from 5th to 10th there are three core subjects namely mathematics, science and social science.

**NCF - 2005 has a number of special features and they are :**

- connecting knowledge to life activities
- learning to shift from rote methods
- enriching the curriculum beyond textbooks
- learning experiences for the construction of knowledge
- making examinations flexible and integrating them with classroom experiences
- caring concerns within the democratic policy of the country
- making education relevant to the present and future needs.
- softening the subject boundaries-integrating knowledge and the joy of learning
- Making the child the constructor of knowledge

The new books are produced based on three fundamental approaches namely.

Constructive approach, Spiral Approach and Integrated approach.

The learner is encouraged to think, engage in activities and master skills and competencies. The materials presented in these books are integrated with values. The new books are

©KTBS Not to be republished

not examination oriented in their nature. On the other hand they help the learner in the all round development of his/her personality, thus helping him/her become a healthy member of a healthy society and a productive citizen of this great country, India.

The most important objectives of teaching language are listening, speaking, reading, writing and reference work. These skills have been given a lot of importance in all the language textbooks. Along with the inculcation of these skills, fundamental grammar, opportunities for learners to appreciate beauty and imbibe universal life values have been integrated in language textbooks. When learners master these competencies, they would stop studying textbooks for the sake of passing examinations. In order to help learners master these competencies, a number of paired and group activities, assignments and project work have been included in the textbooks. It is expected that these activities would help learner master communicative skills. Ultimately, it is expected that students master the art of learning to learn and make use of these competencies in real life.

The Textbook Society expresses grateful thanks to the chairpersons, writers, scrutinisers, artists, staff of DIETs and CTEs and the members of the Editorial Board and printers in helping the Text Book Society in producing these textbooks. A few works of some writers and poets have been included in these textbooks. The textbook society is extremely grateful to them for giving their consent for the inclusion of these pieces in the textbooks.

Date : 1-3-2013

**G. S. Mudambadithaya**
Coordinator
Curriculum Revision and
Textbook Preparation
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

**Nagendra Kumar**
Managing Director
Karnataka Textbook Society®
Bengaluru, Karnataka

©KTBS Not to be republished

# பாட நூல் அறிமுகம்

கருநாடக மாநிலத்தில் பிறமொழிச் சூழலில் வாழும் தமிழ் பயிலும் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழிலக்கிய நுகர்வாற்றலைப் பெறுவதற்குகந்த நிலையில் இப்பாட நூல் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

சங்க இலக்கியம் முதல் தற்கால இலக்கியம் வரையுள்ள இலக்கியங்களைப் பற்றிய உணர்வினை மாணவர்களிடையே வளர்க்க வேண்டும் என்னும் உயரிய நோக்குடன் செய்யுள் பகுதி உருவாக்கப் பட்டுள்ளது. தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் புறவியல், அறிவியல், சுற்றுப்புறச் சூழல், பயண இலக்கிய அறிவு, நகைச்சுவையோடு இழைந்திலங்கும் அறிவு, சிறுகதை, நாடகம் போன்றவற்றைப் பற்றி மாணவர்கள் அறிய வேண்டுமென்ற நிலையில் அவற்றில் ஈடுபாடு ஏற்படுத்த வேண்டுமென்ற கொள்கை ஆகியவற்றைத் தெளிவுறுத்தும் நிலையிலும் வாழும் மண்ணில் புகழ் பெற்றிலங்கும் கன்னடக் கலையின் சிறப்பினையும் மாணவர்கள் அறிந்துகொள்வது மிகவும் அவசியம் என்பதனையும் அறிவுறுத்தும் வகையிலும் உரைநடைப் பகுதி அமைந்துள்ளது. செய்யுள், உரைநடைப் பகுதிகளில் மாணவர்களின் அறிவுத்திறனைச் சோதிக்கும் வகையில் பயிற்சிகள் கொடுக்கப் பட்டுள்ளன.

இப்பாட நூலை உருவாக்கும் நற்பேற்றினை எங்களுக்கு அளித்தமைக்காக கருநாடக மாநிலப் பாடப்புத்தகக் கழகத்திற்கும் அதன் நிருவாக இயக்குநருக்கும் தலைமை ஒருங்கிணைப்பாளருக்கும் நூல் செம்மையுற அமையத் துணை நின்ற உதவி இயக்குநர் திருமதி. சந்திரகலா அவர்களுக்கும் கருநாடக மாநிலக் கல்வித் துறை பாடநூல் துணை இயக்குநர் மற்றும் பிற அலுவலர்கட்கும் பாடநூல் குழுவினரின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். செய்யுள் மற்றும் உரைநடைப் பகுதிகளுக்குத் தேர்வு

©KTBS Not to be republished

செய்யப் பட்டுள்ள கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் முதலியவற்றைப் பயன் படுத்திக் கொள்ள அனுமதி நல்கிய தமிழ் எழுத்தாளர்களுக்கும் இலக்கிய ஆர்வலர்கட்கும் அன்பார்ந்த நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**முனைவர் .அ. சங்கரி**
**தலைவர்,** பாடநூற் குழு
மற்றும் குழு உறுப்பினர்கள்.

©KTBS
Not to be republished

# Textbook Committee

***Chairperson :***

1) **Dr. A. Sankari**, Professor in Tamil and retired Principal, No.3668, 8th Cross, 13th D-Main, HAL II Stage, Indira Nagar, Bengaluru-8.

***Members :***

1) **S. Govindaraju**, Lecturer, B.B.M.P. PU College for girls, Austintown, Bengaluru.
2) **Sri. L. Raghupathi**, Retd. Head Master, L-6, T.B. Dam Road, Opp. Saibaba Temple, Hospet post, Ballari Dist.
3) **Smt. M. Karthiyayini,** A.M. St. Alphonsus High School, Davis Rd. St. Thomas town, Bengaluru-84.
4) **Sri. C. Karnan,** A.M. S.V.V.R. High School, A.M. Aranakatte, Hiriyur (Tk.), Chitradurga (Dt).
5) **Smt. Inbarasi,** A.M. Govt. High School, Pottery Town, Bengaluru-46.

***Scrutinizer :***

1) **Dr. Ramamoorthy,** Central Institute of Indian Languages, Mysuru.

***Chief Co-ordinator :***

**Prof . G.S. Mudambadithaya,** Co-ordinator, Curriculum revision and textbook preparation, KTBS, Bengaluru.

***Chief Advisers :***

**Sri Nagendra Kumar,** Managing Director, KTBS, Bengaluru.

**Sri Panduranga,** Deputy Director(incharge), KTBS, Bengaluru.

***Programme Co-ordinator :***

**Smt. Jayalakshmi,** ADPI, KTBS, Bengaluru.

©KTBS Not to be republished

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| I. | ***வாழ்த்து*** | |
| அ. | இறை வாழ்த்து | |
| | *1)* திருவருட்பா | *1* |
| | *2)* நபிகள் நாயகம் | *4* |
| | *3)* இயேசு காவியம் | *6* |
| ஆ) | மொழி வாழ்த்து | *8* |
| இ) | நாட்டு வாழ்த்து | *11* |
| II. | ***அறவுரை*** | |
| | *1)* திருக்குறள் | *15* |
| | *2)* பழமொழி | *21* |
| | *3)* நல்வழி | *25* |
| III. | ***தொடர் நிலைச் செய்யுள்*** | |
| | *1)* நளவெண்பா | *28* |
| | *2)* மனோன்மணீயம் | *39* |
| IV. | ***பல்சுவை*** | |
| | *1)* புறநானூறு | *48* |
| | *2)* நந்திக் கலம்பகம் | *51* |
| | *3)* இரட்டுற மொழிதல் (சிலேடை) | *53* |
| | *4)* கலிங்கத்துப்பரணி | *56* |
| | *5)* முக்கூடற் பள்ளு | *58* |
| V. | ***மறுமலர்ச்சிக் கவிதைகள்*** | |
| | *1)* பாண்டியன் பரிசு | *61* |
| | *2)* வேம்பு | *63* |
| | *3)* நாட்டுப்புறப்பாடல் | *66* |


©KTBS Not to be republished

| | | |
|---|---|---|
| | 4) உழைக்க வேண்டும் | 69 |
| | 5) நயாகரா | 72 |
| | 6) வெளிச்சத்தைத் தேடி | 75 |
| | **உரைநடை** | |
| | 1) ஆய்வறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்<br>முனைவர் பா.சு. மணி | 77 |
| | 2) தமிழ் இலக்கியத்தில் ஐவகை நிலக்காட்□சிகள்<br>முனைவர். இரா. சீனிவாசன் | 84 |
| | 3) கை குறைத்த தென்னவன் (நீதிக்கதை) – எம்.பி. ஆர் | 90 |
| | 4) கணினி : முனைவர் சரோஜா<br>முனைவர். அனார்க்கலி | 100 |
| | 5) போர்துறந்த புனிதர் – தே.ப. பெருமாள் | 107 |
| | 6) அழகுமிகு அந்தமான் – திரு. முருகு சுப்ரமணியம் | 117 |
| | 7) யக்ஷகான ஆட்டம் – (மூலம்) க. சிவராம காரந்த்<br>மொழியாக்கம் : முனைவர் அ. சங்கரி | 127 |
| | 8) புதுக்கவிதை உத்திகள் – திரு □. அ. செல்லப்பா | 134 |
| | 9) மூவலூர் வீராங்கனை – பா. ஜீவ சுந்தரி | 142 |
| | **இலக்கணம்** | |
| | எழுத்து | 151 |
| | சொல் | 159 |
| | பொருள் | 175 |
| | யாப்பு | 178 |
| | அணி | 183 |


©KTBS Not to be republished

# I. வாழ்த்து

## அ. இறைவாழ்த்து

## 1. திருவருட்பா

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
புறமாகி அகமாகிப் புனித மாகி

மன்னாகி மலையாகிக் கடலு மாகி
மதியாகி ரவியாகி மற்று மாகி

முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
முழுதாகி நாதமுற முழங்கி எங்கும்

மின்னாகிப் பரவிஇன்ப வெள்ளந் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந்தேவே !

- இராமலிங்க அடிகளார்

©KTBS Not to be republished

**நூல் குறிப்பு :**

திரு + அருள் + பா = திருவருட்பா என வழங்கப்படுகிறது. இராமலிங்க அடிகளார் அவ்வப்போது அருளிய ஏற த்தாழ ஆறாயிரம் பாடல்களை ஆறு திருமுறைகளாகத் தொகுத்து அவற்றைத் திருவருட்பா என்ற நூலாக வெளியிட்ட பெருமை அவருடைய மாணவரான வேலாயுத முதலியாரைச் சாரும்.

**ஆசிரியர் குறிப்பு :**

இப்பாடலின் ஆசிரியர் இராமலிங்க அடிகள் ஆவார். இவர் கடலூர் மாவட்டத்திலுள்ள மருதூர் என்னும் சிற்றூரில் இராமையாப் பிள்ளைக்கும், சின்னம்மையாருக்கும் மகனாக ***5.10.1823*** **-** இல் பிறந்தார். இவர் எழுதிய பிற நூல்கள் மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம், சிவநேச வெண்பா

முதலியனவாகும். கடலூரை அடுத்த வடலூரில் சத்திய தருமச் சாலையை நிறுவியுள்ளார். இவர் திருவருட்பிரகாச வள்ளலார் எனப் போற்றப்படுகிறார்.

### அருஞ்சொற்பொருள் :

பொன் - தங்கம் ; மணி - மாணிக்கம் ; போகம் - இன்பம் ; புறம் - வெளி ; அகம் - உள்ளே ; மதி - நிலவு ; ரவி - கதிரவன் ; நாதம் - இசை ; மின் - ஒளி ; முகில் - மேகம்.

### கருத்துரை :

பொன்னாகவும், மணியாகவும், இன்பமாகவும், உள்ளொலியாகவும், அண்டவெளியாகவும், புனிதமாகவும் விளங்குபவன் இறைவன். நிலை பெற்றவனாகவும் மலையாகவும், கடலாகவும், நிலவாகவும், கதிரவனாகவும் மற்றும் எல்லாமாகவும் இருப்பவன் இறைவன். முதலாகவும் முடிவாகவும் முழுமையாகவும் விளங்கி எங்கும் இசையாக நிறைந்திருப்பவன் இறைவன். உள்ளத்தில் ஒளி பரவி இன்ப வெள்ளமாய்த்தேங்கி இருப்பவனும் கருணையை மழையாகப் பொழிபவனும் இறைவன் என்று இராமலிங்க அடிகளார் இறைவனை வாழ்த்துகிறார்.

## பயிற்சி

### எதிர்ச் சொல் தருக :

முன் ; இன்பம் ; அகம் ; குறைவு.

### எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :

மன் - மண் ; புறம் - புரம் ; மலை - மழை ; வெள்ளம் - வெல்லம்; விளங்கு - விலங்கு.

### ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1) திருவருட்பா நூலைத்தொகுத்தவர் யார் ?

2) இராமலிங்க அடிகளார் எவ்வாறு போற்றப்படுகிறார் ?

©KTBS Not to be republished

3) இராமலிங்க அடிகளார் இயற்றிய நூல்கள் இரண்டினைக் கூறுக.

4) எங்கும் நிறைந்திருப்பவன் யார் ?

**மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) திருவருட்பா - நூல் குறிப்பு வரைக.

**பத்து வரிகளில் விடை எழுதுக :**

1-) இறைவன் எவ்வாறெல்லாம் விளங்குவதாக இராமலிங்க அடிகளார் கூறுகின்றார் ?

**இடம் கட்டிப்பொருள் விளக்குக :**

1) "பொன்னாகி மணியாகிப் போகமாகி"

**ஒலிநயச் சொற்களை எடுத்தெழுதுக :**

பொன்னாகி - மணியாகி

**செயல்பாடு :** இச்செய்யுளை இசையுடன் பாடிப் பழகுக.

**செயல்முறை :** திருவருட்ப பாடல்களை இசையுடன் பாடி மகிழ்க.

©KTBS Not to be republished

## 2. நபிகள் நாயகம் வேண்டுகோள் "மன்னியுங்கள்"

குற்றமே செய்தால் கூடக் குறைவின்றி மன்னியுங்கள் ;
மற்றுமே குற்ற மானால் முன்னிருந் தொதுக்கிடுங்கள் ;
அ   ற்ற ஓர் அடிமை கூட ஆண்டவன் அடியான் தானே
மற்றுமேன் அடிமை என்று மாந்தனை வதைக்க வேண்டும் ?

- கவிஞர். துரை. மாலிறையன்

### நூல் குறிப்பு :

இறை பேரொளி நபிகள் நாயகம் அருட்காவியம் என்னும் நுலில் மரபுக் கவிதையில் நபிகள் நாயகத்தைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்ட ஏழாவது காப்பியமாக அமைந்துள்ளது.

### ஆசிரியர் குறிப்பு :

"இறை பேரொளி நபிகள் நாயகம் அருட்காவியம்" என்னும் தமிழ் இலக்கியத்தைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு வழங்கியவர் புதுவைக் கவிஞர் துரை. மாலிறையன் ஆவார். அவரோடு இல்லறத்தில் மட்டுமல்ல, இலக்கியச் சேவையிலும் துணைபுரியும் அன்பு மனையாள் சூரியவிசயகுமாரி. மிகவும் பாராட்டிற்குரிய தம்பதியர்கள், காதற்கனிகள், நேருகாவியம், பாவேந்தர் காப்பியம், அம்பேத்கார் காவியம், அருள்நிறை மரியம்மை காவியம், அன்னை தெரசா காவியம் ஆகியன துரை. மாலிறையனின் பிற காப்பியங்களாகும்.

### கருத்துரை :

குற்றமே செய்தாலும் முழுமையாக மன்னியுங்கள். முழுவதும் குற்றமாக இருந்தாலும் குற்றங்களை ஒதுக்கி மன்னியுங்கள். அடிமை கூட ஆண்டவனின் அன்புக்கு உட்பட்டவன். அப்படியிருக்க நீ மனிதனை அடிமையாக்கி துன்புறுத்தலாமா? என்று துரை. மாலிறையன் இயம்புகிறார்.

©KTBS Not to be republished

## பயிற்சி

**ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) நபிகள் நாயகம் நூலின் ஆசிரியர் யார் ?

2) எதை மன்னிக்க வேண்டும் ?

3) யாரை வதைக்கக் கூடாது ?

**ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) துரை. மாலிறையன் இயம்புவதைக் கூறுக

**கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1) குறைவின்றி ....................

2) அடிமை கூட ஆண்டவன் .............

3) அடிமை என்று மாந்தனை ................ வேண்டும்.

**செயல்முறை :** நாளிதழ்களில் வெளிவரும் (ஞாயிறுமலர்) இசுலாமியக் கதைகளைப் படித்துக் கூறுக.

©KTBS Not to be republished

# 3. இயேசு காவியம்

## உவமை வழிச் செய்தி

“நல்ல நிலத் தின்மீது விழுந்த வித்து
நாள்தோறும் அறுவடைக்கு நிற்கும் சொத்து
சொல்லுகின்றேன் அவற்றினிலும் பதர்கள் உண்டு
சோலையிலே இருக்கின்ற புதர்கள் போலே !
வல்லவிதை நூற்றுக்கு நூறும் உண்டு
வரவினிலே சரிபாதி காலும் உண்டு !
நல்லசெவி உள்ளோர்கள் கேட்டுக் கொள்க
நாமிதனைச் சொல்லுகிறோம், என்றார் இயேசு !

- பாவரசு கண்ணதான்

**நூல் குறிப்பு :**

இப்பாடல் கவியரசு கண்ணதாசன் எழுதிய இயேசு காவியம் என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூலின் ‘உவமை வழிச்செய்தி’ என்னும் தலைப்பின் கீழ் இப்பாடல் வந்துள்ளது.

**ஆசிரியர் குறிப்பு :**

கவியரசு கண்ணதாசன் இராமநாத புரம் மாவட்டத்தில் உள்ள சிறுகூடற்பட்டி என்னும் ஊரில் பிறந்தார். இயற்பெயர் முத்தையா. சாத்தப்பச் செட்டியார் – விசாலாட்சி ஆச்சியாரின் மகன், திரைப்படங்களுக்குப் பாடல் எழுதிய சிறந்த கவிஞர். தமிழ்நாடு அரசவைக் கவிஞராக இருந்தவர். இவர் எழுதிய கவிதைகள் அனைத்தும் கண்ணதாசன் கவிதைகள் என்னும் பெயரில் நூலாக வந்துள்ளது. இவர் காலம் **24.6.1927 - 17.10.1981**

**அருஞ்சொற்பொருள் :**

பதர் - உள்ளீடற்றது, புதர் - களை

©KTBS Not to be republished

## பயிற்சி

**ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) அறுவடைக்குரிய சொத்து எது ?

2) கவிஞர் புதர்களை எதற்கு உவமித்துள்ளார் ?

**ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

உவமை வழியாகக் கவிஞர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து வரைக.

**செயல்முறை :** விவிலியக் கதைகளைக் கேட்டறிந்து கூறுக.

©KTBS Not to be republished

# I. (ஆ) மொழி வாழ்த்து

## தமிழ்மொழி வாழ்க !

தமிழ் மொழி வாழ்க !

தமிழினம் வாழ்க !

தமிழ்நாடு வாழ்கவே வாழ்க !

தொன்மைத் தமிழ்மொழி ! முன்மைத் தமிழ்மொழி !
தூய்மையும் தாய்மையும் வாய்ந்த மொழி !
மென்மைத் தமிழ்மொழி ! மேன்மைத் தமிழ்மொழி !
மேவும் இலக்கியம் நிறைந்த மொழி !

(தமிழ்)

இளமைத் தமிழ்மொழி ! இனிமைத் தமிழ்மொழி !
எளிமையும் இயன்மையும் தோய்ந்தமொழி !
வளமைத் தமிழ்மொழி ! வன்மைத் தமிழ்மொழி !
வாழ்வியல் (அறவியல்) ஆய்ந்தமொழி !

(தமிழ்)

அறிவுத் தமிழ்மொழி ! அழகுத் தமிழ்மொழி !
ஆன்றமெய் யறிவியல் சான்றமொழி !
செறிவுத் தமிழ்மொழி ! செம்மைத் தமிழ்மொழி !
செப்பமும் நுட்பமும் சேர்ந்தமொழி !

(தமிழ்)

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்

©KTBS Not to be republished

### நூல் குறிப்பு :

இப்பாடல் பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்களின் தொகுதியான ‘கனிச்சாறு’ என்னும் நூலிலிருந்து எடுக்கப் பட்டுள்ளது. இது பிறமொழி கலவாது தூய தமிழ்ச் சொற்களால் எழுதப்பட்ட தமிழ்ப் பாடலாகும்.

### ஆசிரியர் குறிப்பு :

பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை மாணிக்கம். இவர் *10.3.1933* - இல் சேலத்தில் பிறந்தார். தந்தை துரைசாமி, தாயார் குஞ்சம்மாள் ஆவார். தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் ஆகிய இதழ்கள் மூலம் மொழித் தூய்மையுடன் தமிழ்த் தொண்டாற்றினார். இவரின் பேச்சும், எழுத்தும், பாவாற்றலும் கண்டு தமிழுலகம் இவரை “பாவலரேறு பெருஞ்சித்திரனார்” என்று அழைக்கும்.

### அருஞ்சொற்பொருள் :

தொன்மை - பழமை, முன்மை - முதல், மேவும் - விரும்பும், இயல் - தகுதி, வன்மை - உறுதி, ஆன்றமெய் - மாட்சிமை, செப்பம் - கூர்மை, நுட்பம் - நுணுக்கம்.

### கருத்துரை :

தமிழ்மொழி முதலில் தோன்றியதும் பழமையானதும் மென்மையும் சிறப்பும் நிறைந்த மொழி, அனைவரும் விரும்பும் இலக்கியங்கள் நிறைந்த மொழி. இளமையாகவும் இனிமையாகவும் விளங்கும் மொழி. எளிமையும் தகுதியும் வாய்ந்த மொழி. வளமையானதும் உறுதி மிக்கதும் வாழ்வியல் கருத்துகளையும் கொண்டுள்ள மொழி. அறிவும், அழகும், மாட்சிமை சார்ந்த செம்மையான மொழி தமிழ்மொழி. கூர்மையும் நுணுக்கமும் நிறைந்த மொழி நம் தமிழ்மொழி என்று பெருஞ்சித்திரனார் தமிழின் பெருமைகளை எடுத்தியம்புகிறார்.

©KTBS Not to be republished

## பயிற்சி

**எதிர்ச்சொல் தருக :**

பழமை ; எளிமை ; உறுதி ;

**I. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) மொழி வாழ்த்து பெருஞசித்திரனார் தனிப்பாடலின் எந்த தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது ?

2) பெருஞ்சித்திரனார் எவ்வாறு போற்றப்படுகிறார் ?

3) பெருஞ்சித்திரனார் தொண்டாற்றிய இதழ்கள் இரண்டைக் கூறுக.

4) இளமையும் இனிமையுமான மொழி எது ?

**II. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) பெருஞ்சித்திரனார் தமிழ் மொழியை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

**செயல்பாடு : கீழ்வரும் பாடலைப் பாடிப் பழகுக :**

எ ங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி
ஏழு கடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியின்றி கோடியண்டம் - அந்தத்
தாயின்கைப் பந்தென ஓடுமடா - ஒரு
கர்ச்சனை செய்வதும் கண்டதுண்டோ - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா.

- பாரதிதாசன்

**செயல்முறை :** தமிழ்மொழியின் சிறப்பினைக் குறித்துக் கட்டுரை ஒன்றை எழுதுக.

©KTBS Not to be republished

# I. (இ) நாட்டு வாழ்த்து

## பாரத நாடு

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு

நன்மையி லே உடல் வன்மையிலே - செல்வப்
பன்மையி லேமறத் தன்மையிலே

பொன்மயி லொத்திடு மாதர்தம் கற்பின்
புகழினி லேஉயர் நாடு - இந்தப்
(பாருக்)

ஆக்கத்தி லேதொழில் ஊக்கத்திலே - புய
வீக்கத்தி லேஉயர் நோக்கத்திலே

காக்கத் திறல்கொண்ட மல்லர்தம் சேனைக்
கடலினி லேஉயர் நாடு - இந்தப்
(பாருக்)

- பாரதியார்

©KTBS Not to be republished

**நூல் குறிப்பு :**

பாரதியார் கவிதைகள் எளிமையும், இனிமையும் கொண்டவை. சமூக நேயமும், சமத்துவப் பார்வையும் நிறைந்தவை, நாட்டுப்பற்று, விடுதலை வேட்கை, பெண்ணுரிமை ஆகிய கருத்துக்களை உள்ளடக்கியவை. இப்பாடல் பாரதியார் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு :**

சுப்ரமணிய பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர். இவர் 11-12-1882 - இல் எட்டையபுரத்தில் சின்னசாமி

ஐயர் -இலக்குமி அம்மையாருக்கு மகனாக பிறந்தார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டார். 'சுதேசமித்திரன்' நாளிதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். மக்களிடையே தம் பாடல்களால் விடுதலை உணர்வைத்தட்டி எழுப்பினார். இவரது பாடல்கள் 'பாரதியார் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன.

***அருஞ்சொற்பொருள் :***

பார் - உலகம், வன்மை - வலிமை, மறம் - வீரம், மல்லர் - வீரர், சேனை -படை, திறல் - வலிமை.

***கருத்துரை :***

உலகத்திலே நல்லநாடு எங்கள் பாரதநாடு. பாரத நாட்டு மக்கள் உடல் வலிமையும் செல்வச் சிறப்பும் வீரத் தன்மையும் உடையவர்கள். பொன்மயில் போன்ற பெண்கள் கற்பில் உயர்ந்தவர்கள். அதுமட்டுமல்ல ; தொழில் பெருக்கத்தில் ஊக்கம் உடையவர்கள். நாட்டைப் பாதுகாக்கும் பொருட்டு கடலை ஒத்த தோள் வலிமை மிகுந்த படை வீரர்களைக் கொண்ட நாடு நம் நாடு. என்று பாரதியார் நாட்டின் பெருமைகளைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

***பயிற்சி***

**I. *எதிர்ச்சொல் தருக :***

நன்மை ; செல்வர் ; வீரன் ; புகழ் ; உயர்வு

**II. *ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :***

*1)* பாடப்பகுதியிலுள்ள நாட்டு வாழ்த்துப் பாடலைப் பாடியவர் யார்?

©KTBS Not to be republished

2) பாருக்குள்ளே நல்ல நாடு எது ?

**III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

பாரத நாட்டின் சிறப்புகளாகப் பாரதியார் கூறுவன யாவை?

**IV. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

பாருக்குள்ளே நல்லநாடு - எங்கள் பாரத நாடு.

**IV. எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :**

தன்மை - தண்மை

புகழ் - புகல்

மல்லர் - மள்ளர்

மரம் - மறம்

©KTBS Not to be republished

## II. அறவுரை

மனிதப் பிறப்பு இறைத் தன்மையும், விலங்குத் தன்மையும் கலந்தது. உலகில் உள்ள நன்மை தீமைகளை அறிந்து, தீமையை நீக்கி நன்மையை மேற்கொள்ளும் போது மனிதன் இறை இயல்பைப் பெறுகின்றான்.

மனிதன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய நல்ல அறங்களையும், நீதிகளையும் பல நூல்கள் கற்பிக்கின்றன. அவற்றில் சிறப்பான இடத்தைப்பெற்று இருப்பவை திருக்குறள், நாலடியார், சிறுபஞ்ச மூலம், நான்மணிக் கடிகை, இனியவை நாற்பது, மூதுரை, நல்வழி போன்ற நூல்கள் ஆகும்.

©KTBS Not to be republished

# 1. திருக்குறள்

## அன்புடைமை

1. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

2. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம்.

3. அன்பின் வழியது உயிர்நிலை அ--ஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

## விருந்தோம்பல்

4. இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

5. செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

6. மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

## கல்வி

7. கண்ணுடயர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணு டையர் கல்லா தவர்.

8. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

9. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

©KTBS Not to be republished

10. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

11. இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.

12. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

**நூல் குறிப்பு :** நீதி நூல்களுள் முதன்மையானதாக விளங்கும் திருக்குறள் 'உலகப் பொதுமறை' எனப் போற்றப்படும் சிறப்பு உடையது. இந்நூல் 1330 குறள் வெண்பாக்களை உடையது. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உறுதிப்பொருள்களையும் விளக்குவதால் இந்நூலினை 'முப்பால்' எனவும் கூறுவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. எல்லாச் சமயத்தார்க்கும் பொதுநூலாக விளங்குகிறது.

**ஆசிரியர் குறிப்பு :** திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். உலக மக்கள் வாழ்வு உயர நல்லறம் கூறி வழிகாட்டிய சிந்தனையாளர். இவருக்குத் தெய்வப்புலவர், பொய்யில் புலவர், மாதானு பங்கி, முதற்பாவலர், செந்நாப் போதார் முதலான வேறு பெயர்களும் உண்டு. இவரது காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டு என்பர்.

### அருஞ்சொற் பொருள் :

என்பு - எலும்பு, உடம்பு ; ஓம்பி - பாதுகாத்து ; வேளாண்மை பொருட்டு - விருந்தினரைப் பேணிப் பாதுகாத்தல் பொருட்டு ; வானத்தவர் - வானுலகத் தேவர் ; மோப்ப - முகர்ந்து பார்க்க ; அனிச்சம்-மென்மை யான மலர் ; முகம் திரிந்து நோக்க - முகம் மாறுபட்டு நோக்க ; தொட்டனைத்து - தோண்டுகின்ற அளவிற்கு;

©KTBS Not to be republished

ஒருமை - ஒரு பிறப்பு ; எழுமை - ஏழு பிறப்பு ; ஏமாப்பு - புகழ். நாண் - பழிபாவங்களுக்கு நாணுதல் ; ஒப்புரவு - எல்லாரிடமும் ஒத்து வாழ்தல் ; ஊழி - உலகின் முடிவுக் காலம் ; ஆழி - கடல்.

**கருத்துரை :**

1. பிறரிடம் அன்பு இல்லாதவர் எல்லாப்பொருளும் தமது என்ற உரிமையுடன் வாழ்வர் ; அன்பு உடைவர் தமது உடம்பையும் பிறருக்கே உரிமையாக்கி வாழ்வர்.

2. எலும்பு இல்லாத உயிர்களை வெயில் காய்ந்து வருத்துவது போல, அன்பு இல்லாத உயிர்களை அறம் வருத்தும்.

3. அன்பின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலின் இயல்பாகும்; அன்பு இல்லாதவரின் உடம்பு எலும்பைத் தோல் போர்த்தியது போன்றது ஆகும்.

4. இல்லத்தில் இருந்து பொருட்களைக் காத்து வாழ்க்கை நடத்துவது எல்லாம், விருந்தினரைப் போற்றி அவர்களுக்கு உதவி செய்வதற்கே ஆகும்.

5. தம் வீட்டிற்கு வந்த விருந்தினரைப் போற்றி அனுப்பி, வரும் விருந்தினரை எதிர்நோக்கி இருப்பவன், வானுலகில் உள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினன் ஆவான்.

6. மென்மையான அனிச்ச மலர் முகர்ந்து பார்த்த அளவிலேயே வாடி விடும். ஆனால் விருந்தினர் முகம், மாறுபட்டு நோக்கிய உடன் வாடி விடும்.

7. கண் உடையவர் என்று சிறப்பித்துக் கூறப்படுவர் கற்றவரே ஆவர். கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவார்.

©KTBS Not to be republished

8. மணல் நிறைந்த கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும்; அது போல மாந்தர்க்குக் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

9. ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வியானது, அவனுக்கு ஏழு பிறவியிலும் தொடர்ந்து பாதுகாக்கும் சிறப்பு உடையது.

10. அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்து பண்புகளும் சால்பு என்னும் பாரத்தைத் தாங்கும் தூண்கள் ஆகும்.

11. தமக்குத் தீங்கு செய்தவருக்கு, அவர் விரும்பும் இனிய செயல்களைச் செய்ய வேண்டும்; அவ்வாறு செய்யவில்லையானால் சான்றோர்களின் சால்புக் குணத்தால் பயன் இல்லை.

12. சான்றோர்களுக்கு உரிய சால்பில் கடல் போன்றவர் என்று போற்றப் படுபவர், உலகமே மாறினாலும், தம் குணத்திலிருந்து மாறுபடாமல் இருப்பர்.

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1) திருவள்ளுவர் வாழ்ந்த காலம்
(கி.மு. முதலாம் நூற்றாண்டு, கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டு)

2) திருக்குறளில் அமைந்துள்ள மொத்த அதிகாரங்கள்
(172, 133, 258)

3) திருக்குறள்
(பக்தி இலக்கியம், காப்பியம், அறநூல்)

©KTBS Not to be republished

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1) அன்பிலார் எல்லாம் ....................

2) அன்பின் வழியது ....................

3) முகந்திரிந்து நோக்கக் குழையும் ....................

4) கண்ணுடையர் என்போர் ..................

5) ................. கற்றனைத் தூறும் அறிவு.

## III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :

1) அன்பு இல்லாதவரை அறம் என்ன செய்யும் ?

2) அன்பு இல்லாதவர் உடம்பு எப்படிப்பட்டது ?

3) வானத்தவருக்கு நல்விருந்து ஆகுபவன் யார் ?

4) கல்லாதான் முகத்திலிருக்கும் கண்களை வள்ளுவர் என்னவென்று கூறுகிறார் ?

## IV. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக:

1) அன்புடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் யாவை ?

2) விருந்தோம்பலின் சிறப்பு யாவை ?

3) கல்வியின் சிறப்பை வள்ளுவர் எவ்வாறு விளக்குகிறார் ?

4) சான்றாண்மை பற்றிய வள்ளுவர் கருத்துகளை எழுதுக.

## V. இடம் சுட்டி விளக்குக :

1) என்பும் உரியர் பிறர்க்கு.

2) நல்விருந்து வானத்தவர்க்கு.

3) ஐந்து சால்பூன்றிய தூண்.

©KTBS Not to be republished

## மொழிப்பயிற்சி

**VI. *1)* சேர்த்து எழுதுக :**

தமக்கு + உரியர் ; முகம் + திரிந்து

கண் + உடையர் ; புண் + உடையர்

***2)* பிரித்து எழுதுக :**

அன்பிலார் ; என்பிலதனை ; விருந்தோம்பி

***3)* எதிர்ச்சொல் தருக :**

அன்பிலார் ; கற்றார் ; வாய்மை.

***4)* வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

அன்புடையார் ; வேளாண்மை ; கண்ணுடையவர் ; மணற்கேணி ; சான்றாண்மை.

***5)* எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :**

குழை, குலை

நாண், நான்

**VII. கீழ்வரும் குறள்வெண்பாக்களில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**

*1)* என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம் (உவமையணி)

*2)* மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (எடுத்துக்காட்டு உவமையணி)

*3)* தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு (எடுத்துக்காட்டு உவமையணி)

©KTBS Not to be republished

# 2. பழமொழி

## கொடுக்கக் கொடுக்கப் பெருகும்

*1)* இரப்பவர்க்கு ஈயக் குறைபடும் என் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ - பரப்பில்
துறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப !
இறைதொறும் ஊறும் கிணறு.

*2)* கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்
பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர் - தெற்ற
அறைகல் அருவி அணிமலை நாட !
நிறைகுடம் நீர்தளும்பல் இல்.

- முன்றுறையரையனார்.

**நூல் குறிப்பு :** வாழ்க்கை தரும் பாடத்தை வேறு எதுவும் தர முடியாது. அவ்வனுபவம் காரணமாக எழுதுவதே பழமொழி. இதை முதுமொழி என்றும் சொல்லலாம்.

சிறந்த பழமொழிகளில் ஒன்றை ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் அமைந்திருக்கின்ற காரணத்தால் இந்நூலுக்குப் பழமொழி என்ற பெயர் அமைந்தது. இந்நூல், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறள், நாலடியாருக்கு அடுத்த சிறப்பினை உடையது.

**ஆசிரியர் குறிப்பு :** இந்நூலின் ஆசிரியர் முன்றுறையரையனார் என்பவர் ஆவர். இவர் அரச மரபினில் வந்தவர். கி.பி. 5 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவராகக் கருதப்படும் இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர் ஆவர்.

©KTBS Not to be republished

***அருஞ்சொற்பொருள் :*** *இரப்பவர் - யாசிப்பவர் ; ஈய-கொடுக்க; கரப்பவர் - மறைத்து வைப்பவர் ; தோணி-படகு ; தூங்கு நீர்-வழியும் நீர், பொச்சாந்து - அறிவின்மை - தெற்ற - தெளிந்த*

***கருத்துரை :***

*1. கடற் பரப்பிலே, துறைமுகம் நோக்கிச் செல்வனவும், வருவனவும் ஆன படகுகள் உலாவிக் கொண்டிருக்கிற நீர்ப் பெருக்கினை உடைய கடற்கரை நாட்டுத் தலைவனே ! 'தம்மிடம் வந்து யாசித்தவர்க்கு ஏதாவது ஒன்றைக் கொடுப்பதால் தம் செல்வம் குறைந்து விடும்' என்று எண்ணித் தம் செல்வத்தை மறைத்து வைப்பவர், கிணற்று நீரை இறைத்தால் தான் பெருகும் என்று உண்மையை அறிய மாட்டார்களா ?*

*2. அருவிகள், பாறைகள் மீது விழுந்து ஒலி செய்யும் அழகிய மலை நாடனே ! கற்க வேண்டிய நூல்களைக் கற்று உணர்ந்தவர்கள் கண்ட அடக்கமே உண்மையான அடக்கம் ஆகும். கற்று அறியாதவர்கள் அறியாமையால், தம்மை எப்போதும் புகழ்ந்து பேசிக்கொண்டு இருப்பார்கள். நிறை குடம் நீர்தளும்புவது இல்லை ; குறைகுடம் கூத்தாடும் என்பதைப் போன்றதே இவர்கள் செயல்.*

### ***பயிற்சி***

**I. *சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :***

*1) பழமொழியின் ஆசிரியர் யார் ?*

*(கம்பர் ; வள்ளுவர் ; முன்றுறையரையனார்)*

*2) இரப்பவர் என்ற சொல்லின் பொருள் என்ன ?*

*(செத்தவர் ; யாசிப்பவர் ; வாழ்பவர்)*

©KTBS
Not to be republished

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1) இரப்பவர்க்கு ஈயக் ................. படும்.

2) இறை தொறும் ஊறும் .................

3) கற்றறிந்தார் கண்ட .................

4) ................. நீர்தளும்பல் இல்.

**III. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) பிறருக்குக் கொடுப்பதால் செல்வம் குறையுமென எண்ணுபவர் யார் ?

2) கிணற்றின் தன்மை யாது ?

3) கற்றறிந்தார் கண்ட பண்பு எது ?

4) நிறை குடம் எப்படிப்பட்டது ?

**IV. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) 'இறைதொறும் ஊறும் கிணறு' - பழமொழி விளக்கும் கருத்து யாது ?

2) நிறைகுடம் நீர்தளும்பல் இல் - என்ற பழமொழியை விளக்குக.

**V. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) கற்றறிந்தார் இயல்பை முன்றுறையரையனாரின் பழமொழி மூலம் விளக்கும் கருத்தை எழுதுக.

**VI. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

1) 'இரப்பவர்க்கு ஈயக் குறைபடும்'.

2) அறியாதார் பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பர்.

©KTBS Not to be republished

## ஆ. மொழிப்பயிற்சி :

**VII. *1)* சேர்த்து எழுதுக :**

ஈய + குறைபடும் ; புகழ்ந்து + உரைப்பார்.

***2)* பிரித்து எழுதுக :**

கண்டறியார் ; கற்றறிந்தார் ; புகழ்ந்துரைப்பார்.

***3)* எதிர்–ச்சொல் தருக :**

இரப்பவர் × ................ ; ஈய × ................ ;

அடக்கம் × ................ ; புகழ்ந்து × ................ ;

நிறைகுடம் × ................

***4)* வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

குறைபடும் ; புகழ்ந்துரைப்பார்

***5)* எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறு படுதல் :**

இரப்பவர் - இறப்பவர்

இறை - இரை

புகழ் - புகல்

©KTBS Not to be republished

# 3. நல்வழி

1. புண்ணியம் ஆம் பாவம்போம் போனநாள் செய்தவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்தபொருள் எண்ணுங்கால்
ஈதுஒழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும்
தீதுஒழிய நன்மை செயல்.

2. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றோ - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

***நூல் குறிப்பு :*** எளிய தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ள இந்நூலில் 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்பது போன்ற சிறந்த கருத்துக்கள் கூறப்பெற்றுள்ளன. வாழ்க்கைக்கு வேண்டிய நல்ல வழிகளைக் கூறுகின்றமையால் நல்வழி என்ற சிறப்புப் பெயரைக் கொண்டது. கடவுள் வாழ்த்து நீங்கலாக நாற்பது வெண்பாக்களால் இயற்றப்பெற்றது.

***ஆசிரியர் குறிப்பு :*** நல்வழி என்ற நூலை இயற்றியவர் ஔவையார் ஆவார். இவரது காலம் 16 ஆம் நூற்றாண்டு ஆகும். ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன் ஆகிய அற நூல்களையும் எழுதியவர் இவரே ஆவர்.

***அருஞ்சொற் பொருள் :*** புண்ணியம் ஆம் - புண்ணியம் ஆகும், போம் - போகும் ; விழும் - அழியும் ; பழுது - துன்பம் ; பணி - வேலை, தொழில்.

***கருத்துரை :***

1. புண்ணியம் செய்வது ஆக்கத்தைத் தரும் ; பாவத்தைப் போக்கும். முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களே

Not to be republished ©KTBS

மண்ணில் பிறந்த மக்களுக்குத் தேடி வைத்த பொருள்கள் ஆகும். ஆராய்ந்து பார்த்தால், அனைத்து மதத்தாரும் சொல்லுவது புண்ணியம் பாவம் தவிர வேறெதுவும் இல்லை. எனவே தீமையை நீக்கி, நன்மையையே செய்க.

*2.* ஆற்றங்கரையில் உயர்ந்து வளர்ந்துள்ள மரமும், அரசனும் அறியுமாறு பெற்ற பெருமை மிக்க வாழ்வும் ஒரு நாள் விழுந்து விடும். ஆனால், உழுது பயிர் செய்து உண்டு வாழ்வதே உயர்வானது ; ஒப்பற்றது. பிற தொழில்களுக்குத் துன்பங்கள் வரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### பயிற்சி :

**I.** கோடிட்ட இடத்தை நிரப்புக :

*1)* தீதுஒழிய ................ செயல்.

*2)* .............. வாழ்வதற்கு ஒப்பில்லை

**II.** ***ஒரு வாக்கியத்தில் விடையளி :***

*1)* நல்வழியை இயற்றியவர் யார் ?

*2)* புண்ணியம் செய்வது எதைத் தரும் ?

*3)* உலகில் எந்தத் தொழில் உயர்வான தொழில் ?

**III.** ***மூன்று வாக்கியங்களில் விடையளி :***

*1)* நல்வழி - குறிப்பு வரைக.

*2)* புண்ணியம் பற்றி ஔவையார் கூறும் கருத்துக்கள் யாவை?

**IV.** ***ஐந்து வாக்கியங்களில் விடையளி :***

*1)* தீமையை நீக்கி, நன்மையையே செய்ய வேண்டும் என் பதற்கு ஔவையார் கூறும் காரணங்கள் யாவை ?

©KTBS Not to be republished

2) உழுதுண்டு வாழ்தலின் சிறப்பை ஔவையார் தமது நல்வழிப்பாடல் வழியாக எவ்வாறு விளக்கியுள்ளார் ?

**V. இடம்சுட்டிப் பொருள் விளக்குக :**

1) புண்ணியம் ஆம் பாவம்போம்

2) பழுதுண்டு வேறோர் பணிக்கு

**மொழிப்பயிற்சி :**

**VI. 1) சேர்த்து எழுதுக :**

ஈது + ஒழிய ; தீது + ஒழிய ; உழுது + உண்டு.

**2) பிரித்து எழுதுக :**

வேறில்லை ; அரசறிய ; பழுதுண்டு ; வேறோர்.

**3) எதிர்ச் சொல் தருக :**

புண்ணியம் ; நன்மை ; வாழ்வு ; ஏற்றம்.

**4) வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

புண்ணியம் ; செயல் ; வாழ்வு ; ஒப்பில்லை.

**5) எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :**

வாழ்
வாள்
வால்

பணி
பனி

கரை
கறை

©KTBS
Not to be republished

## III. தொடர்நிலைச் செய்யுள்

# I. நளவெண்பா

### அன்னம் விடுதூது

மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய - நன்னுதலும்
தன்னாடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னாடல் சொல்லென்றாள் ஈங்கு. 1

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்தோள் வலியும் - நிறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேல் தேர்வேந்தர் ஒ ப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு 2

### ஆவி உவந்தளித்தாய்

வாவியுறையும் மடவனமே என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால் - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து. 3

### சுயம்வர நாள்

மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைகென்றியம்பினான் - பைங்கமுகின்
கூந்தல்மேற் கங்கைக் கொழுந்தோடும் நன்னாடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு. 4

### எங்கும் இனிதிருந்தார்

புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமும் இனிதுறைந்தார் - தெள்ளரிக்கண்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு 5

Not to be republished ©KTBS

### நல்லூயிர் வாழும் நகர்

சடைச்செந்நெல் பொன்விளைக்கும் தந்நாடு பின்னாகக்
கடல்தானை முன்னாகக் கண்டான் - அடற்கமைந்த
வில்லியரும் பொன்தாம வீமன் திருமகளாம்
நல்லுயிரும் வாழும் நகர். 6

### மாலை குறிந்து எழுந்தார்

மால் வரையை வச்சிரத்தால் ஈர்ந்தானும் வானவரும்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார் - சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 7

### மண்டபம் புகுந்தாள்

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள் - மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கை வாய்ப் போவதே போன்று. 8

### தனிக்கொடிக்குக் காட்டினாள்

மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென்றியலணங்கு - முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர் வேந்தர் தம்மைத் தெரிந்து 9

### நளனுருவில் தேவர்கள்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் - பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்று
ஊசலாடுற்றாள் உளம். 10

©KTBS Not to be republished

## அருள் என்றாள்

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியான் ஆகிற் கடிமாலை - அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே கொண்டு 11

## நளனை அறிந்தாள்

கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால் - எண்ணி
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்தன்னை ஆங்கு. 12

## பொன்மாலை சூட்டினாள்

விண்ணரசர் எல்லாரும் வெட்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலம் களிகூர - மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 13

## முகம் வெளுத்தனர்

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே - ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 14

## செம்மாந்து சென்றான்

மல்லல் மருகின் மடநா குடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து - மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன். 15

©KTBS
Not to be republished

**நூல் குறிப்பு :**

நள மன்னன் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது நள வெண்பா. காட்டில் வாழ்ந்த பாண்டவர்களுக்கு யாசர் கூறிய நளன் சரித்திரத்தை நற்கதையாக்கி நயம்பட வெண்பா யாப்பில் புகழேந்தியார் பாடியுள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு :**

நளவெண்பா புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்டது. இவர் ஒரே ஒரு நூல் எழுதி ஓங்கு புகழ் பெற்றவர். சோழ நாட்டிலுள்ள களத்தூரில் பிறந்தவர். இவர் சந்திரன் துவார்க்கி என்ற வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர். பாக்களில் வெண்பா பாடுவது மிக கடினம். ஆனால் வெண்பா கொண்டு தீஞ்சுவை காப்பியம் படைக்க முடியும் என நிரூபித்தவர் புகழேந்தி. எனவே "வெண்பாவிற்கு புகழேந்தி" எனப் புகழப் பெறுகிறார். இவரது காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

**அருஞ்சொற்பொருள் :** திகழ்கின்ற-விளங்குகின்ற ; நுதல் - நெற்றி; மறம் - வீரம் ; ஞாலம் - உலகம் ; வாவி - குளம் ; ஆவி - உயிர் ; கா - சோலை ; அறைக - சொல்லுக ; இயம்புதல் - சொல்லுதல் ; கமுகு - பாக்கு ; பொய்கை - குளம் ; அணங்கு - பெண் தெய்வம் ; காசினி - பூமி / நிலம், தார் - மாலை ; சேடி - பணிப்பெண் ; மாசு - குற்றம் ; களி - மகிழ்ச்சி ; மருகு - தெரு ; மல்லல் - நெருங்கிய ; மழவிடை - பசு; நாகு - கன்று.

**கருத்துரை**

1) மன்னனாகிய நளன் தூதாக அனுப்பிய அழகிய உருவ எழிலுடன் விளங்குகின்ற அந்த அன்னப் பறவை, விதர்ப்ப நாட்டிற்குச் சென்றது. கன்னியான தமயந்தியின் அருகிலும்

©KTBS Not to be republished

சென்றது. நறிய நெற்றியை உடைய அவளும் விளையாடுதலை விடுத்துத் தனியிடம் சேர்ந்தாள். அங்கு, அந்த அன்னத்தை நோக்கி, இங்கு எதற்காக வந்தாய் ? சொல்க ! என்றாள்.

2) ‘அறநெறிகள் நிறைந்த நெஞ்சமும், அருள் ஒழுகும் கண்களும், வீரம் மிக்க வலிமையான தோள் ஆற்றலும் மிக்கவன் நளன். அழகிய இடமான இவ்வுலகில் அந்த நளனுக்குச் செங்கண்ணனாகிய திருமாலே ஒப்பாக மாட்டான். அவ்வாறிருக்க பிறவேந்தர்கள் ஒப்புடையவர் ஆவார்களா ?’ என்று அன்னம் கூறியது.

3) ‘நாடாளும் வேந்தனான விதர்ப்பனின் மகள் தமயந்தி காதலால் துடித்தாள்’. மலர்ப் பொய்கையில் வாழும் இளமையான அன்னங்களே ! பூஞ்சோலையில் இருப்பதாக நீ கூறிய அந்தத் தேர் வேந்தனுக்கு என்னுடைய இந்த நிலைமையை எடுத்துச் சொல்லு வாயாக ! அவ்வாறு சொல்வாயானால் என்னுடைய உயிரை எனக்கு அளித்தது போலாகும்’ என்றாள்.

4) பசுமையான பாக்கு மரங்களின் கூந்தற் பாளைகளின் மேலாகக் கங்கை ஆற்றின் வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது. அவ்வாறு நன்மை மிக்க நாட்டிற்குத் தலைவன் விதர்ப்பன். ‘தமயந்தியின் சுயம்வரம் இன்றிலிருந்து ஏழாவது நாள்’ என்ற செய்தியைப் பிறநாட்டு மன்னர்களிடம் சொல்லத் தூதனுப் பினான். இச்செய்தியை ஊரார்க்கு முரசறைந்து தெரிவிக்குமாறும் ஆணையிட்டான்.

5) போரில் வெற்றி கொண்டவேலை உடையவன் விதர்ப்பன். அவன் மகள் தமயந்தி செவ்வரி படர்ந்த கண்களை உடையவள் ; திருமகள் போன்ற அழகு உடையவள் ; பொன் போன்ற அழகிய உடல் உடையவள் அவளைத் தம் மனத்தே கொண்டவராகிப்

©KTBS Not to be republished

பறவைகள் தங்கும் சோலைகளினும், தாமரை பூத்த குளங்களின் கரைகளிலுமாக மன்னர்கள் பலரும் வந்து தங்கி இருந்தார்கள்.

6) நெற்பயிர்கள் அடர்ந்து பொன் போன்ற நெல் மணிகளை விளைவிக்கின்ற நாடு நிடத நாடு. அந்நாடு பிற்பட்டுப் போகவும், கடல் போன்ற பெரும்படை முன்னே சென்று கொண்டிருக்கவும், போரிட வந்த வில் வீரர்களும். அழகிய மலர் மாலை அணிந்த வீமராசனின் திருமகளாம் தன் உயிர் போன்றவளுமான தமயந்தி வாழ்ந்திருக்கும் நகரத்தினை சென்று அடைந்தான்.

7) ஆணவத்தால் மயக்கம் கொண்டு மலைகளைத் தன் வச்சிராயுதப் படையினால் மலைகளின் சிறகினை அறுத்தவன் தேவேந்திரன். அவனுடன் பிற தேவர்களும் வந்தனர். இவர்கள் எல்லோரும் வளையல் அணிந்த தமயந்தியின் சுயம்வரத்தைக் காண, பெருமை மிக்க வானுலகை விடுத்து, விதர்ப்பனின் திருநகரான குண் டினபுரம் செல்ல மண்ணகம் நோக்கி மகிழ்வுடன் புறப்பட்டனர்.

8) மின்னல் போன்ற நிறத்தையுடைய சிவந்த கால்களையும், வெண்மையான சிறகுகளையும் உடைய அன்னம் செந்தாமரை பூத்த குளத்தை நோக்கிப் போவது போல, திருமகள் போன்ற இளமையான தமயந்தி, மன்னர்களின் கண்களாகிய செந்தாமரை மலர்கள் பூத்த சுயம்வர மண்டபத்தைச் சேர்ந்தாள்.

9) அழகிய அணங்கு போன்ற தோழி ஒருத்தி, அங்கு வந்திருந்த வேந்தர்கள் பற்றி அறிந்து கொண்டாள். அங்கு வந்திருந்த மன்னர்களின் குலச் சிறப்பும், பெயரும், வளநாடும் பற்றி, வெற்றிமிக்க வீமராசனின் ஒப்பற்ற கொடி போன்ற தமயந்திக்குக் கூறிக் கொண்டு வந்தாள்.

©KTBS Not to be republished

*10)* சுயம்வர மண்டபத்தில் இருந்த அரசரை எல்லாம் தோழி, சுட்டிக் காட்டி வந்தாள். அவர்களைத் தமயந்தியும் பார்த்தவாறே வந்தாள். தேவர்கள் நால்வரும் நளன் உருவில் வந்து அமர்ந்து இருந்தனர். மலர்சூடிக் குற்றமற்ற அழகிய கூந்தலை உடைய தமயந்தி, அவர்களைக் கண்டு மயங்கி நின்று விட்டாள். அவர்களுள் நளன் யாரென அறிய இயலாமல் மயங்கி நின்றாள்.

*11)* தன்னைச் சூழ்ந்த விதியின் காரணமாகத் தான் காதல் கொண்ட நளனைத் தன் மனத்தில் எண்ணிக் கொண்டாள். ‘ஒளிமிக்க மாலை அணிந்த வீமராசனின் உயர்குலத்தில் பிறந்த இயல்புடையவள் யானாகில், அன்று அன்னம் சொன்னவனை இன்று யான் மணமாலை சூட்ட எனக்கு அருள் வாயாக’ என்று தெய்வத்தை நோக்கி வணங்கினாள்.

*12)* நறுமணம் மிக்க தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவள் தமயந்தி. நளன் உருவில் இருந்தவர்களில், கண் இமைத்தலாலும், காலடிகள் நிலத்தில் படிதலாலும், பல வண்ண மலர்மாலை வாடுதலாலும் ஆராய்ந்து, உண்மையான நளனைக் கண்டு கொண்டாள்.’

*13)* மேலுலக வேந்தர்கள் நாணி மனம் சுளிக்கவும், அகன்ற பெரிய உலகம் மகிழ்வும், இவ்வுலக அரசர்கள் எல்லாம் மயக்கம் கொள்ளவும் திருமகள் போன்ற தமயந்தி, வெற்றி வேந்தனான நளனுக்குத் தன் கையில் இருந்த பொன்மாலையைச் சூட்டினாள்.

*14)* ஒளிவிடும் சிறந்த மாலை அணிந்தவனும், வேற்படை உடையவனும் நளன். இவன் வேல் போன்ற கண்கள் உடைய தமயந்தியின் சுயம்வர மாலையை அணிந்து அமர்ந்திருந்தான். அப்போது வலிமையான தோள்களை உடைய அங்கு இருந்த

Not to be republished ©KTBS

வேந்தர்களின் செந்தாமரை மலர் போன்ற முகங்கள் எல்லாம் வெண் தாமரை போன்று வெளிறித் தோன்றின.

*15)* நல்ல மலர்மாலை அணிந்தோனும், வேற்படை உடையவனுமான நளன் வளம் பொருந்திய வீதி வழியே, பசுவுடன் செல்லும் இளங்கன்று போலத் தமயந்தியுடன் பெருமையோடு ஊர்வலம் போனான்.

### பயிற்சி :

**I. சரியான விடையைத் தெரிவு செய்க :**

*1)* நளவெண்பாவை எழுதியவர்

அ) புகழேந்திப்புலவர் ஆ-) ஔவையார்

இ) திருத்தக்கதேவர் ஈ) இளங்கோவடிகள்

*2)* தமயந்தி தன் காதலுக்காகத் தூது விட்டது

அ) கிளி ஆ) புறா

இ) அன்னம் ஈ) மயில்

*3)* தமயந்தியின் சுயம்வரத்திற்கு நளன் உருவில் வந்தவர்கள்

அ) இராமன் ஆ) தருமன்

இ) தேவர்கள் ஈ) சீவகன்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

*1)* மால் வரையை ............... ஈர்ந்தான்.

*2)* மன்னர் ............... பூத்த மண்டபத்தே.

*3)* அன்னம் தான் சொன்னவளைச் சூட்டி ...............

*4)* விண்ணரசர் எல்லாரும் .............. மனம் சுளிக்க.

**III. ஒரு வாக்கியத்தில் விடையளி :**

*1)* நளன் தூதாக அனுப்பிய அன்னம் எந்த நாட்டிற்குச் சென்றது ?

©KTBS
Not to be republished

2) தமயந்தியின் சுயம்வரச் செய்தியை ஊரார்க்கு எவ்வாறு தெரிவித்தனர் ?

3) எந்தப் படையால் இந்திரன் மலைகளின் சிறகை அறுத்தான் ?

4) நளன் உருவில் வந்த தேவர்கள் எத்தனை பேர் ?

5) நளன் தமயந்தியுடன் வீதி வழியே எவ்வாறு சென்றான்?

**IV. *மூன்று வாக்கியத்தில் விடையளி :***

1) நளவெண்பா பற்றிக் குறிப்பு வரைக.

2) விதர்ப்ப நாட்டின் சிறப்புகளை எழுதுக.

3) தமயந்தி சுயம்வர மண்டபத்தை நோக்கி எவ்வாறு சென்றாள் ?

4) தமயந்தி தெய்வத்தை நோக்கி, எதற்காக வணங்கினாள்?

5) சுயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர்களின் எத்தகு சிறப்புகளைத்தோழி தமயந்தியிடம் கூறிக் கொண்டு வந்தாள் ?

**V. *ஐந்து வாக்கியங்களில் விடையளி :***

1) நளனின் சிறப்புகளாக அன்னம் கூறியவை யாவை ?

2) தமயந்தி யாருடைய மகள் ? அவளது அழகு நலன்களை விவரி.

3) சுயம்வர மண்டபத்தில் தமயந்தி மயங்கி நிற்கக் காரணம் என்ன ?

4) சுயம்வர மண்டபத்தில் அமர்ந்து இருந்த உண்மையான நளனைத் தமயந்தி எ    வ்வாறு அறிந்து கொண்டாள் ?

5) சுயம்வர மண்டபத்தில் இருந்த வேந்தர்களின் முகங்கள் வெளிறக் காரணம் என்ன ?

©KTBS Not to be republished

**VI.** ***பத்து வாக்கியங்களில் விடையளி :***

*1)* தமயந்தி நளனிடம் அன்னத்தைத் தூது விட்ட செய்தியை எழுதுக.

*2)* தமயந்தி – நளன் காதல் வெற்றி பெற்ற முறையை விளக்கி எழுதுக.

**VII.** ***இடம் சுட்டி விளக்குக :***

*1)* தேர்வேந்தற்கு என்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்.

*2)* புள்ளுறையும் சோலைகளும் பூங்கமல வாவிகளும் உள்ளும் புறமும் இனிதுறைந்தார்.

*3)* செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப் பொய்கைவாய்ப் போவதே போன்று.

*4)* மன்னவனைத் தன்மனத்தே கொண்டு

*5)* பொன்மாலை சூட்டினாள் பொன்.

**VIII.** ***1) சேர்த்து எழுதுக :***

*அறம் + கிடந்த ; கடல் + தானை ; முன் + நின்று ;*

*கண் + இமைத்தலால் ; திண் + தோள்.*

***2) பிரித்து எழுதுக :***

*அருகணைய ; நன்னுதல் ; உவந்தளித்தாய் ; என்றுரைத்தாள்; நன்னாடன் ; தந்நாடு ; விண்ணாடு ; சிறையன்னம் ; அருளென்றாள் ; வேற்கண்ணாள் ; மழவிடை*

***3) எதிர்ச்சொல் தருக :***

*ஈங்கு ; என்னுடைய ; உள்ளும்*

©KTBS Not to be republished

**4) வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

திண்டோள் ; உவந்து ; செந்நெல் ; மண்டபம் ;

மலர்மாலை ; மெல்லியலாள்.

**5) எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுடுதல் :**

அறம் குலம்
அறன் குளம்

புல் சூழ்
புள் சூல்

**கீழ்வரும் பாடலில் பயின்றுள்ள அணியை விளக்குக.**

மல்லல் மருகின் மடநா குடனாகச்
செல்லும் மழவிடைபோல் செம்மாந்து – மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலான் நளன். (உவமையணி)

©KTBS Not to be republished

## 2. மனோன்மணீயம்

மூன்றாம் அங்கம்
இரண்டாம் களம்
நேரிசை ஆசிரியப்பா

இடம் : ஊர்ப்புறம் ஒருசார்
காலம் : எற்பாடு
நடராசன் தனி மொழி

இதோ ஓ ! இக்கரை முளைத்த இச்சிறு புல்
சதாதன் குறிப்பொடு சாருதல் காண்டி
அதன்சிறு பூக்குலை யடி யொன்றுயர்த்தி

இதமுற தேன்துளி தாங்கி ஈக்களை
நலமுற அழைத்து நல்லூண் அருந்திப்
பலமுறத் தனதுபூம் பராகம் பரப்பித்து
ஆசிலாச் சிறுகா யாக்கி இதோ ! என்
தூசிடைச் சிக்கும் தோட்டியும் கொடுத்தே

"இவ்வயின் யாமெலாம் செவ்விதில் துன்னில்
தழைப்பதற் கிடமிலை சிறார் நீர் பிழைப்பதற்கு
ஏகுமின், புள் ஆ எருது அயத் தொருசார்
சிக்கி நீர் சென்மின் !" எனத்தன் சிறுவரைப்
புக்கவிட் டிருக்குமிப் புல்லின் பரிவும்

பொறுமையும் புலனுங் காண்போர் ; ஒன்றையும்
சிறுமையாச் சிந்தனை செயாது ஆங் காங்கு
தோற்றுபே ரழகும் ஆற்றல் சால் அன்பும்
போற்றுதல் குறிப்பிற் கேற்றதோர் முயற்சியும்
பார்த்துப் பார்த்துத் தம் கண் பனிப்பர்

ஆர்த்தெழு மன்பினால் அனைத்தையும் கலந்து தம்
என்பெலாம் கரைக்கு நல் இன்பம் திளைப்பர்
தமக் கூண் நல்கும் வயற்கும் யோகம்
எனப்பலர் கருதும் இச்சிறு வாய்க்கால்

©KTBS Not to be republished

செய்தொழில் எத்தனை விசித்திரம் ! ஐயோ !
அலைகடல் மலையா மலையலை கடலாப்
புரட்டிட வன்றோ நடப்பதிச் சிறுகால் !
பாரிதோ ! பரற்களை நெறு நெறென்றரைத்துச்
சீரிய தூளியாத் தெள்ளிப் பொடித்துத்
தன் வலிக் கடங்கிய மண்கல் புல்புழு

இன்னதென்றில்லை ; யாவையும் ஈர்த்துத்
தன்னுட் படுத்தி முந்நீர் மடுவுள்
காலத் தச்சன் கட்டிடும் மலைக்குச்
சாலத் தகும் இவை எனவோர்ந் துருட்டிக்
கொண்டு சென்று இட்டுமற் “றையா !

அண்ட யோனியின் ஆணையின் மழையாய்ச்
சென்றபின் பெருமலைச் சிகர முதலாக்
குற்றுவீ ழுருவியாய்த் தூங்கியும் குகை முகம்
இழிந்தும் பூமியின் குடர்பல நுழைந்தும்
கதித்தெழு சுனையாய்க் குதித்தெழுந் தோடியும்

ஊறிடுஞ் சிறிய ஊற்றாய்ப் பரந்தும்,
ஆறாய் நடந்தும், மடுவாய்க் கிடந்தும்
மதகிடைச் சாடியும், வாய்க்கால் ஓடியும்
பற்பல பாடியான் பட்டங் கீட்டியது
அந்தமே யாயினும் ஆதரவாய்க் கொள் ;

இன்னமு மீதோ ஏகுவன் ; எனவிடை
பின்னரும் பெற்றுப் பெயர்த்தும் எழி லியாய்
வந்திவன் அடைந்துமற் றிராப்பகல் மறந்து
நிரந்தரம் உழைக்குமிந் நிலைமையர் யாவர் ?
(நீரைக் கையாற்றடுத்து)
நிரந்தரம் ! ஐயோ நொந்தனை ! நில் ! நில் !

©KTBS Not to be republished

இரைந்ததென் ? அழுவையோ ? ஆயின் ஏகுதி
நீரே ! நீரே ! என்னையுன் நிலைமை ?
யாரே உனைப் போல் அனுதினம் உழைப்போர் ?
நீக்கமில் அன்பும் ஊக்கமும் உறுதியும்
உனைப் போல் உளவேல் பினைப் பேறென்னை ?

(தாங்கூழ்ப் நோக்கி)

ஓகோ ! நாங்கூழ் ப் புழுவே ! உன்பாடு
ஓவாப் பாடே உணர்வேன் ! உணர்வேன் !
உழைப்போர் உழைப்பில் உழுவோர் தொழில் மிகும்
உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ,
எம் மண்ணாயினும் நன் மண்ணாக்குவை,

விடுத்தனை யிதற்கா எடுத்தவுன் யாக்கை
உழுதுழுது உண்டுமண் மெழுகினுந் நேரிய
விழுமிய சேறாய் வேதித் துருட்டி
வெளிக் கொணர்ந் தும்புகழ் வேண்டாற் போல
ஒளிக்குவை உன்குழி வாயுமோர் உருண்டையால் !

இப்புற்பயிர் நீ இங்ஙனம் உழாயேல்
எப்படி யுண்டாம் ? எண்ணா துனக்கும்
குறும்பு செய் எறும்புங் கோடி கோடியாய்
புழுக்களும் பூச்சியும் பிழைக்குமா றென்னை ?
ஒழுக்கமும் பொறையும் உனைப்போ லியார்க்குள ?

(நாங்கூழ்ப்புழு குழிக்குள் மறைதலை நோக்கி)

விழுப்புகழ் வேண்டலை அறிவோம் ஏனிது ?
துதிக்கலம், உன் தொழில் நடத்துதி ஆ ! ஆ !

**நூற் குறிப்பு :**

தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைக்கக் கூடிய நூல்களில் மனோன்மணீயம் சிறப்பு வாய்ந்தது. இந்நூல் தோன்றிய

©KTBS Not to be republished

காலத்திலேயே அனைவராலும் பாராட்டப்பட்டதே இதன் சிறப்பைத் தெரிவிக்கிறது. அந்நாள் தொட்டு இந்நாள் வரை இது போன்ற நூல் ஒன்றும் தோன்றாமையும் இதன் சிறப்பை விளக்குகிறது காப்பியங்களுக்குரிய இலக்கணம் நூலில் காணப்படுகிறது. இந்நூலாசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்தை முதலில் அமைத்துள்ளார். நாடகத்தில் எண் சுவைகளான வீரம், அச்சம், இழிவு, வியப்பு, காமம், துன்பம், சினம், நகை பொலியக் காணலாம். அறம், பொருள், இன்பம் வீடு என்ற நாற்பொருள்களையும் நூல் முழுவதும் அமைத்துள்ளார். சருக்கம் இலம்பகம் என்னும் உறுப்புக்களுக்குப் பதிலாக இதில் அங்கம், களம் பொதிந்துள்ளன.

### நூலாசிரியர் குறிப்பு :

சுந்தரம்பிள்ளை கேரள மாநிலத்தில் ஆலப்புழையில் கி.பி. 1855 ஆம் ஆண்டு பிறந்தார். சைவப்பற்று மிகுந்தகுடும்பத்தில் பிறந்த இவர் சமய நூல்களையும் இலக்கியங்களையும் கற்றுத் தெளிந்தார். தமக்கு தத்துவக் கருத்துகளை உரைத்த கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளான தன் ஞான குருவிற்குக் காட்டும் அன்பின் விழைவே இந்நாடகத்தில் அவர் படைத்த சுந்தர முனிவர் பாத்திரம். கி.பி. 1877 ஆம் ஆண்டில் இவருக்கும் சிவகாமி அம்மாளுக்கும் திருமணம் நடந்தது. அதே ஆண்டில் ஆசிரியப் பணியில் சேர்ந்தார். இவர் 1888 ஆம் ஆண்டில் 'நூற்றொகை விளக்கம்', நூலையும், கி.பி. 1891 ஆம் ஆண்டு 'மனோன் மணீயம்' என்னும் இந்நூலையும், 1894 ஆம் ஆண்டு 'திருவாங்கூர் பண்டை மன்னர்கால ஆராய்ச்சி' நூலையும், 1895 ஆம் ஆண்டில் 'திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி' என்னும் நூலையும் வெளியிட்ஞார். தமிழுக்குத் தொண்டு செய்த இத்தமிழ் மகனார் 42 – ஆம் வயதில் 26–4–1897 இல் காலமானார்.

©KTBS Not to be republished

**அருஞ்சொற் பொருள் :**

பராகம் – மகரந்தப் பொடி, சிறுமை – அற்பம், பனிப்ப – துளிக்க, முந்நீர் – கடல், அண்டயோனி – இறைவன் குடர் – வெடிப்பு, எழிலி – மேகம், நீக்கமில் – அழியா

**கருத்துரை :**

வாய்க்காலின் கரையிலுள்ள சிறுபுல் எப்போதும் தன் வேலைகளில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறது. தேன் துளிகளைத் தாங்கி ஈக்களுக்குக் கொடுக்கிறது. பூவில் உள்ள மகரந்தத் தூளைப் பரப்புகிறது. பின்பு தன் சிறுகாய்களை நோக்கி, ''நாம் ஒரே இடத்தில் இருக்க முடியாது. இடமும் இல்லை, எனவே பசு, எருது போன்றவற்றைச் சார்ந்து வேறிடம் செல்லுங்கள்'' ; என புல் கூறுவதாக நடராசன் கற்பனையாகக் கூறுகிறார். இப்புல்லின் கருணை, பொறுமைகளைப் பார்ப்பவர்கள் சிறுமையாகக் கருதக் கூடாது. ஆங்காங்கே இப்பேரழகையும் அன்பையும் முயற்சியையும் பார்த்து மக்கள் கண் கலங்கி மகிழ்ச்சியில் திளைப்பர்.

நமக்கு உணவளித்தும் வயல் விளைவதற்கும் காரணமாக உள்ள இச்சிறுவாய்க்கால் செய்யும் தொழில் என்னே ! கடலை மலையாகவும் மலையை கடலாகவும் புரட்டிட அல்லவா இவ்வாய்க்கால் உள்ளது. பாருங்கள் ! கற்களை நொறுக்கி பொடியாக்கி மண், கல், புல், புழு என்றில்லாமல் அனைத்தையும் தன்னுள் சேர்த்து காலம் என்னும் தச்சன் கடலிலும் பள்ளத்திலும் கட்டும் மலைக்கு இவை பயன்படும் எனக் கொண்டு செல்கிறது.

இறைவனின் ஆணைப்படி மழையாயும், அருவியாயும், குகைகளிலும், நில வெடிப்புகளிலும் நுழைந்து சுனையாக வெளியேறி ஊற்றாகவும், ஆறாகவும் நடந்து பள்ளத்தில் தங்கி மதகுகளிடையே குதித்தும் வாய்க்கால் வழியாக ஓடி பல்வேறு ஓசைகளை செய்து பட்டங்களை பெற்றிருப்பதும் சிறிய செய்தியே யானாலும் திரும்பவும் மேகமாகி இரவு பகல் பாராது நிரந்தரமாக

©KTBS Not to be republished

உழைக்கும் இந்நிலையில் உள்ளவர் யார் ? என நடராசன் வியக்கிறார்.

நடராசன் வாய்க்காலின் நீரைக் கையால் தடுத்து, "நில் நில் ! ஓசை எழுப்புவது ஏன் ? அழுகிறாயோ ! அவ்வாறானால் நீரே நீ செல். என்னே உன் நிலைமை ? உன்னைப் போல் யார் தான் தினமும் உழைப்பார்?" என வினவுகிறார்.

நடராசன் மண்புழுவைப் பார்த்து, "உன் செயல் ஒழியாத துன்பமுடையது. நான் அறிவேன். உழுபவர்களுக்கு நீ அரசன் எப்படிப்பட்ட மண்ணையும் நல்ல மண்ணாகச் செய்வதற்கா நீ பிறந்தாய் ? மண்ணைச் சேறாக்கி பின் உருண்டையாக்கி உன் குழியில் ஒளிந்து கொள்வாய். நிலத்தை நீ பண்படுத்தா விட்டால் புல்லும் பயிரும் எவ்வாறு உண்டாகும் ? புழுக்களும் பூச்சிகளும் பிழைப்பதெப்படி ? ஒழுக்கமும் பொறையும் உன்னைப் போல் யார்க்கு உளது?" என வியக்கிறான்.

மண்புழு குழிக்குள் மறைவதைப் பார்த்த நடராசன், ஓ! புகழை நீ விரும்பவில்லை போலும், போற்றுகிறோம், உன் தொழிலை நீ நடத்து" என வியக்கிறான்.

### பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :**

1) விசித்திரமான தொழில் செய்வதாக நடராசன் எதைக் குறிப்பிடுகிறார் ?

(கடல், மலை, காலம், வாய்க்கால்-)

2) எப்போதும் இலட்சியத்துடன் இருப்பதாக சுந்தரம்பிள்ளை எதைக் குறிப்பிடுகிறார் ?

(காய், ஈ, சிறுபுல், மலை)

©KTBS Not to be republished

இ) எம்மண் ஆனாலும் நன் மண்ணாக்குவது எது ?

(மண்புழு, தேனீ, மலை, ஆறு)

ஈ) எதற்கு சத்தம் போடுகிறாய் ? அழுகிறாயா என்று நீரைக் கேட்பது யார் ?

(இறைவன், நடராசன், மனோன்மணி, மண்புழு.)

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1) நலமுற அழைத்து ............... அருத்தி

2) ஆர்த்தெழும் ............... அனைத்தையும் கலந்து.

3) மதகிடைச் சாடியும் ............... ஓடியும்.

4) நீக்கமில் அன்பும் ............... உறுதியும்.

## III. பொருத்தி எழுதுக :

| | | |
|---|---|---|
| தேன் | – | மனோன்மணீயம் |
| சுந்தரம்பிள்ளை | – | ஈக்கள் |
| புல் | – | உழுவோர்க்கரசன் |
| மண்புழு | – | கரை |

## IV. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக.

1) "தங்குவதற்கு இடமில்லை பிழைப்பதற்கு வேறிடம் செல்லுங்கள்". என்று சொன்னது யார் ?

2) வாய்க்காலைப் பற்றி பலரும் என்ன கருதுகிறார்கள் ?

3) காலத்தச்சன் எதைக் கட்டுகிறான் ?

4) குழிக்குள் ஒளிந்து கொள்வது எது ?

## V. மூன்று வாக்கியங்களில் விடை தருக.

1) மக்கள் எவற்றைப் பார்த்து தம் கண்களில் நீர் துளிக் கிறார்கள் ?

©KTBS Not to be republished

2) மண்புழு என்னென்ன செய்து விவசாயியின் அரசனாக உள்ளது ?

3) சிறு வாய்க்கால் என்னென்ன தொழில்களைச் செய்கிறது?

4) புல்லுக்கு உள்ள நற்குணங்கள் யாவை ?

**VI. ஐந்து வாக்கியங்களில் விடை தருக.**

1) நடராசன் புல்லின் பெருமைகள் எவை எனக் கூறுகிறார்?

2) வாய்க்கால் எவ்வாறெல்லாம் தன் பயணத்தை நடத்துகிறது?

3) நீரைக் கையால் தடுத்து நடராசன் கூறும் மொழிகள் யாவை?

**VII. பத்து வரிகளில் விடை தருக.**

1) நாங்கூழ் புழுவை நோக்கி நடராசன் கூறும் செய்திகள் யாவை ?

**VIII. இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக.**

1) "யாரே உனைப் போல் அனுதினம் உழைப்பார்"

2) "உழுவோர்க் கெல்லாம் விழுமிய வேந்து நீ"

## மொழிப் பயிற்சி

**1) சேர்த்து எழுதுக :**

பூ + குலை = 		உள் + படுத்தி =

இரவு + பகல் = 		ஏன் + இது =

**2) பிரித்து எழுதுக :**

இடமில்லை, செய்தொழில், உழுதுழுது, பேரழகு

©KTBS Not to be republished

**3) இணைச் சொல் தருக .**

கடல், மடு, யாக்கை, புறம்

**4) எதிர்ச் சொல் தருக.**

மலை, அழுகை, போற்றுவோம், இன்பம்.

**5) வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

அற்பம், சிந்தனை, ஆணை, நிரந்தரம்

**6) எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறு படுதல் :**

எடுத்துக் காட்டு : அரம் – மரம் அறுக்கும் கருவி

அறம் – கொடை

இதைப் போன்று ஐந்து சொற்களையும் அவற்றின் பொருளையும் எழுதுக.

**இ. செயல்பாடு :**

1) மலை மற்றும் மழை பற்றி மாணவர்களைப் பேசச் செய்தல்.

2) பாடப் பொருள் பற்றி மாணவர்களின் கருத்தைக் கூறச் செய்தல்.

©KTBS Not to be republished

# VI. பல் சுவை

## 1. புறநானூறு

கெடுக சிந்தை கடிதிவ டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளி துவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே.

– ஒக்கூர் மாசாத்தியார்
(புறநானூறு : 279)

### நூல் குறிப்பு :

புறம் + நானூறு = புறநானூறு.

இந்நூல் புறப்பொருள் பற்றிக் கூறும் நானூறு பாக்களைக் கொண்டது. இது சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. சங்ககாலத்தில் வாழ்ந்த தமிழர்களின் கல்வி, வீரம், வெற்றி, அறம், கொடை, ஆட்சிமுறை, ஒழுக்கம் ஆகிய பண்பாட்டு வரலாற்றுச் செய்திகளைக் கூறுவனவாகும்.

### ஆசிரியர் குறிப்பு :

இந்நூலின் ஆசிரியரான மாசாத்தியார் ஒக்கூரில் பிறந்தவராவார். இவர் சங்க காலத்துப் பெண்பாற்புலவர்களில் ஒருவர்.

©KTBS Not to be republished

### அருஞ்சொற்பொருள் !

மூதில் – முதுகுடி ; கடிது – அச்சம் ; செரு – போர் ; தன்ஐ - தன் அண்ணன் ; எறிந்து – யானையைக் கொன்று ; களம் – போர்க்களம் ; ஒழிந்தனன் – இறந்தனன் ; நெருநல் – முந்தின நாள் ; கொழுநன் – கணவன் ; பறை – முரசு ; உடீஇ – உடுத்தி ; செருமுகம் – போர்க்களம்.

### கருத்துரை :

போர் நிகழும் காலத்தில் மூத்த மறக்குடியைச் சார்ந்த முதிய பெண்ணொருத்தி செய்த வீரச் செயலின் துணிவு அச்சம்பொருந்தியதாக உள்ளது. முதல்நாள் தன்னுடைய தந்தை போர்க்களத்தில் யானையால் கொல்லப்பட்டு இறந்தனன். மறுநாள் தன்னுடைய கணவன் பசுக்களைக் (ஆநிரை) கவர்ந்து செல்லாதவாறு பகைவரைக் குறுக்கிட்டு நின்று போராடி இறந்துபட்டனன். அடுத்தநாள் போர்முரசு முழங்குவதைக் கேட்டு தானே விரும்பி வேலைக் கையில் கொடுத்து, வெண்ணிற ஆடையை இடையில் உடுத்தி, கலைந்த தலையில் எண்ணெய் பூசி, தன் ஒரே மகனைப் போர்க்களத்திற்கு அனுப்பி விடுகின்றாள். இத்தகு வீரப்பெண்மணியின் செயலை எடுத்துக் கூறி பாடியிருப்பது அப்பெண்பாற் புலவரின் திறனை வெளிப்படுத்துகிறது.

### பயிற்சி

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) இப்பாடலைப்பாடிய புலவர் பெயரினைக் கூறுக.

2) முதல் நாள் போரில் இறந்தது யார் ?

3) அடுத்த நாள் போரில் இறந்தது யார் ?

©KTBS Not to be republished

**II. மூன்று வாக்கியங்களில் எழுதுக :**

இறுதி நாள் தனது ஒரே மகனைப் போருக்கு அனுப்பிய செய்தியைத் தருக.

**III. ஐந்து வாக்கியங்களில் எழுதுக :**

இப்பாடலில் இடம் பெற்றுள்ள மறப்பெண் குறித்து விரிவாக எழுதுக.

***செயல்பாடு :***

இது போன்று உங்களுக்கத் தெரிந்த வீரம் ததும்பும் பாடல்களை நினைவு கூர்ந்து எழுதுக.

***சொ்த்து எழுதுக:***

*கடிது + இவள் + துணிவே; தன் + ஐ*

©KTBS Not to be republished

# 2. நந்திக் கலம்பகம்

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப்பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென் மலர்க் குழல் சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளிச்செய்த
கோமுற்றப் படை நந்தி குவலயமார்த் தாண்டன்
காட வற்கு முன்தோன்றல் கைவேலைப் பாடிக்
காஞ்சிபுர மும் பாடி ஆடாமோ ஊசல்.

**நூல் குறிப்பு :**

கலம்பகம் – கலம் + பகம் ; கலம் – பன்னிரெண்டு, பகம் – ஆறு என்றவாறாகப் பதினெட்டு உறுப்புகளைக் கொண்டு பாடப்படுவதாகும். இந்நூல் பல்லவ மன்னனாகிய மூன்றாம் நந்திவர்மனின் பெருமையைப் போற்றுவதாக அமைந்துள்ளது. இது நந்திவர்மனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு கலம்பக உறுப்புகளை அமைத்துப் பாடப் பெற்ற நூலாகும். இது தொண்ணுற்றாறு சிற்றிலக்கியங்களில் ஒன்றாகும். காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு.

இந்நூலின் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

**அருஞ்சொற்பொருள் :**

ஓடுஅரி – நீண்ட இரேகைகள் ; அழகிய பெண்களின் கண்களில் செவ்வரியோடிருப்பது சிறப்பு ; உத்தரி – மேலாடை ; ஆடகப்பூண் – ஒளிவீசும் பொன் அணிகலன் ; அம் – அழகு ; கூடலர் – பகைவர் ; காடவற்கு முன் தோன்றல் – காடவனென்னும் பெயருடையவனுக்கு முன் பிறந்த தமையன் நந்திவர்மன்.

©KTBS Not to be republished

***கருத்துரை :***

*அரிபடர்ந்த கண்களையுடைய தோழியர்களே! ஊசலாடுவோம் ; நாம் ஆடுங்கால் நாம் அணிந்துள்ள பட்டாடை அசைய வேகமாக ஆடுவோம் ; பொன்னாலான அணிகலன் ஒளிவீச ஊசல் ஆடுவோம் ; அழகிய பூமுடித்த கூந்தல் நாம் ஆடும் விசையினால் அவிழ்ந்து நம்முடன் அசைந்தாட ஊசல் ஆடுவோம்; பகை மன்னர்களுக்குத் தெள்ளாறு என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில் இம்மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணுலகம் அருளிச் செய்தவனும் நந்தியென்னும் பெயருடையவனுமாகிய நம் மன்னனின் சிறப்பைக் குறித்துப் பாடலாகப் பாடியும், அவன் ஆளுகின்ற காஞ்சிபுர நகரின் மேன்மையைப் புகழ்ந்தும் ஊசலாடுவோம் என்று கூறுகின்றாள்.*

## ***பயிற்சி***

**I. *ஒரு வாக்கியத்தில் விடை தருக :***

*1) எத்தகு அணிகலன் அணிந்து ஆடினர் ?*

*2) போர் எந்த இடத்தில் நிகழ்ந்தது ?*

*3) நந்திக் கலம்பகப் பாட்டுடைத் தலைவனாகிய மன்னனின் பெயர் யாது ?*

**II. *ஐந்து வாக்கியங்களில் விடைதருக.***

*1) தோழியர் ஊசல் ஆடி நந்திவர்மனின் சிறப்பினைப் புகழ்ந்து பாடுவதனை விளக்குக.*

©KTBS Not to be republished

# 3. இரட்டுற மொழிதல்

## வைக்கோலும் யானையும்

வாரிக் களத்துஅடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவு ஆகும் – சீர் உற்ற
செக்கோல மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யானை ஆம்.

– காளமேகப்புலவர்

(ஒரு சொல்லோ, தொடரோ இரு பொருள் தரும் வகையில் பாடுவது இரட்டுற மொழிதல் ஆகும். இதைச் 'சிலேடை' என்றும் கூறுவர்.)

### நூற் குறிப்பு :

பல்வேறு புலவர்கள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு சூழல்களில் பாடிய நயமிக்க பாடல்களின் தொகுப்பு 'தனிப்பாடல் திரட்டு' என்னும் தொகை நூலாகும். காளமேகப் புலவரின் பாடலும் இத்தொகை நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

### ஆசிரியர் குறிப்பு :

காளமேகப் புலவர் பொன்னி வளநாட்டைச் சேர்ந்தவர். இயற்பெயர் வரதன். திருவரங்கப் பெருமாள் கோவிலில் உணவு சமைப்பவராக இருந்தார். மேகம் மழை பெய்வது போல, இறைவன் அருளால் இனிமையான தமிழ்ப்பாக்களைப் பொழிந்தார். அதனால் இவர் 'காளமேகப் புலவர்' எனும் பெயர் பெற்றார்.

### அருஞ்சொற்பொருள் :

களம் – நெற்களம், போர்க்களம் ; கோட்டை – நெற்கோட்டை, அரசனுடைய கோட்டை ; போர் – வைக்கோல் போர் - சண்டை ; சீர் – புகழ் ; கோலம் – அழகு ; மேனி – உடம்பு.

©KTBS Not to be republished

***கருத்துரை :*** வைக்கோலானது வயலிலிருந்து வாரி எடுக்கப் பெற்று நெற்களத்தில் போட்டு அடிக்கப்படும். அங்கிருந்து கொண்டு வந்த பிறகு புரியாகத் திரிக்கப் பெற்று நெற்கோட்டையைச் சூழ்ந்து இருக்கும்.

***யானை :*** பெரிய யானையானது, போர்க்களத்தில் பகைவரை வாரி நிலத்தில் அறையும் ; போர் முடிந்த பின் அரசனுடைய கோட்டைக்குள்ளே செல்லும். ஆதலால் வைக்கோலானது, பெரிய யானைக்குச் சமம் ஆகும்.

### பயிற்சி

**I.** *1)* ***சேர்த்து எழுதுக :*** களத்து + அடிக்கும் ; பொலிவு + ஆகும்,

*2)* ***வாக்கியத்தில் அமைத்து எழுதுக :***

போர்க்களம், பொலிவு, யானை, வைக்கோல்

**II.** ***ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :***

*1)* இரட்டுறமொழிதல் என்றால் என்ன ?

*2)* காளமேகப் புலவரின் இயற்பெயர் எது ?

*3)* இரட்டுறமொழிதலாக அமையும் ‘வைக்கோலுக்கும் யானைக்கும்’ என்றுதொடங்கும் பாடல் எந்தத் தொகுப் பிலிருந்து எடுக்கப்பட்டது ?

*4)* வைக்கோல் எங்கு அடிக்கப்படும் ?

*5)* பகைவரை வாரி அறைவது எது ?

**III.** ***ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :***

*1)* காள மேகப்புலவர் வைக்கோலுக்கும் யானைக்குமான ஒற்றுமையை எவ்வாறு விளக்குகின்றார் ?

©KTBS Not to be republished

## IV. எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :

| | | |
|---|---|---|
| களம் – | அறை – | அழகு – |
| கலம் – | அரை – | அலகு – |

### செயல்பாடு :

இது போன்று உனக்குத் தெரிந்த சொற்களை எழுதிப் பழகுக.

### இருபொருள் தரும் சொற்களைத் தொகுத்தல்

பலகை ; இதுவுமது; அறிவிலாதன்; உடனிகழ்ச்சி; ஆடு ; பார்த்தேன்; மாவினை; களி.

©KTBS Not to be republished

# 4. கலிங்கத்துப் பரணி

## கலிங்கர் சிதைந்தோடியது

வழிவர் சிலர்கடல் பாய்வர் வெங்கரி
மறைவர் சிலர்வழி தேடி வன்பிலம்
இழிவர் சிலர்சிலர் தூறு மண்டுவர்
இருவர் ஒருவழி போகல் இன்றியே 451

இதுவும் அது

மழைகள் அதிர்வன போலு டன்றன
வளவன் விடுபடை வேழம் என்றிருள்
முழைகள் நுழைவர்கள் போரில் இன்று நம்
முதுகு செயும்உப கார மென்பரே 453

### நூற் குறிப்பு :

பரணி இலக்கியம் தமிழிலுள்ள **96** வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று. கலிங்கத்துப் பரணி – கலிங்கப் போரில் வெற்றி பெற்ற சோழப் படையின் வெற்றியைப் பாடுவதாகும். பரணியில் சிறந்தது 'கலிங்கத்துப் பரணி' எனப் போற்றப்படும் இந்நூல் **13** பகுதிகளைக் கொண்டது. பரணி நூல் வகைகளுள் முதன் முதலாகத் தோன்றியது இக் கலிங்கத்துப் பரணியேயாகும்.

### ஆசிரியர் குறிப்பு :

கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங் கொண்டார் ஆவார். 'பரணிக்கோர் செயங் கொண்டார்' எனும் தொடர் இவரின் பெருமையைக் காட்டும். இவர் காலம் கி.பி. **12** – ஆம் நூற்றாண்டு.

©KTBS
Not to be republished

**அருஞ்சொற்பொருள் :**

வழிவர் – நழுவி ஓடுவர், கரி – யானை, பிலம் – மலைக் குகை, இழிவர் – இறங்குவர், தூறு – புதர், மண்டுதல் – நெருங்குதல், உடலுதல் – சினந்தெழுதல், வளவன் – குலோத்துங்கன், வேழம் –யானை.

*பயிற்சி*

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) வெங்கரி மறவர் எங்கு மறைவர் ?

2) வளவன் விடும் படை எப்படி இருந்தது ?

**II. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) கலிங்கர் சிதைந்தோடிய காட்சியினைத் தெளிவாக எழுதுக.

©KTBS
Not to be republished

## 5. முக்கூடற்பள்ளு

### மூத்த பள்ளி வீரம் (பெருமிதம்) தோன்ற நகர்வளம் கூறுவது

கொண்டல் கோபுரம் அண்டையிற் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெயில்வெய் யோன்பொன் னெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே.

**நூற் குறிப்பு :**

'பள்' என்பது பள்ளமான நன்செய் நிலங்களையும் அங்குச் செய்யப்படும் உழவினையும் குறிக்கும். ஆகவே பள்ளு உழவரின் பாட்டுக்குப் பெயராக வந்தது. பள்ளு தொண்ணுற்று ஆறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

தாமிரபரணியாறு, சிற்றாறு, கோதண்டராம ஆறு, ஆகிய மூன்று ஆறுகளும் கலக்கும் இடத்தில் அமைந்துள்ள ஊராதலால் முக்கூடல் என்பது பெயராயிற்று. அவ்வூர் இப்போது 'சிவலப்பேரி" என்று அழைக்கப்படுகிறது.

உழவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சுவைபெறச் சொல்லும் சிற்றிலக்கியம் பள்ளு. மூத்தபள்ளி, இளையபள்ளி பெருமை கூறல், நாட்டுவளம், குறிகேட்டல், மழை வேண்டி வழிபடல், ஆற்றில் நீர் வரவு முதலான பல உறுப்புகளைப் பெற்றது பள்ளு இலக்கியமாகும்.

©KTBS Not to be republished

## ஆசிரியர் குறிப்பு :

இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. காலம் கி.பி. 17 - ஆம் நூற்றாண்டு என்பர்.

## அருஞ்சொற்பொருள் :

கொண்டல் – மேகம் ; பேரண்டம் – வானப் பெருவெளிப் பரப்பு ; தண்டலை – சோலை ; கனகம் – பொன் ; முன்றில் – முற்றம் (வீட்டின் முன்புறம்) ; அனம் – அன்னப்பறவை ; வெய்யோன் – கதிரவன் ; எயில்வழி – அம்புகள் எய்ய அமைந்துள்ள துளைவழி ; மது – தேன் ; அண்டர் – தேவர் ; செண்டு – திருமாலின் ஒருவிதப் படைக்கருவி.

**கருத்துரை :** மேகமானது கோபுரங்களைத் தொடும். கொடிகள் வானத்தைத் தொடும். வானப்பரப்பு சோலைகள நாடும். அன்னப்பறவைகள் முற்றத்தில் விளையாடும். விரிந்த பூக்கள் உதிர்த்த தேன், வண்டலோடு சேர்ந்து ஓடும் கதிரவன் அம்புகள் துளைத்ததனால் உண்டான மதில் துளைகளில் வழிதேடும். இத்தகைய பெருமையுடையது தேவர் தலைவராம் அழகரின் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே என்று மூத்தபள்ளி பெருமையுடன் கூறுகிறாள்.

### பயிற்சி

**I. ஒரு வாக்கியத்தில் விடையளி :**

1) மேகமானது எதனைத் தொடும் ?

2) அன்னப்பறவைகள் எங்கு விளையாடும் ?

3) மதிலில் துளைகள் எவ்வாறு உண்டானது ?

©KTBS Not to be republished

## II. மூன்று வாக்கியங்களில் விடையளி :

1) முக்கூடற்பள்ளு – நூல் குறிப்பு தருக.

2) மூத்தபள்ளி தம் முக்கூடல் ஊரின் வளத்தை எவ்வாறு பாடுகிறாள் ?

**சேர்த்தெழுதுக :**

பெருமை + அண்டம் =

பொன் + எயில் =

ஊர் + எங்கள் =

**பிரித்தெழுதுக :**

வண்டலிட்டோடும் =

செண்டலங்காரர் =

அண்டையிற் கூடும் =

©KTBS Not to be republished

## V. மறுமலர்ச்சிக் கவிதைகள்

# 1. பாண்டியன் பரிசு

### விடுதலையும் கெடுதலையும் ஒன்றே

இருட்டறையில் உள்ளதடா உலகம் ! சாதி
இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே !
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே !
வாயடியும் கையடியும் மறைவ தெந்தாள் ?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றை !
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே ! இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்

– பாவேந்தர் பாரதிதாசன்

**நூல் குறிப்பு :**

பாண்டியன் பரிசு என்னும் காவியத்தில் வீரப்பனுடைய சமூகசிந்தனைக்குரிய வரிகளாக இப்பாடல் பகுதி அமைந்துள்ளது. பாண்டியன் பரிசாகிய பேழையைப் பெறுவோர்க்கே ஆட்சி என்பதால் அந்த ஆட்சியை அடையவேண்டுமென்று கூறிய தோழனிடம் பகுத்தறிவுடன் வீரப்பன் கூறுவதே இப்பாடல் பகுதியாகும்.

**ஆசிரியர் குறிப்பு :**

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 9–4–1891 ஆம் ஆண்டு புதுவையில் பிறந்தார்.

இவருடைய பெற்றோர் கனகசபை – இலட்சுமி அம்மையார் ஆவார். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம், தம் பதினெட்டாம் வயதில் காரைக்காலில் தமிழாசிரியராகப் பணியை ஏற்றுக் கொண்டார். புதுவை சட்ட மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன்

©KTBS Not to be republished

பரிசு, தமிழியக்கம், எதிர்பாராத முத்தம் முதலிய நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும்.

**அருஞ்சொற்பொருள் :**

மருட்டுதல் – அச்சுறுத்துதல்

வெருட்டுவது – விரட்டுவது

### பயிற்சி

**I. ஒரு வாக்கியத்தில் விடையளி**

1) இருட்டறையில் உள்ளது எது ?

2) பகுத்தறிவு எவரை வெருட்டும் ?

3) பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை ?

**II. எட்டு வாக்கியங்களில் விடையளி**

1) பாண்டியன் பரிசு என்னும் காவியத்தில் வீரப்பன் மூலமாக, பாரதிதாசன் கூறும் பகுத்தறிவுக் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

**சேர்த்தெழுதுக**

இருட்டு + அறை =

தமக்கு + என்று =

சொத்து + எல்லாம் =

**பிரித்தெழுதுக**

வாயடி = பகுத்தறிவு = மதத்தலைவர் =

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1) வாயடியும் ............... மறைவதெந்நாள் ?

2) ............... எல்லாம் தமக்கென்று சொல்வார்.

3) வெருட்டுவது ...............

©KTBS Not to be republished

# 2. வேம்பு

வேம்புற்ற உறுப்பனைத்தும்
மெ ய்யுற்ற நோயின்
வேரறுக்கும் ; நலம் சேர்க்கும் ;
வீணாவ தில்லை !
காம்புற்ற இலைமோதி
வருங்காற்றோ மூச்சுக்
கலப்பதனால் அகம்புறமும்
காக்கவரும் ; பூவோ
ஆங்குற்ற உணவாகி
அருமருந்து மாகும் ;
அடிமரத்துப் பட்டையினை
அட்டியிட்ட சாறு
தீங்குற்ற குடற்பூச்சி
தீதழிக்கும் ; எண்ணெய்
தீராத புண்ணாற்றும் ;
வேம்பினைப்போல் யாதாம் ?

– புலவர் வ. கலியபெருமாள்

**நூல் குறிப்பு :**

அழகின் சிலிர்ப்புகள் என்னும் கவிதைத் தொகுப்பில் காலை, ஞாயிறு, வானம், மழை, பறவை போன்ற இயற்கைக் காட்சிகளை மிகவும் சிறப்பாகப் பாடியுள்ளார். அது போன்று வேம்பின் பயன்களைக் குறித்து இப்பாடலில் பாடியுள்ளார்.

**ஆசிரியர் குறிப்பு :**

புலவர் வ. கலியபெருமாள் புதுவை மாநிலத்தில் பிறந்தவர்

©KTBS Not to be republished

முறையாகத் தமிழ் பயின்றவர். ஆசிரியப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் இயற்கையழகைப் பாடுவதில் வல்லவர்.

***அருஞ்சொற்பொருள் :***

மெய் = உடம்பு ; தீராத = ஆறாத

## *பயிற்சி*

**I.** ***சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :***

*1)* உடலில் வரும் நோய்களை வேர் அறுப்பது எது ?

அ) வேம்பின் உறுப்புக்கள் (ஆ) மா இலை

(இ) எட்டிக்காய் (ஈ) பூசணிக்காய்

*2)* நமக்கு அருமருந்தாக உதவும் பூ ?

அ) வாழைப்பூ ஆ) வேப்பம் பூ

இ) தாமரைப் பூ ஈ) மல்லிகைப் பூ

**II.** ***சேர்த்து எழுதுக :***

காம்பு + உற்ற ; வேர் + அறுக்கும் ; குடல் + பூச்சி ; புண் + ஆற்றும்.

**III.** ***பிரித்து எழுதுக :***

வேம்புற்ற ; மெய்யுற்ற ; உணவாகி, தீதழிக்கும்.

**IV.** ***வாக்கியத்தில் அமைத்து எழுதுக :***

மருந்து ; காற்று ; வேம்பு ; சாறு.

**V.** ***எதிர்ச்சொல் தருக :***

மெய் ; வீண் ; அகம் ; தீமை.

©KTBS Not to be republished

## VI. ஒரு வா–க்கியத்தில் விடை தருக :

1) எந்த மரத்தின் உறுப்புக்கள் உடல் நோயைப் போக்குகிறது ?

2) நம் அகமும் புறமும் காக்க வருவது எது ?

3) வேம்பின் எண்ணெய் எதை ஆற்றும் ?

4) குடற் பூச்சியை அழிப்பது எது?

## VII. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1) வேப்பமரங்களால் நமக்குக் கிடைக்கும் பயன்கள் யாவை?

2) வேம்பைப் பற்றி நீவிர் அறிந்த செய்திகளை எழுதுக.

## VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

1) “காம்புற்ற இலைமோதி”

2) “தீராத புண்ணாற்றும்”

## I. பொருத்தி எழுதுக :

| | | |
|---|---|---|
| வேப்பம்பட்டை சாறு | – | புண்ணாற்றும் |
| வேப்ப எண்ணெய் | – | குடற்பூச்சி |
| வேப்பங்காற்று | – | அருமருந்து |
| வேப்பம் பூ | – | அகம், புறம் |

## I. செயல்பாடு :

வேப்ப மரத்தைப் போன்று எல்லா உறுப்புகளும் பயன்தரும் ஒரு மரத்தைக் குறித்து பத்து வரிகளில் எழுதுக.

©KTBS Not to be republished

# 3. நாட்டுப்புறப் பாடல்

சிம்பி சிம்பி எடுத்துலக்கை
சிற்றெலும்பு நோவுதையா.

மன்னி மன்னி எடுத்துலக்கை
மணிக்கட் டெல்லாம் நோவுதையா.

கார்த்தாலே வந்தபெண்கள்
கானலிலே மாளுறோமே.

விடியலிலே வந்த பெண்கள்
வெய்யிலிலே மாளுறோமே.

வயிறு ரொம்பப் பசிக்குதையா
வடித்த கஞ்சி பார்த்து வாரேன்.

குலையைப் பசி தாவுதையா
கூழ்ப்பானை பார்த்து வாரேன்.

தென்னமரம் வெட்டப்போய்த்
தெறிச்சுப் போச்சே கோடாலி

தெறிச்சுப்போன கோடாலியைக்
கொல்லன் வீடு சேர்த்துப் போங்க

– நாட்டுப்புறப் பாடல்

**நூல் குறிப்பு :**

ஏட்டில் எழுதப்படாத இலக்கிய நயம் மிக்க பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களாகும். நாட்டுப்புறங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் எண்ணங்களைப் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர். இவை வாய்மொழியாக நிலவி, செவி வழியாக நிலைத்துள்ளன. இப்பாடல் உலக்கை இடிக்கும் போது பாடப்படும் பாடலாகும். இப்பாடலை வள்ளைப்பாட்டு என்று கூறும் வழக்கம் உண்டு.

©KTBS Not to be republished

## பயிற்சி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) நாட்டுப்புறப் பாடலில் இடம் பெற்றுள்ள மரம் யாது ?

அ) மாமரம் (ஆ) பலாமரம்

(இ) தென்னைமரம் (ஈ) வாழைமரம்

2) கொல்லனிடத்தில் சேர்த்த பொருள் எது ?

அ) மண்வெட்டி ஆ) கத்தி

இ) ஈட்டி ஈ) கோடாலி

3) வயிற்றுப் பசியைப் போக்கும் உணவு யாது ?

அ) மண் ஆ) கஞ்சி

இ) காகிதம் ஈ) பூக்கள்

**II. பிரித்து எழுதுக**

சிற்றெலும்பு ; மணிக்கட்டு ; கூழ்ப்பானை; எடுத்துலக்கை.

**III. எதிர்ச்சொல் தருக**

காலை ; வெய்யில் ; நிறைவு ; நகர்ப்புறம்

**IV. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக**

1) கானலில் மாளுபவர்கள் யார் ?

2) வயிறு ரொம்ப, எதைப் பார்த்து வாரேன் என்றாள் ?

3) தெறிச்சுப் போனது எது ?

4) கோடாலியை யாரிடத்தில் சேர்த்தாள் ?

5) உலக்கைப் பாடலை எவ்வாறு கூறுவது வழக்கம் ?

6) ஏட்டில் எழுதப்படாத இலக்கியம் எது ?

Not to be republished ©KTBS

**V. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக**

1) பெண்கள் எங்கு மாளுகிறார்கள் ?

2) எதைப் பார்த்து வருவதாக, எதற்காகக் கூறினாள் ?

3) கோடாலி ஏன் தெறிச்சது ? அதை எங்கு சேர்த்தாள் ?

**VI. பொருத்தி எழுதுக**

| | | |
|---|---|---|
| தச்சன் | – | கோடாலி |
| கொல்லன் | – | மருந்து |
| மருத்துவன் | – | பாதுகாப்பு |
| காவல்காரன் | – | நாற்காலி |

**VII. செயல்பாடு**

மாணவர்கள் குழுக்களாக இணைந்து ஏதேனும் ஒரு நாட்டுப்புறப் பாடலைப் பாடி மகிழுமாறு செய்க.

©KTBS
Not to be republished

# 4. உழைக்க வேண்டும்

மன்னும் சுதந்திரத்தை – நாட்டில்
மக்கள் அடைந்தவுடன்
பொன்னை மழையாக – வானம்
பொழிந்து கொட்டிடுமோ ?

பாலை சோலையாகிக் – கனிகள்
பழுத்து உதிர்ந்திடுமோ ?
சேலை சேலையாகப் – பருத்திச்
செடிகள் காய்த்திடுமோ ?

ஆக்கம் வேண்டுமெனில் – நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா – ஓயாது
உழைக்க வேண்டுமப்பா !

நெற்றியின் வியர்வை – நிதமும்
நிலத்தில் வீழ்ந்திடிலே
சற்றும் வாடாமல் – சுதந்திரம்
தழைத்து வளருமப்பா !

சாதிச் சண்டையெல்லாம் – ஓய்ந்து
தணிய வேண்டுமப்பா !
நீதி நாடெங்கும் – நிலைத்து
நிற்க வேண்டுமப்பா !

– கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

**நூல் குறிப்பு :**

இக்கவிதை கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய ''மலரும் மாலையும்'' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

©KTBS Not to be republished

## ஆசிரியர் குறிப்பு :

அழகு தோய்ந்த எளிமையும், பழமை தோய்ந்த பாட்டு வடிவமுமே கவிமணி தேசிக விநாயகத்தின் கவிதைப் பண்புகள். இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூர் என்னும் சிற்றூரில் பிறந்தார். தந்தை சிவதாணுப் பிள்ளை, தாயார் ஆதிலட்சுமி அம்மையார். ஆசிய சோதி, மருமக்கள் வழி மான்மியம், - மலரும் மாலையும், உமர்கயாம் பாடல்கள் என்பன அவருடைய நூல்களில் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் 'கவிமணி' என்ற சிறப்பு பட்டம் பெற்றவர். இவரை 'குழந்தைக் கவிஞர்' எனப் போற்றுவர்.

### பயிற்சி

**I. சேர்த்து எழுதுக :**

உதிர்ந்து + விடுமோ ; வேண்டும் + எனில் ; நமக்கு + எல்லாம் ; வேண்டும் + அப்பா.

**II. பிரித்து எழுதுக :**

கொட்டிடுமோ ; சோலையாகி ; காய்த்திடுமோ ; நாடெங்கும் ;

**III. எதிர்ச்சொல் தருக :**

வீழ்ந்திடவே ; வானம் ; சுதந்திரம் ; கனிகள்.

**IV. வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

பொழிந்து ; ஆக்கம் ; ஊக்கம் ; தழைத்து.

**V. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) வானம் பொழிந்து ...............

2) கனிகள் ............... உதிர்ந்திடுமோ

©KTBS Not to be republished

3) பருத்திச் செடிகள் ..............

4) சாதிச் சண்டையெல்லாம் .............. , .............. வேண்டுமப்பா.

**VI. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) மக்கள் நாட்டில் எதை அடைந்தனர் ?

2) ஆக்கம் வேண்டுமெனில் நாம் என்ன செய்ய வேண்டும்?

3) சுதந்திரம் தழைக்க எவ்வாறு உழைக்கவேண்டும் ?

4) நம்மிடையே எது ஓய்ந்து தணிய வேண்டும் ?

5) நாட்டில் எது நிலைத்து நிற்க வேண்டும் ?

**VII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

1) சுதந்திரம் தழைத்து வளருமப்பா !

2) வானம் பொழிந்து கொட்டிடுமோ ?

3) நிலைத்து நிற்க வேண்டுமப்பா !

**VIII. பொருத்தி எழுதுக :**

| | | |
|---|---|---|
| பருத்தி | – | பொழிதல் |
| மழை | – | சேலை |
| நீதி | – | ஆக்கம் |
| ஊக்கம் | – | நேர்மை |

**IX. எழுத்து வேறுபடுவதால் பொருள் மாறுபடுதல் :**

மலை = பாறைகள் நிறைந்த பகுதி

மழை = வானத்திலிருந்து பொழிவது

**செயல்பாடு :**

இதைப்போன்று உனக்குத் தெரிந்த ஐந்து சொற்களை எழுதுக.

©KTBS Not to be republished

# 5. நயாகரா

வானமே கரைந்து பாலின் நதியாகி
தரை இறங்கியதைப் போன்று
வெண்புகை மேகமாய்த் தவழ
வானவில்லின் பாலம்.

நிலம் முகில் இரண்டையும் சேர்த்த
சுப வேளையில்
நீர்த் துளிகளின் அட்சதை

பனிப்பாவையின் மடியில் அமர்ந்து
மெல்ல மெல்ல உன்னிடம் வர
உடல் எங்கும் உன் குளுமை

நீர் ஊற்றில் நனைவது
மகிழ்ச்சியின் உள்ளாக்கம்

உன் ஆர்ப்பாட்டம்
ஓங்காரத்தின் முறுக்கு

தாய் கங்கையின்
சொல்லுக்கு அடங்காத
உன் அற்புதம் !

குதிப்பதற்கு நான்
பயம் மறந்த வியப்பில்.

– பேராசிரியர் இராஜேஸ்வரி

(தமிழில் மொழி பெயர்த்தவர் – இறையடியான்)

©KTBS Not to be republished

***ஆசிரியர் குறிப்பு :***

பேரா. இராஜேஸ்வரி பி.எம்.எஸ். கல்லூரியில் கன்னடம் மற்றும் இதழியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் எழுதிய 'நிர்ணயா' என்ற சிறுகதைத் தொகுப்பில் உள்ள பரிவர்த்தனா என்ற கதை குறும்படமாக வெளிவந்தது கருநாடக அரசின் விருதைப் பெற்றுள்ளது. 'வசனாஞ்சலி' என்னும் நூல் 'ஆர்யபட்டா' விருதைப் பெற்றுள்ளது. 16 கல்வெட்டுகளை ஆய்வு செய்து வரலாற்றுக் குறிப்புகளைப் பதிவு செய்துள்ளார். இவர் எழுதிய 'பாவ புட்டி' என்னும் நூலில் இக்கவிதை இடம் பெற்றுள்ளது.

***மொழிபெயர்ப்பாளர் குறிப்பு :*** இப்பாடலை மொழிபெயர்த்தவர் 'இறையடியான்' இவரது இயற்பெயர் ந. தாஸ். இவர் கன்னடத்திலிருந்து பல நூல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 'கெஜ்ஜே பூஜே', 'பணியம்மா', 'சர்வக்ஞரின் வசன கவிதைகள்' கன்னடத்தில் பல்வேறு அரிய கட்டுரைகள், சிறுகதைகள். ஆகியவற்றைத் தமிழில் மொழிபெயர்த்து தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டு ஆற்றிவருகிறார். இப்பாடல் 'எண்ணக் கூடை' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

***அருஞ்சொற் பொருள் :***

முகில் – மேகம், பாவை – பெண்

### ***பயிற்சி***

**I.** ***ஒரு வாக்கியத்தில் விடை தருக :***

*1)* நதி எவ்வாறு கீழே இறங்கியது ?

*2)* மகிழ்ச்சியின் உள்ளாக்கம் எது ?

©KTBS Not to be republished

3) நயாகராவின் ஆர்ப்பாட்டம் எத்தன்மையது ?

4) நயாகரா எப்படிப்பட்ட அற்புதம் ?

## II. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1) நயாகரா அருவியின் அழகை ஆசிரியர் எவ்வாறு விவரிக்கின்றார் ?

## III. கோடிட்ட இடங்களில் விடை தருக :

1) வெண்புகை மேகமாய் தவழ ................ பாலம்.

2) சுபவேளையில் நீர்த்துளிகளின் .................

3) ................ கங்கையின் சொல்லு க் கடங்காத அற்புதம்.

4) குதிப்பதற்கு நான் ................. மறந்த வியப்பில்.

## IV. பிரித்து எழுதுக :

1) வெண் புகை, 2) வானவில், 3) உள்ளாக்கம்.

©KTBS Not to be republished

# 6. வெளிச்சத்தைத் தேடி

வெளிச்சத்தைத்
தேடி
நாங்கள் புறப்படுகிறோம் .....

பாதையில் குறுக்கிடும்
மலைகளை
உதைத்துச் சிதைத்து ......

புயல்களை
ஊதித் தள்ளி .......
நாங்கள் புறப்படுகிறோம் ......

இருட்டைக்
கொளுத்தி விட்டு .......
அந்தச்
சாம்பலின் மீதே
நடந்து போகிறோம் ......

வெளிச்சத்தைத்
தேடி ......
நாங்கள்
போய்க் கொண்டிருக்கிறோம் ......

- பழநிபாரதி

***ஆசிரியர் குறிப்பு :*** கவிஞர் பழநிபாரதி திரைப்படப் பாடலாசிரியர்களுள் ஒருவர். இவர் காரைக்குடியில் **14.6.1964** அன்று பிறந்தார். இவரின் பெற்றோர் திரு. பழநியப்பன், - திருமதி. கமலா ஆவர். இவரின் கவிதைகள் திரைப்படப் பாடல்களாகவும், கவிதைத் தொகுப்பு நூல்களாகவும் வெளிவந்துள்ளன. தமிழக அரசின் கலைமாமணி விருதும், சிறந்த பாடலாசிரியர் விருதும் (காதலுக்கு மரியாதை), சர்வதேச தமிழ்ப்பட விருதும் (பிதாமகன்)

©KTBS Not to be republished

பெற்றுள்ளார். இவர் 1500 க்கு மேற்பட்ட திரைப் படப் பாடல்களை எழுதியுள்ளார். மழைப்பெண், வெளிநடப்பு, புறாக்கள் மறைந்த இரவு, தனிமையில் விளையாடும் பொம்மை, தண்ணீரில் விழுந்த வெயில் என்பன இவர் எழுதிய நூல்களில் சில இவருடைய கவிதைகள் முனைவர் பட்ட ஆய்வுக்கான பாடப்பொருள்களாகியுள்ளன. இப்பாடல், இவரின் "நெருப்புப் பார்வை" என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

### பயிற்சி

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) __________ தேடி நாங்கள் புறப்படுகிறோம்.

2) புயல்களை __________ தள்ளி நாங்கள் புறப்படுகிறோம்.

3) இருட்டைக் கொளுத்தி விட்டு அந்தச் __________ மீதே நடந்து போகிறோம்.

**II. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) கவிஞர் பழநிபாரதி வெளிச்சத்தைத் தேடி எவ்வாறு செல்வதாகக் கூறுகிறார் ?

**III. நயமிக்க தொடர்கள் :**

உதைத்துச் சிதைத்து, ஊதித்தள்ளி, கொளுத்தி விட்டு.

**செயல்பாடு :**

உன் சிந்தையில் ஊறும் கருத்துகளை எளிய கவிதைகளாக ஆறு அல்லது எட்டு வரிகளில் எழுதிப் பழகுக.

©KTBS Not to be republished

## உரைநடை

### 1) ஆராய்ச்சி அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்.

*முனைவர், பா. சு. மணி.*

(நம்முடைய முன்னோர்கள் இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கினர். இருபதாம் நூற்றாண்டில் பலர் தமிழ் அறிஞர்களாகவும், ஆய்வு வல்லுநர்களாகவும் திகழ்ந்தனர். அவர்களுள் சிறந்த தமிழ் அறிவும், ஆழமான ஆய்வுத்திறமையும் பெற்று விளங்கியவர் பேராசிரியர், முனைவர் தெ.பொ.மீ. ஆவார் அவரைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரை)

இருபதாம் நூற்றாண்டில் தமிழால் பல அறிஞர்கள் வாழ்ந்தனர் ; வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். தமிழ் ஆராய்ச்சியில் தமக் கென ஒரு புதிய பாதையை வகுத்துக் கொண்டு தமிழ் அறிஞர்களின் வரிசையில் முதலில் நிற்பவர் பேராசிரியர் தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் ஆவார். இவர் 1901 ஆம் ஆண்டு பொன்னுச்சாமி கிராமணி, ருக்மணி அம்மையார் ஆகியோர்களுக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவர் பிறந்த ஊர் திருநெல்வேலி மாவட்டம், தென் பட்டினம் என்பதாகும், தமிழ் அறிஞர்களால் போற்றப்படும் இவர், தெ.பொ.மீ என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப் பட்டார். பேராசிரியருடைய முன்னோர்கள் வாணிகமும் புரிந்தனர். அவர்களில் சிலர் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும் விளங்கினர்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் தந்தையார் தமிழ்மீது மிருந்த பற்று கொண்டவர், ஆகவே அன்றைய நாளில் பெருமை மிக்க பெரும்புலவரான மகாவித்துவான் ‘‘மீனாட்சி சுந்தரம் பிள்ளை’’ அவர்களின் பெயரைத் தன் மகனுக்குப் பெயராகச் சூட்டினார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, தமிழ் இலக்கியங்களைத் தேடித் தந்து ‘‘தமிழ்த் தாத்தா’’ என்று புகழப்படும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களின் ஆசிரியர்

©KTBS Not to be republished

ஆவார். இவர் பெயரைச் சூட்டிக் கொண்ட பேராசிரியர் தெ-பொ. மீ. அவர்களும், குருவை மிஞ்சிய சீடனாக விளங்கிப் புகழ் பெற்றார்.

பேராசியர் பிறந்த தென்பட்டினம் அந்நியர் ஆட்சியால் பாழடைந்தது. அதனால் அவருடைய குடும்பத்தினர் சென்னை சென்று சிந்தாதிரிப் பேட்டையில் குடியேறினர். இங்கு இவரது தமையனார் தலைமையில் தொடக்கப் பள்ளி ஒன்று தொடங்கப் பட்டது. இப்பள்ளியில் தான் தெ.பொ.மீ. ஆரம்பக்கல்வி பயின்றார்.

சென்னையில் உள்ள பச்சையப்பன் கல்லூரியில் பயின்று இளங்கலை (B.A.) பட்டம் பெற்றார். வரலாற்றுப் பாடத்தில் முதுகலை (M.A.) பட்டமும் பெற்றார். சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்று, சென்னை நீதி மன்றத்தி ல் வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

1921 ஆம் ஆண்டு குன்றத்தூரைச் சேர்ந்த ஆறுமுகம் என்பாரின் மகள் அங்கயற் கண்ணியை மணந்தார். இவர்களுக்குக் காமேசுவரன், ஞானப் பிரகாசம் என்ற மகன்களும், காமேசுவரி, காமாட்சி, நீலாயதாட்சி என்ற மூன்று மகள்களும் இருந்தனர்.

திரு.வி. கலியாண சுந்தரனார் அவர்களைக் குருவாக மதித்துப் போற்றிய பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். பின்னர் 1954 ஆம் ஆண்டு சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் ஆனார். 1958 ஆம் ஆண்டில் மீண்டும் அண்ணாமலை பல்கலைக் கழகத்திற்கு வந்து தமிழ்த் துறைத் தலைவர் ஆனார். அப்போது மொழியியல் என்ற புதிய மொழியாய்வுத் துறையைத் தொடங்கினார். அத்துறையில் பல மாணவர்கள் சேர்ந்தனர். அத்துறையில் ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. அதன் விளைவாக மொழியியல் தொடர்பான பல நூல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வெளி வந்தன.

©KTBS Not to be republished

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள், இராமாயணப் போராட்டம், வள்ளுவரும் மகளிரும், அன்பு முடி, மனோதத்துவ சாத்திரம், தமிழா நினைத்துப் பார், நீங்களும் சுவையுங்கள் போன்ற தமிழ் நூல்களையும் பல ஆங்கில நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

இயற்கையாகவே தமிழ்ப் புலமை பெற்றிருந்த பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பல ஆசிரியர்களை நாடிச் சென்று, தம் புலமையை வளர்த்துக் கொண்டார். அதோடு நில்லாமல் தெலுங்கு, கன்னடம், சமசுகிருதம், மலையாளம், இந்தி, பிரெஞ்சு, செர்மன் போன்ற மொழிகளையும் நன்கு கற்றுத் தேர்ந்தார். தமிழ் இலக்கணத்தை ஆழமாகக் கற்றுத் தேர்ந்தார். அதோடு வடமொழி, பிற திராவிட மொழிகளின் இலக்கணங்களையும் நன்கு கற்றுப் புலமை பெற்றார். ஆகவே தான், 'தமிழ்த்தாத்தா' உ.வே. சாமிநாத ஐயர் அவர்களால் 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டம் பேராசிரியருக்கு வழங்கப்பட்டது.

**1961** ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்கலைக் கழகம் சென்று, அங்கு தமிழ்த் தொண்டு செய்தார். **1965** ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் ஆனார். அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் **1973** ஆம் ஆண்டு முதல் திருப்பதியில் உள்ள திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் தமது இளமைப் பருவம் முதல் வாழ்வின் இறுதி வரை படித்துக் கொண்டே இருந்தார். பல மொழிப்புலமை காரணமாகப் பல துறைகளிலும் இவர் சிறந்து விளங்கினார். இலக்கியம், இலக்கணம், மொழியியல், இலக்கியத் திறனாய்வு, வரலாறு எனப் பல செய்திகள் பற்றியும் ஆழமாகவும், மிகத் தெளிவாகவும் எந்த நேரத்திலும் பாடம் சொல்லும் வல்லமை படைத்தவர்.

©KTBS Not to be republished

பேராசிரியர் தாம் கற்றதோடு நில்லாமல், தம்மிடம் பயின்ற மாணவர்களுக்கு அக்கருத்துக்களை ஆழமாகவும் கற்பித்தார். தமிழில் உள்ள எந்த இலக்கியத்தைப் பற்றியும் அவரிடம் கேட்டு அறியலாம். அவர் ஒரு 'இலக்கியத்தேன்'. எல்லா இலக்கியங்களையும் தாம் சுவைத்ததோடு, அந்த இலக்கிய மலர்களின் மணத்தை உலகம் எங்கும் பரப்பிய அவரை 'இலக்கியப் பகலவன்' எனலாம்.

தம்மிடம் பயின்ற மாணவர்களுக்குத் தமிழ் உணர்வையும், தமிழ் அறிவையும் கொடுத்த பேராசிரியருக்குப் 'பல்கலைச் செல்வர்,' பன்மொழிப் புலவர்', 'பத்மபூசண்' ; 'கலைமாமணி' போன்ற பட்டங்களைப் பல மடங்களும், பல்கலைக் கழகங்களும் அளித்துப் பாராட்டின.

இவ்வாறாகப் பல்வேறு துறைகளில் ஒப்பாரும் மிக்காரும் இன்றிவிளங்கிய பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் 1980 ஆம் ஆண்டு மறைந்தார். அவரது மறைவு தமிழ் உலகில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கி உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

**ஆசிரியர் குறிப்பு :** இக்கட்டுரை ஆசிரியர் முனைவர் பா.சு.மணி ஆவார். பெங்களூரில் சுமார் 50 ஆண்டுகளாகத் "தினச்சுடர்" என்ற மாலை நாளிதழை நடத்தி வருபவர். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் முதுகலை (எம்.ஏ) யில் முதல் தகுதி (Rank) பெற்றுத் தேறியவர். தமது 72 ஆம் வயதில் தமது ஆசிரியரான பேராசிரியர் தெ.பொ. மீரைட்சி சுந்தரம் அவர்கள் எழுதிய நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்றவர். அவர் எழுதிய முனைவர் பட்ட ஆய்வேடே ஆய்வின் இமயம் தெ.பொ.மீ. என்ற நூலாகிற்று. கருநாடக அரசால் "இராஜ்யோத்சவா" விருது பெற்றவர். மர்ம மாளிகை, நாற்காலிப் பாட்டி, கயல்விழி ஆகிய படைப்பிலக்கியங்களையும், செய்தி பிறந்த கதை என்ற நூலையும், வேறு பல நூல்களையும் எழுதியவர்.

©KTBS Not to be republished

## பயிற்சி

**I. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) தெ.பொ.மீ. வாழ்ந்த நூற்றாண்டு

(19 ஆம் நூற்றாண்டு, 20 ஆம் நூற்றாண்டு, 15 ஆம் நூற்றாண்டு)

2) தெ. பொ. மீ. யின் முன்னோர்கள் செய்ததொழில்

(வாணிகம், உழவுத்தொழில், நெசவுத்தொழில்)

3) தெ.பொ.மீ. அவர்களுக்கு 'பன்மொழிப் புலவர்' பட்டம் வழங்கியவர்.

(நக்கீரர், உ.வே.சா. பாரதியார்)

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக :**

1) பேராசிரியர் பிறந்த ________ அந்நியர் ஆட்சியால் பாழடைந்தது.

2) 1954 ஆம் ஆண்டு சென்னை ________ ________ தமிழ்த்துறைத் தலைவர் ஆனார்.

3) 1961 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள ________ பல்கலைக்கழகம் சென்று அங்குத் தமிழ்த் தொண்டு செய்தார்.

**III. ஒரு வாக்கியத்தில் விடை தருக.**

1) பேராசிரியர் தெ.மொ.மீ. பிறந்த ஊர் எது ?

2) தெ.பொ.மீ. ஆரம்பக் கல்வியை எங்கு பயின்றார் ?

3) தெ.பொ.மீ. அவர்கள் யாரை, எப்போது மணந்து கொண்டார் ?

4) தெ.பொ.மீ. எங்கு முதன் முதலில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார் ?

©KTBS Not to be republished

5) தெ.மொ.மீ. எந்தெந்த மொழிகளை நன்கு கற்றார் ?

6) தெ.பொ.மீ. அவர்கள் எங்கு, எப்போது துணைவேந்தர் ஆனார் ?

7) திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தெ.பொ.மீ. புரிந்த பணி யாது ?

**IV. மூன்று வாக்கியங்களில் விடையளி**

1) தெ.பொ.மீ. அவர்களுக்கு இப்பெயரைச் சூட்டக் காரணம் என்ன ?

2) தெ.பொ.மீ. அவர்களின் மக்கள் செல்வங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

3) தெ.பொ.மீ. அவர்கள் தம் தமிழ்ப் புலமையை எவ்வாறு வளர்த்துக் கொண்டார் ?

4) தெ.பொ.மீ. - ஒரு இலக்கியத் தேனீ - விளக்குக.

**V. ஐந்து வாக்கியங்களில் விடையளி.**

1) இருபதாம் நூற்றாண்டு தமிழ் அறிஞர்கள் எப்படிப்பட்டவர்கள் ?

2) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் எங்கெங்கு படித்து, என்னென்ன பட்டங்கள் பெற்றார் ?

3) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் எழுதிய நூல்கள் யாவை?

4) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் மாணவர்களுக்குப் பாடம் சொல்லும் திறத்தை எவ்வாறு பெற்றார் ?

**VI. பத்து வாக்கியங்களில் விடையளி :**

1) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்களின் இளமைப்பருவம் பற்றி விளக்கி வரைக.

©KTBS Not to be republished

2) பேராசிரியர் தெ.பொ.மீ. அவர்கள் பெற்ற பதவிகள் பற்றி விளக்கி வரைக.

**VII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

1) 'குருவை மிஞ்சிய சீடனாக விளங்கிப் புகழ் பெற்றார்.'

2) ஆகவே தான், 'தமிழ்த் தாத்தா' உ.வே.சாமிநாத ஐயர் அவர்களால் 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டம் பேராசிரியருக்கு வழங்கப் பட்டது.

## *மொழிப்பயிற்சி*

***சேர்த்து எழுதுக :***

தமிழ் + இலக்கியம் =

கற்று + தேர்ந்தார் =

இளமை + பருவம் =

தமிழ் + உணர்வு =

தமிழ் + உலகில் =

***பிரித்து எழுதுக :***

நூற்றாண்டு, தமிழ்த் தாத்தா ; ஆரம்பக் கல்வி ; மொழிப் புலமை ; இலக்கியப் பகலவன்.

***எதிர்ச் சொல் தருக :***

புகழ், ஆரம்பம், வல்லமை ; மறைந்தார்.

***வாக்கியத்தில் அமைத்து எழுதுக :***

புதிய பாதை ; நாடிச்சென்று ; மிகத்தெளிவாக ; வல்லமை ; ஆழமாக.

©KTBS Not to be republished

# 2. தமிழிலக்கியத்தில் ஐவகை நிலக்காட்சிகள்

**– முனைவர் இரா. சீனிவாசன்**

(குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்களில் சங்க கால மக்கள் வாழ்ந்துள்ள வாழ்க்கை முறையினைச் சுட்டுகின்றது.

ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய ஒவ்வொரு காட்சி மட்டுமே இடம்பெற்றுள்ளது. குறிஞ்சி, முல்லை, பாலை நிலத்திற்குரிய சான்றுகள் குறுந்தொகையினின்று எடுத்துக் காட்டாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மருதநிலக் காட்சியாக கம்பரமாயணப் பாடலொன்றும், நெய்தல் நிலக்காட்சியாக மனோன்மணீய நாடக வரிகளும் கொடுக்கப் பட்டுள்ளன)

தமிழர்கள் முற்காலத்தில் நிலப் பகுதியின் அடிப்படையில் வாழ்க்கையை நடத்தினர். சங்க காலப்புலவர்கள் தாங்கள் பாடிய பாடல்களை நில அடிப்படையில் குறிஞ்சி, முல்லை, மருதம் நெய்தல், பாலை என்றவாறாக யாத்துள்ளனர்.

மலையும் மலையைச் சார்ந்த இடத்திலும் வாழ்ந்தவர்கள் பற்றிய பாடல்கள் குறிஞ்சி நில இயற்கையழகுடன் மிளிர்வன. மலையில் காணப்படும் அருவியும் சுனையும் பலா மரங்களும், சாரலும் அவர்களை ஈர்த்துள்ளன. அங்கு வாழும் மக்கள் குறவன் குறத்தி போன்றோர். அவர்கள் பலவிதத் தானியங்களைப் பயிரிட்டனர். பெண்கள் தினைப்புனம் காத்தனர். குறிஞ்சிநிலத் தலைவன் மலைநாடன், வெற்பன் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டான். குறிஞ்சி நிலத்திற்குரிய கடவுள் முருகன்.

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினையிருந்த தோகை
பூக் கொய் மகளிரிற்றோன்றும் நாடன்" (குறு : 26)

©KTBS Not to be republished

எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலினை இங்கு நினைவு கூர்வோம்.

இப்பாடலில் குறிஞ்சிநிலக் காட்சிகள் அழகுறக்காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. மலைச் சாரலிலுள்ள வேங்கை மரம் அரும்பில்லாமல் பூத்துக் குலுங்கி வெறும் பூக்களாகக் காண்கிறது. அதன் கிளையில் இருந்த மயிலானது மலரைக்கொய்யும் மகளிரைப் போலத் தோன்றும். அவ்வேங்கைமரத்தருகில் சுவையுடைய மாங்கனிகளோடு மாமரங்கள் நிற்கின்றன. அவற்றின் கனிகளையுண் உண்டு குரங்கு, குட்டிகளுடன் துள்ளிக்குதித்து ஆடுகின்றன. இத்தகு இயற்கை வளம்மிகுந்து காணப்படும் குறிஞ்சி நிலக்காட்சி உள்ளத்தைக் கொள்ளைகொள்வன.

முல்லை நிலமென்பது காடும் காடைச்சார்ந்த இடமுமாகும். காட்டில் வாழ்வோர் எயினர்களும் ஆயர்களும் ஆவர். இவர்கள் வேட்டையாடும் தொழிலை உடையவர். காட்டில் கிடைக்கும் இயற்கைப் பொருட்களான கனிகள், கிழங்குகள் முதலியவற்றை உண்டுமகிழ்வர். முல்லை நிலக்கடவுள் திருமால்.

பொருளீட்டச் சென்ற முல்லை நிலத் தலைவன் கார்காலத்தில் திரும்பி வருவதாகத் தலைவியிடம் கூறிச் சென்ற காலம் வந்துவிட்டது. மழைத் துளிகளை ஏற்று முல்லை மலர்கள் இதழ்விரிக்க, நறுமணம் பரவுகின்றது. அத்துடன் மண்டிக்கிடக்கும் செம்முல்லை (ஜாதிமல்லிகை)க் கொடிகளில் அரும்புகள் மலர்ந்து வாசனை வீசுகின்றது. இத்தகு இயற்கை மணம் வீசும் முல்லை நிலக்காட்சியை குறுங்கீரனார் என்னும் புலவர் குறுந்தொகையில் பாடியிருக்கும் திறன் சிறப்பிற்குரியது.

சங்ககாலத் தலைவன் மிருந்த கடமையுணர்வுடையவன். அவன் பொருளீட்டப் பாலை நிலவழியாகச் செல்வது வழக்கம். பாலை நிலமென்பது நீர்வசதியற்ற வறண்ட காடும் மலையும் சேர்ந்த இடமாகும். அத்தலைவன் செல்லும் வழியில் காணும் காட்சி இதோ! பாருங்கள் !

©KTBS Not to be republished

பெண்யானை (பிடி) பசியுடன் இருப்பதைக் கண்ட ஆண்யானை (களிறு) அருகினில் நிற்கும் யாமரத்தைக் காண்கிறது. உடனே அதன் நீண்ட துதிக்கையால் யாமரத்தின் மெல்லிய சினைகளை (கிளைகள்) முறித்துப் பட்டைகளை உரித்து, அதினின்றும் கிடைக்கும் சாற்றினைத் தானருந்தாது, பெண்யானையைப் பருகச் செய்யும் காட்சியைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர் குறுந்தொகையில் பாடியுள்ள திறன் போற்றற்குரியது. பாலை நிலக்கடவுள் காளி.

கவிச் சக்கரவர்த்தி கம்பனின் கற்பனை, கோசல நாட்டின் மருதநில வளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. வயலும் வயலைச் சார்ந்த இடமும் மருதம் ! மருத நிலக்கடவுள் இந்திரன். இந்நிலத்தில் வாழ்பவர் உழவர்கள். மருத நிலத்தலைவன் ஊரன் என அழைக்கப் படுகிறான்.

தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்க
தெண் திரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ.

(கம்ப ராமாயணம் 36)
(பாலகாண்டம்)

மருத நிலத்து மலர்ச் சோலையில் மயில்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன. அங்கே மலர்ந்துள்ள தாமரைகளின் காட்சி விளக்குகளை ஏந்திநிற்பது போலுள்ளன. மேகங்கள் முழங்கும் தன்மை மத்தளம் ஒலிப்பது போலுள்ளன. குவளை மலர்கள் கண்களைப் போல விழித்துப் பார்க்கின்றன. நீர் நிலைகளின் தண்ணீர் திரைச்சீலையாக அமைய, வண்டுகளின் ரீங்கார ஒலி மகரயாழின் இசையாக ஒலிக்கிறது. இவ்வாறு மருதநிலமானது, இசையும் கூத்தும் நிகழ்த்தும் அரங்கமாகத்திகழ்வதைக் காணலாம்.

©KTBS Not to be republished

நெய்தல் என்பது கடலும் கடலைச் சார்ந்த இடமும் ஆகும். இங்கு வாழ்பவர் நுளையர், நுளைச்சியர் எனப் படும் பரதவர் ஆவர். இவர்கள் தொழில் மீன் பிடித்தல் மற்றும் உப்பு தயாரித்தலாகும். நெய்தல் நிலக்கடவுள் வருணன்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் எழுதிய மனோன் மணீய நாடகத்தில் காணப்படும் நெய்தல் நிலக்காட்சி இதோ :

"மழலை வண்டாளம் புலர்மீன்கவர
ஓம்புபு நுளைச்சியர் எறிகுழை தேன்பொழி
புன்னை நுண்தாதால் பொன்னிறம் பெற்ற
எருமையின் புறத்திருத்திருஞ்சிறை புலர்த்தும்
அலை கடற் காக்கைக் கலக்கண் விளைக்கும்."

நுளைச்சியர் கடற்கரையில் மீன்களைக் காயவைத்துள்ளனர். அம்மீன்களை நாரைகள் கவ்விக்கொண்டு பறக்கின்றன. அந்நாரையை விரட்ட ஒரு நுளைச்சி காதில் கிடந்த பொன்னாலான குழையைக் கழற்றி எறிகின்றாள். அந்த குழை அந்நாரை மீது விழாது புன்னை மர நிழலில் படுத்துக் கிடந்து அசைபோடும் எருமையின் மீது உட்கார்ந்து இறக்கையை உலர்த்தும் காக்கையில் மீது விழுகின்றது நாரை, காக்கை, புன்னைமரம், மீன், நுளைச்சியர் போன்ற அனைத்தும் நெய்தல் நிலத்திற்குரியனவாக அமைகின்றன.

இவ்வாறு மலை, காடு, கடல், பாலை (வெங்காடு), வயல் என்னும் நிலப்பகுதிகளுக்கேற்ப மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த நிலையினைத் தமிழ் இலக்கியங்கள், அக்கால வாழ்க்கை முறையோடு சித்தரித்துக் காட்டும் வண்ணம் இலங்குகின்றன.

©KTBS Not to be republished

**ஆசிரியர் குறிப்பு :** முனைவர், இரா. சீனிவாசன் அவர்கள், பெங்களூர் அரசினர் வணிகவியல் கல்லூரியில் இருபத்தொன்பது ஆண்டுகள் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி, பிறகு கல்லூரி முதல்வராகப் பணி உயர்வு பெற்று ஒய்வு பெற்றவர். இவரது நூற்கள் சக்தி வழிபாடு, இலக்கிய அலைகள் என்பன. நூற்றுக் கணக்கான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளார். சங்க இலக்கியங்களைக் கன்னடத்திற்கு மொழியாக்கம் செய்யும் குழுவின் ஒருங்கிணைப்பாளர்.

**அருஞ்சொற்பொருள் :**

யாத்தல் – அமைத்தல், தோகை – மயில்

சினை – கிளை, அரும்பு – மொட்டு

பிடி – பெண்யானை, களிறு – ஆண்யானை

கொண்டல் – மேகம், முழவு – மத்தளம்

புலர் மீன் – கருவாடு, சிறை – இறக்கை

அலைக்கண் – துன்பம்

**பயிற்சி :**

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக.**

1) குறிஞ்சி நிலத்தலைவன் யார் ?
2) மருத நிலக் கூடவுள் பெயர் யாது ?
3) நெய்தல் நிலக் கடவுள் பெயர் யாது ?
4) முல்லை நிலத்துக் கடவுள் பெயர் யாது ?
5) மருத நிலத் தலைவன் பெயர் யாது ?

**II. மூன்று வாக்கியங்களில் விடை தருக.**

1) குறிஞ்சி நிலத்தைப் பற்றி எழுதுக.
2) முல்லை நிலத்தைப் பற்றி எழுதுக.
3) மருத நிலத்தைப் பற்றி எழுதுக.
4) நெய்தல் நிலத்தைப் பற்றி எழுதுக.
5) பாலை நிலத்தைப் பற்றி எழுதுக.

©KTBS Not to be republished

**III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) குறுந்தொகை நவிலும் குறிஞ்சி நிலக்காட்சி பற்றி எழுதுக.
2) கம்பர்காட்டும் மருதநிலக் காட்சியை விளக்குக.
3) மனோண்மணீயம் சுட்டும் நெய்தல் நிலச் செழிப்பினைப் பற்றி குறிப்பிடுக.
4) பாலை பாடிய பெருங்கடுங்கோ காட்சிப்படுத்தும் யானையின் செயலை விவரிக்க.
5) குறுங்கீரனார் காட்டும் முல்லை நிலக் காட்சி பற்றி எழுதுக.

**தெரிந்து கொள்க :**

**எட்டுத் தொகை நூல்கள்**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

1. ‘தெண்ணிரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிது பாடமருதம் வீற்றிருக்கும் மாதோ’.
2. ‘எருமையின் புறத்திருத்திருஞ்சிறை புலாத்தும் அலை கடற் காக்கை கலக்கண் விளைக்கும்’.

## மொழிப் பயிற்சி

**சேர்த்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| கடமை | + | உணர்வு | ___________ |
| போற்றற்கு | + | உரியது | ___________ |
| நிலம் | + | தலைவன் | ___________ |
| போல் | + | உள்ளன | ___________ |

**பிரித்து எழுதுக.**

முற்காலம் பொருளீட்டல், தானருந்தாது, இந்நிலம்.

**எதிர்ச்சொல் தருக.**

இயற்கை, பல, கனி, வாழ்பவர்.

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக.**

மழைத்துளி, வாசனை, நீர்நிலை.

©KTBS Not to be republished

# 3. "கை குறைத்த தென்னவன் "

– எம்.பி.ஆர்.

(பண்டைய நாட்களில் தமிழகம் சேரன், சோழன், பாண்டியன் என்ற மூவேந்தர்களால் ஆளப்பட்டது. அவர்கள் குடிமக்களின் தேவையறிந்து செயல்பட்டனர். பாண்டிய மரபில் ஆட்சி செய்த குலசேகரப் பாண்டியன், தன்கையைத் தானே வெட்டிக் கொண்டு நீதியை நிலை நிறுத்தினான் என்ற செய்தி, பழைய மன்னர்களின் நீதி வழுவாத நெறிமுறையின் ஆட்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.)

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

தன் குடிகளைக் கண்ணிமை போன்று காப்பாற்றி அதனால் தனக்கு நேரும் இன்னலை முக மலர்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் அரசன் பிறப்பினால் மனிதனாயிருந்தாலும், செய்கையினால் குடிகளுக்குக் கடவுளாக மதிக்கப்படுவான்.

பண்டைய நாட்களில் தமிழகம் முப்பெரும் அரசர்களால் ஆளப்பட்டது. அம்முப்பெரும் அரசர்கள் சேர, சோழ, பாண்டியர் எனப்படுவார்கள். அம்மூவேந்தர்களால் தமிழகம் ஆளப்பட்டது. மேலும் நீர் வளமும், ஏனைய வளங்களும் நிறைய பெற்றதாய் விளங்கிற்று அம் மூவேந்தர்களும் குடிகளுக்கு அவ்வப்போது நீதி வழங்கி நிகரற்ற பேரரசர்களாய் விளங்கினார்கள். அம்மூவேந்தருள் பாண்டியர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அவ்வப்பொழுது மக்களின் இன்னல்களைப் போக்கி நீதி முறை செய்தனர்.

இவ்வாறு மக்கள் குறை போக்கி நீதி வழங்கிய பாண்டிய மன்னருள் மாண்புடையவன் குலசேகரப் பாண்டியன் ஆவான். இவன் குடிகளைத் தன்னுயிர் போலக் கருதும் பண்புள்ளவன். நீதி வழுவாத நேர்மையாளன், குடிகளின் பொருட்டுத் தன் உயிரைத் துச்சமென மதிக்கும் பண்பாளன், மனிதர் அல்லாத ஏனைய உயிர்களிடத்தும் பேரிரக்கம் உள்ளவன்.

©KTBS Not to be republished

இத்தகைய தனிப்பெரும் பண்பாளனாகிய குலசேகரப் பாண்டியன், தன் குடிகளின், உண்மை நிலையையும், அவர்களுக்கு நேரிடும் இன்னல்களையும் நேரில் அறிந்து கொள்ள ஒவ்வோர் இரவும் மாறு வேடம் பூண்டு நகரைச் சுற்றி வருவான், பிறகு தான் அறிந்து கொண்ட உண்மைகளை ஒருவருக்கும் அறிவிக்காமல், மறுநாள் குடிகளுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வான்.

ஒரு நாள் வழக்கம் போலவே குலசேகரப் பாண்டியன் மாறு வேடம் பூண்டு நகர்ச் சோதனை செய்து வந்தான். நகர் எங்கும் அமைதி நிலவியது. ஒவ்வொரு வீதியாகச் சு ற்றிக் கொண்டு மன நிம்மதியுற்றான். இறுதியில் ஒரு வீதியில் நுழைந்தான், அவ்வீதியில் எல்லா வீடுகளிலும் அமைதி நிலவிற்று. ஆனால் ஒரு வீட்டில் மட்டும் சிறிது விளக்கு வெளிச்சம் தெரிந்தது. உடனே அவ்வீட்டின் அருகில் அசைவற்று நின்றான் மன்னன். உள்ளே இருவர் பேசும் ஒலியைக் கேட்டான், மனத்துணுக்குற்றான், நகரெங்கும் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க, இவ்வீட்டில் மட்டும் பேச்சரவம் கேட்பதற்கு காரணம் என்ன ?

திருடர் எவரேனும் கொள்ளையடிக்கும் கருத்துடன் உள் புகுந்தனரோ ? இதனை அறிந்து செல்வது எனது தலையாய கடமையாகும். என்று எண்ணி, வீட்டின் தலைவாயிலின் ஓரமாக நின்று உற்று கவனி க்க தொடங்கினான்.

அந்நள்ளிரவில் அவ்வீட்டில் மிகவும் அமைதியாகவும் தாழ்ந்த குரலிலும் பேசிக் கொண்டிருந்தான் ஒருவன் அவன் பெயர் கீரந்தை, அவன் தன் இல்லாளுடன் தான் யாத்திரை செய்யப் போவதைப் பற்றி பின்வருமாறு பேசினான்.

***கீரந்தை :*** அன்புடையவளே ! நீண்ட நாட்களாக எனக்கு ஓர் ஆவல் இருக்கிறது. அந்த ஆவலை இப்பொழுது நிறைவேற்ற எண்ணியுள்ளேன், எல்லாம் வல்ல இறைவன் காசி விசுவநாதனைக் கண்டு வணங்கினால், பிறவித் துன்பங்கள் உண்டாகாது. என்பது

Not to be republished ©KTBS

எனது எண்ணம். விசுவநாதரை வணங்கினால்தான் மனிதப் பிறவியால் உண்டான பயன் என்று நம் மூதாதையர் கூறியிருக்கின்றனர், எனவே, நான் காசி யாத்திரை சென்று விசுவநாதரை வணங்கி விட்டு வருகிறேன், நாளைய தினம் நன்னாளாய் இருப்பதனால் அன்றே புறப்பட உறுதி பூண்டிருக்கின்றேன். உன்விருப்பம் என்ன ?

***மனைவி :*** *அன்புடையவரே ! பெண்டிர்க்குக் கணவனே துணை, கணவன் துணையின்றி பெண்களுக்கு உற்றதுணை வேறு இல்லை. காசிக்கு நீர் சென்று விட்டால், எனக்கு உற்ற துணை யாரும் இல்லை எனவே என்னையும் உம்முடன் அழைத்துக் கொண்டு செல்லும்.*

***கீரந்தை :*** *அன்பிற்குகந்தவளே ! இங்கிருந்து காசி பல மைல்களுக்கு அப்பால் உள்ளது. கால் நடையாகச் செல்லப் பல மாதங்கள் ஆகும், வழியிலே ஆங்காங்கு எண்ணற்ற இடுக்கண்கள் பல இருக்கின்றன. அ வ்விடுக்கண்களுக்கு எல்லாம் உன்னை உட்படுத்த நான் விரும்பவில்லை ஆனால், நானோ எ வ்வாறாகிலும் அவ்விடுக் கண்களைப் பொருட் படுத்தாது, போய்க் கொண்டிருப்பேன், அஃதன்றியும், நீண்ட நாட்கள் மெல்லியளாகிய உன்னால் நடக்கவும் இயலாது, உன்னைப் பிரிய மனமில்லாதிருந்தும், காசி விசுவநாதரை வணங்கும் பேரவாவே தனிமையாக என்னைச் செல்லத் தூண்டிற்று ஆதலின் உன்னுடைய கணவனாகிய என் சொல்லுக்கு மறுப்பு கூறாமல் நீ வீட்டிலேயே அமைதியாக இருக்க வேண்டும்.*

***மனைவி :*** *அன்பரே ! நீர் கூறுவதை நான் முற்றும் ஆமோதிக்கின்றேன். இப்பாண்டிய நாட்டில் எ வ்வாறு நான் துணையின்றி இருப்பேன்? நீர் வரும் வரையில் என்னை ஆதரிப்போர் யார் இந்த நாட்டில் இருக்கின்றனர் ? எனவே தயவு செய்து என்னுடைய விருப்பப்படி என்னையும் உம்முடன் அழைத்துச் செல்லுமாறு வேண்டுகிறேன்.*

©KTBS Not to be republished

**கீரந்தை :** பெண்ணே ! ஒரு கற்புடைக் காரிகைக்கு ஆதரவுடையோர் யாரும் இல்லா விட்டால், அந்நாட்டுக் காவலன் அவளை ஆதரவாளர் வரும் வரையில் ஆதரித்து காப்பாற்ற வேண்டும் என்பது நமது பண்டைய சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதே ! இதைப் பற்றி நீ அறியவில்லையா ?

எனவே உனக்கு உற்ற துணையாருமில்லை என்று கருதுவது மிகவும் குற்றமுடையதாகும். நம் நாட்டு மன்னன் குலசேகரன் குடிகளுக்குத் தாய் போன்றவன், குடிகளின் நலன்களிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்து, அவர்களுக்கு அவ்வப்போது ஆவன செய்து வருவது கண்கூடு ஆகையினால், பாண்டியன் உனக்கு உற்ற துணை புரிவான். ஒரு சிறிதும் நீ ஐயம் கொள்ள வேண்டாம், எதற்காகவும் அஞ்சவும் வேண்டாம், நான் காசி சென்று வருவதற்கும் முழு மனதுடன், நீ விடையளிக்க வேண்டுகிறேன்.

கீரந்தையின் மனைவியும் கணவனைப் பிரிய விருப்பம் இல்லாதவளாய் அரை மனதுடன் கணவனுக்குப் போக விடை தந்தாள், மனைவியினிடமிருந்து விடை பெற்ற கீரந்தை பொழுது புலர்வதற்கு முன் இல்லத்தினின்றும் அகன்று, யாத்திரை சென்றான்.

இதுவரை கணவன் மனைவி உரையாடல்களைக் கேட்ட பாண்டிய மன்னன், கீரந்தை தன்னிடம் எத்தகைய நம்பிக்கை வைத்திருக்கின்றான் என்பதை நன்கு உணர்ந்தான். எ வ்வாறேனும் அப் பெண்ணை அவள் கணவன் வரும் வரையில் பாதுகாப்பது தன்னுடைய கடமையாகும் என்று எண்ணி, யாரும் அறியாவண்ணம் அரண்மனையை அடைந்தான்.

கீரந்தையின் மனைவிக்கு ஏதேனும் உதவி செய்தால், குடிகள் அவள் மீது சந்தேகம் கொள்வார்களே ! கற்புடைய பெண்மணிக்கு இந்தச் செய்கையினால் அவச் சொல் உண்டாகுமே ! இதற்கு என்ன செய்வது ? என்னும் நினைவு அரசனுக்கு உண்டாகியது. இவளுக்கு தனியாக உதவி செய்தால் அல்லவோ இத்தகைய அவச் சொல் உண்டாகும் ? இவ்வீதியில் உள்ள அனைவருக்கும் உதவி செய்தால்

©KTBS Not to be republished

யாரும் அவள் மீது சந்தேகம் கொண்டு புறங்கூற மாட்டார்கள், என்று எண்ணினான்.

பொழுது புலர்ந்தது, பாண்டியன் அவ்வீதியிலுள்ள யாவருக்கும் உண்டிக்கு வேண்டிய பொருள்களையும், ஏனைய பொருள்களையும் கொடுக்குமாறு சேவகர்களுக்கு ஆணையிட்டான். அவர்களும் அவ்வாறே செய்தனர். அன்று முதல் நகர்ச் சோதனையின்போது ஒவ்வொரு இரவும் யாரும் அறியாமல் கீரந்தையின் இல்லத்தைக் காவல் புரிந்து வந்தான். இவ்வாறு திங்கள் பல சென்றன, வழக்கம் போல் ஒரு நாள் அந்த வீதிக்குச் சென்றான். கீரந்தை வீ ட்டை நெருங்கினான் ; துணுக்குற்றான், வீட்டினுள் விளக்கு வெளிச்சம் மங்கலாகத் தெரிந்தது. உள்ளே ஆடவரின் குரல் மெல்லியதாகக்கேட்டது. கேட்ட பாண்டியன் பதறினான். என் காவலையும் மீறி எவனோ கள்வன் இந்த வீட்டில் நுழைந்திருக்கிறான். இதுகாறும் காத்த காவல் வீணாயிறறே ! என் காவலையும் மீறி நுழைந்த கள்வன் யார் ? என்பதை அறிந்து கொள்ள நினைத்து, அந்த வீட்டின் கதவைத் தட்டினான்.

ஆனால் மன்னன் நினைத்ததற்கு மாறுபாடாய் இருந்தது. காசி யாத்திரையிலிருந்து அப்பொழுது தான் திரும்பி வந்த கீரந்தை கதவு தட்டும் அரவம் கேட்டு திடுக்கிட்டு, இந்த நள்ளிரவில் யாரவன் கதவை தட்டுவது ? என்று அதிகாரத்துடனும் ஆங்காரத்துடனும் கேட்டான்.

கீரந்தையின் குரல் கேட்ட, கோமகன் பாண்டியன், தன்னுடைய நிலை அறிந்தான், என்ன காரியம் செய்து விட்டேன்? அந்த நள்ளிரவில் கதவைத் தட்டினால் இவன் கற்பிற் சிறந்த தன் மனைவி மீது சந்தேகங் கொள்வானே ! இத் துன்பத்திலிருந்து தப்புவது எவ்வாறு ? என்று சிறிது நேரம் யோசித்தான். பின்பு அவ்வீதியில் உள்ள எல்லா வீட்டின் கதவையும் தட்டிக் கொண்டு சென்று அரண்மனையை அடைந்தான்.

©KTBS Not to be republished

அவ்வீதியில் எல்லா வீட்டின் கதவுகளும் தட்டப் படுவது கண்டு யாவரும் அச்சம் கொண்டனர். யாரோ வீணன் இந்த அக்கிரமம் செய்தான், பொழுது விடிந்ததும் இதைக் காவலனுக்கு அறிவுறுத்தி, அவனைத் தண்டிக்க வேண்டும் என்று உறுதி பூண்டனர். அவ்விரவு முழுவதும் கண் துஞ்சாமல் காத்துக் கொண்டிருந்தனர்.

அடுத்த நாள் காலை யாவரும் அரண்மனைக்குச் சென்றனர், தம் வரவை மன்னனுக்கு அறிவித்தனர்.

முற்றும் உணர்ந்த பாண்டியன் ஒன்றும் அறியாதவன் போல் அரண்மனையை அடைந்தான், அவர்களின் வருகைக்குக் காரணம் என்ன என்று கேட்டான். உடனே அவர்கள் "தீயோரை அழிக்கும் காவலனே ! நேற்றிரவு முற்பகுதியில் எவனோ ஒரு தீயோன் எங்கள் வீதியிலுள்ள எல்லா இல்லங்களின் கதவுகளைக் காரணம் இன்றி தட்டிச் சென்றான். இதுவரை நடைபெறாத இச்செயல் இப்பொழுது நடைபெறுவதற்கு என்ன காரணம் ? கயவன் யார் என்று அறிந்து கொள்ள வேண்டும். அக்கயவனை விசாரித்து தக்க தண்டனை அளிக்க வேண்டும். இதுவே எங்கள் அனைவரின் விருப்பம் என்று கூறி மன்னனின் முகம் நோக்கி ஆவலாயிருந்தனர்.

ஊரார் ஆவலை அறிந்த மன்னன் தன் அவையினரை நோக்கினான். நீதி முறை தெரிந்த அறிவுடையீர் ! இது காறும் இவர்கள் கூறியதைக் கேட்டீர்கள். அந்தக் கொடியவனை விசாரித்து தண்டனை அளிப்பது நம் கடமையாகும். எனவே நன்கு ஆராய்ந்து அத்தீயோனுக்கு என்ன தண்டனை அளிக்கலாம் என்று தெளிந்து கூறுங்கள் என்று கூறினான்.

அவையில் அமைதி நிலவியது. நீதி நூல் வல்லார் நன்கு ஆராய்ந்து மன்னனை நோக்கி, தருமம் காக்கும் தலைவரே ! கதவுகளைத் தட்டின அக்கயவனது கைகளைத் துண்டித்து விடுவதே தக்க தண்டனையாகும், என்று ஒரு முகமாகக் கூறினார்.

©KTBS Not to be republished

பாண்டியன் களிமிகக் கொண்டு திடீரென்று இருக்கையில் இருந்து எழுந்து, அவையினரை நோக்கி, " இல்லங்களின் கதவைத் தட்டிய கயவன் யானே ! நீங்கள் விதித்த தண்டனை எனக்கே உரியது'' என்று கூறி யாவரும் எதிர்பாராத வண்ணம் தன் உடைவாளால் தன்னுடைய வலக் கரத்தை வெட்டித் தள்ளினான்.

மன்னன் செயல் கண்ட அறவோரும் ஊராரும் மிதியுண்ட நாகம் போல மெய் நடுக்க முற்றனர். மன்னன் நடந்ததை விளக்கிக் கூறினார், மன்னர் உள்ளிட்டோர் அனைவரும் சொக்கர் கோவிலுக்குச் சென்று மன்னன் கை வளர அருளுமாறு வேண்டினர், சொக்கரும் கை வளர அருள் கூர்ந்தார், யாவரும் பார்த்துக் கொண்டிருக்கையில் மன்னன் கை பொன் கையாக வளர்ந்தது. ஆகவே அன்று முதல் குலசேகரப் பாண்டியனுக்கு 'பொற்கைப் பாண்டியன்' என்ற பெயர் வழங்கப் பட்டது.

**நூல் குறிப்பு :**

இக்கதை எம்.பி.ஆர் அவர்கள் எழுதிய நீதிக் கதைகள் என்ற நூலிலிருந்து எடுக்கப் பட்டது.

**ஆசிரியர் குறிப்பு :**

நீதிக் கதைகள் என்ற நூலை எழுதியவர் எம்.பி.ஆர், இவர் சிறுவர்க்கான பல நீதிக் கதைகளை எழுதியுள்ளார்.

**பயிற்சி**

**I. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1) கை குறைத்த தென்னவன்

அ) சேரன் ஆ) பாண்டியன்

இ) சோழன் ஈ) பல்லவன்

©KTBS Not to be republished

2) பாண்டியர்களின் தலைநகரம்

அ) கோவை ஆ) மதுரை

இ) சேலம் ஈ) தஞ்சை

3) கீரந்தை எந்த ஊருக்குச் சென்று வருகிறேன் என்று தன் மனைவியிடம் சொன்னான் ?

அ) காசி ஆ) வாரணாசி

இ) அவிநாசி ஈ) தென்காசி

4) தினமும் மாறு வேடத்தில் நகர் வலம் வந்த மன்னன்

அ) குலசேகரன் ஆ) தனசேகரன்

இ) கரிகாலன் ஈ) ராசராசன்

**II. கோடிட்ட இடத்தை நிரப்பக :**

1) விசுவநாதரை, 2) பெண்டிர், 3) கள்வன், 4) கதவை, 5) துண்டித்து.

1) ................ வணங்கினால் தான் மனிதப் பிறவியால் உண்டான பயன் ஏற்படும்.

2) என் காவலையும் மீறி எவனோ ................ வீட்டில் நுழைந்திருக்கிறான்.

3) பின்பு அவ்வீதியில் உள்ள எல்லா வீட்டின் ................ தட்டிச் சென்றான்.

4) அக் கயவனது கைகளை ................ விடுவதே தக்க தண்டனையாகும்.

**III. பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1) | குலசேகரன் | பாண்டியரின் தலைநகரம் |
| 2) | கீரந்தை | விசுவநாதர் |
| 3) | காசி | மன்னன் |
| 4) | மதுரை | அந்தணன் |

©KTBS Not to be republished

**IV. ஒரு வாக்கியத்தில் விடையளி :**

1) குலசேகர பாண்டியனை எவ்வாறு அழைத்தனர் ?

2) தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் யார் ?

3) அந்தணனின் பெயர் என்ன ?

4-) பாண்டியர்களின் தலைநகரம் எது ?

5) கீரந்தை எந்த ஊருக்குச் சென்று வந்தான் ?

6) நாட்டு மக்களுக்குப் பாண்டியன் யாரை போன்று விளங்கினான் ?

**V. மூன்று வாக்கியங்களில் விடையளி :**

1) பாண்டிய மன்னன் எத்தகையவன் ?

2) கீரந்தையின் மனைவி தன் கணவனிடம் கூறியது யாது ?

3) மக்கள் மன்னனிடம் செய்த புகார் யாது ?

4) பாண்டிய மன்னன் தன் அவையினரை நோக்கிக் கூறியது யாது ?

**VI. ஐந்து வாக்கியங்களில் விடையளி :**

1) பாண்டிய மன்னனின் குண நலன்களைக் கூறுக ?

2) குலசேகர மன்னன் எவ்வாறு ஆட்சி செய்தான் ?

3) கீரந்தை தன் மனைவியிடம் என்ன கூறினான் ?

4) கீரந்தை காசி சென்றவுடன் மன்னன் அவன் மனைவிக்கு எவ்வாறு உதவி செய்தான் ?

**VII. பத்து வாக்கியங்களில் விடையளி :**

1) கீரந்தை தன் மனைவியிடம் உரையாடியதை விவரி

2) பாண்டிய மன்னன் செய்த செயலையும், அவன் வழங்கிய தீர்ப்பையும் விவரி

3) 'கை' குறைத்த தென்னவன் மூலம் நாம் அறியும் கருத்து (நீதி) யாது ?

4) மன்னன் நகர் வலம் வந்த போது நடந்த நிகழ்ச்சியினை விளக்குக.

©KTBS Not to be republished

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :**

1) "அன்புடையவளே ! நீண்ட நாட்களாக எனக்கு ஓர் ஆவல் இருக்கிறது ?

2) தீயோரை அழிக்கும் காவலனே !

**IX. மொழிப் பயிற்சி :**

**சேர்த்து எழுதுக :**

1) கண் + இமை  2) செம்மை + தமிழ்  3) பூ + மாலை

4) பத்து + பாட்டு  5) எட்டு + தொகை

**பிரித்து எழுதுக :**

1) இன்சொல்  2) எளிதரிது  3) உரையதனை

4) நல்லினம்  5) அருமறை

**எதிர்ச் சொல் தருக :**

1) உள்ளே  2) பகை  3) பகல்  4) ஏழை  5) கணவன்

**வாக்கியத்தில் அமைத்து எழுதுக :**

1) சுதந்திரம்  2) கம்பி நீட்டினான்  3) இனிமையாக

4) விருப்பப்படி  5) மூவேந்தர்கள்

**எழுத்து வேறுபடுவதால் பொருள்மாறுபடுதல் :**

1) மணம் – மனம்  2) கலை – களை

3) மரம் – மறம்  4) அரம் – அறம்

**வாக்கியத்தில் உள்ள பிழை அறிதலும், நீக்குதலும் :**

1) மானம் பார்த்த பூமி

2) நீரை ரொப்பு

3) வெங்கலக் கடையில் ஆனை புகுந்தது

© KTBS Not to be republished

# 4. கணிப்பொறி

– முனைவர் ம சரோஜா
– முனைவர் உ. அனார்க்கலி



(இறைவனின் அரியபடைப்பு மனிதன். அவன் தனது திறமையாலும், கற்பனை ஆற்றலாலும் வாழ்க்கை முறையை எளிமையாக்க, வசதியாக வாழப் பல அரிய அறிவியல் விந்தைகளைக் கண்டுபிடித்தான். அப்படிப்பட்ட அறிவியல் கண்டுபிடிப்புகளில் ஒன்று கணிப்பொறி)

**கணிப்பொறி – அறிமுகம்**

இன்றைய நவநாகரீக உலகில் கணினியின் தேவை மிக வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. அதனால் ஒவ்வொரு மனிதனும் இன்றைய கால கட்டத்தில் கணினியின் பயனை உணர்ந்து கொள்வது மிக மிக அவசியமே.

சார்லஸ் பாபேஜ் 1985 – ஆம் ஆண்டு முதல் கணினியைக் கண்டுபிடித்தார். கணினி முதலில் ஒரு பெரிய அறையையே அடைத்துக் கொள்ளும் அளவிற்கு இருந்தது. ஆனால் இன்று ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லும் அளவிற்கு சுருங்கி சிறிய கால்குலேட்டர் வடிவில் வந்துவிட்டது.

**கணிப் பொறியின் வகைகள் :**

கணிப்பொறியை சிஸ்டம் (System) என்ற சொல்லாலும் குறிப்பிடுகின்றனர். சிஸ்டம் என்பது கணிப்பொறியில் உள்ள ஒன்று சேர்ந்த பாகங்கள் ஆகும்.

ஏதாவது பொதுவான நோக்கம் அல்லது கருத்தைக் கொண்டு செயல்படுவதே சி ஸ்டம் எனப்படும்.

©KTBS Not to be republished

## கணிப்பொறியின் முக்கிய வகைகள் :

**I.** தனிநபர் கணிப்பொறி (Personal Computer)

**II.** சிறு கணிப்பொறி (Mini Computer)

**III.** சூப்பர் கணிப்பொறி (Super Computer)

### I. தனிநபர் கணிப்பொறி

இக்கணிப்பொறி இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

*1)* மேசைக் கணிப்பொறி (Desktops)

*2)* மடித்து எடுத்துச் செல்லும் கணிப்பொறி/மடிக்கணினி (Portable/Laptop)

### 1) மேசைக் கணிப்பொறி (Desktops)

இது கையில் எடுத்துச் செல்ல முடியாத தனிநபர் கணிப்பொறியாகும். இது உலகில் அ திகமாகப் பயன்படுத்தப்படும் கணிப்பொறியாகும். கடைகள், அலுவலகங்கள், பேருந்து நிலையங்கள், புகைவண்டி நிலையங்கள் போன்ற எல்லா இடங்களிலும் பரவலாக இது பயன்பாட்டில் உள்ளது.

### 2) மடித்து எடுத்துச் செல்லும் கணிப்பொறி/மடிக்கணினி (Portable / Laptop)

பயணம் செய்யும் போதும், முக்கிய வேலைகளுக்காக வெளியில் செல்லும் போதும் கையில் எடுத்துச் செல்வதற்காக தயாரிக்கப்பட்டது இவ்வகைக் கணிப்பொறியாகும்.

### II. சிறு கணிப்பொறி (Mini Computer)

சிறு கணிப்பொறி அளவில் பெரியதாகவும், பொதுவான காரியத்திற்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. இது தனி நபர் கணிப்பொறியை விட அதிக விலை உள்ளது. வேகமாகச் செயல்படக் கூடியது. அதிகமான விபரங்களை இதில் சேமித்து வைக்கலாம். பெரிய நிறுவனங்களில் தகவல் சேமிப்புச் செயல்பாடுகளுக்கு (Data Processing) இக்கணிப்பொறி

©KTBS Not to be republished

பயன்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் இதைப் பயன்படுத்த முடியும்.

### III. *சூப்பர் கணிப்பொறி* (Super Computer)

இது எல்லாக் கணிப்பொறிகளையும் விடத் திறமையாகச் செயல்படக் கூடியது. அளவில் பெரியது. அதிக விலை கொடுத்து வாங்கக் கூடியது. அறிவியல், தொழில்நுட்பத் துறைகளில் மிகுதியாகப் பயன்படுகிறது. அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு இது பெரிதும் உதவுகின்றது.

### *ஊடகப்பணிகளில் கணிப்பொறியின் பங்கு :*

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியினால் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் அனைத்துத் துறைகளிலும் கணிப்பொறி இடம் பெறுவது அவசியம். ஊடகங்கள் மக்களுக்குப் பலதுறைகளின் தகவல்களைக் கொண்டு சேர்க்கின்றன. விரைவுத் தன்மை ஊடகங்களுக்குத் தேவையான பண்புகளில் தலையாயது. அந்த விரைவுத் தன்மைக்குக் கணிப்பொறி உகந்தது. ஊடகப் பணிகளில் கணிப்பொறி பெரும்பங்கு வகிக்கின்றது.

### *அச்சுப்பணியில் கணிப்பொறி :*

அச்சுக் கோர்க்கும் பணி என்பது ஒவ்வொரு எழுத்தாகக் கோர்க்கும் கடினமான பணியாக இருந்தது. அந்தக் கடினமான பணியினைக் கணிப்பொறி மிக வேகமாகச் சில நிமிடங்களில் செய்து முடிக்கும்.

அச்சுக்கோர்க்கும் பணிமட்டுமல்லாமல் செய்திகள் தொடர்பான படங்கள் வரைவது, அட்டைப் படங்களை வடிவமைப்பது போன்ற பணிகளையும் கணிப்பொறியின் உதவியால் எளிதாகச் செய்ய முடியும்; மற்றும் புகைப்படக் கலைஞர், ஓவியர் போன்ற பலரது பணிகளையும் கணிப்பொறி எளிதாக்குகின்றது.

அச்சுக்கோர்த்தல், பக்க ஒருங்கமைப்பு, புகைப் படங்கள், வரைகலைகள், வருடல், ஓவியம் போன்ற அனைத்துப்

©KTBS Not to be republished

பணிகளையும் ஒரே அறையில் அமர்ந்து செய்ய முடியும். கடினமான உடல் உழைப்பு, மூளை உழைப்பு இல்லாமல் இந்தப் பணிகளைச் செய்யலாம். இப்பணிகளைச் செய்து பொருளீட்டவும் முடியும்.

**தகவல்களைத் திரட்டுவதில் கணிப்பொறியின் பங்கு :**

ஊடகங்கள் தகவல்களைத் திரட்டுவதில் முனைப்புடன் செயல்படுகின்றன. இப்பணி அச்சு வழி, மின்வழி என அனைத்து ஊடகங்களுக்கும் பொதுவானதாகும். அச்சுவழியில் உடனடிச் செய்திகளைப் பெறமுடிகின்து. மின்வழி ஊடகங்களும் உடனடியாக மட்டுமன்றி, நேரடியாகவும் நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றன.

செய்திகளை மின்அஞ்சல் மூலம் (e-mail) அவ்வப்போது அனுப்ப முடிகின்றது. கணிப்பொறி மூலம் தகவல்கள் மட்டுமல்ல படங்களும் அனுப்பப்படுகின்றன. காட்சிப்படப் பதிவுகளும் மின்னஞ்சல் மூலம் பெறப்படுகின்றன. குறைவான செலவில் இணைய சேவையைப் பெறமுடியும். ஊடக அலுவலகத்திலிருந்து அவ்வப்போது வரும் தகவல்களையும் மின்னஞ்சல் மூலம் பெற்றுச் செயலாற்ற முடியும். செய்தியாளர்களுக்கு இணையச்சேவை ஒரு நற்பேறாகும்.

நேர்காணல் நிகழ்ச்சிகளை இணையம் மூலம் உலகின் எந்த மூலையில் உள்ளவருடனும் நடத்த முடியும். நேரலை நிகழ்ச்சிகளாக ஒலி, ஒளி பரப்பவும் முடியும். கணிப்பொறி இணையத் தொடர்பு வாயிலாக எந்த ஒரு நிகழ்ச்சியையும் அது நிகழ்ந்து கொண்டிருக்கும்போதே உலகுக்கு நேரடியாக உணர்த்தும் உன்னத வளர்ச்சியை இதழியல் உலகம் பெற்றுள்ளது.

ஒரு கணிப்பொறியின் மூலம் பல நாளிதழ்கள், வார, மாத இதழ்கள், பல வானொலி அலைவரிசைச் சேவைகள், பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்தையுமே பெறமுடியும.

©KTBS Not to be republished

செய்தியாளர்கள் மடிக் கணினியுடன் (Laptop) சென்றால் உடனுக்குடன் தகவல் பதிவுகள், தகவல் அனுப்புகை, பலவழித் தகவல் தொடர்பு போன்ற பணிகள் மிகவும் எளிதாகிவிடும். இணையத்தொடர்பு இன்று உலகையே நம் கைக்குள் அடக்கி விடுகின்றது.

## ஆசிரியர் குறிப்பு :

இப்பாடத்தின் ஆசிரியர்கள் முனைவர்.ம. சரோஜா மற்றும் முனைவர் உ. அனார்க்கலி ஆவர். முனைவர் ம. சரேஜா மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினராகப் பணியாற்றி உள்ளார். இவரது 30–க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் பல்வேறு ஆய்விதழ்களில் வெளிவந்துள்ளன. இவர் கல்வி வல்லுநர்.

முனைவர். உ. அனார்க்கலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முதுநிலைத் தமிழ்ப் பாடத்திட்டக்குழு உறுப்பினராய் உள்ளார். 1998–2000 ஆண்டுகளில் ம.சு. பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். சிறந்த பட்டிமன்றப் பேச்சாளர்.

## நூல் குறிப்பு :

'மின் ஊடகப் படைப்புக்கலை' என்னும் நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் ஆகஸ்டு 2010–இல் வெளிவந்துள்ளது.

### பயிற்சி

## தமிழுக்கு இணையான ஆங்கிலச் சொற்கள் :

கணினி – Computer ; இணையம் – Internet

மின் அஞ்சல் – E-mail ; நேர்காணல் – Interview

©KTBS Not to be republished

***சேர்த்து எழுதுக :***

மடி + கணினி ; நாள் + இதழ் ; மின் + அஞ்சல் ; நேர் + காணல் ; இணையம் + தொடர்பு

***எதிர்ச் சொல் தருக :***

எளிமை ; வேகம் ; பெரியது ; தொடர்பு ; வளர்ச்சி

***கோடிட்ட இடத்தை நிரப்புக :***

1) கணிப்பொறி ................. வகைப்படும்.

2) கணினியைக் கண்டுபிடித்தவர் ................. ஆவார்.

3) நவநாகரீக உலகில் ................. தேவை அவசியம்.

4) ஊடகங்களுக்குத் தேவையான தலையாய பண்பு ..........

5) செய்திகளை ................. மூலம் அனுப்ப முடிகின்றது.

6) இணையச் சேவை ஒரு .................

**I. *ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :***

1) கணிப்பொறியின் முக்கியவகைகள் யாவை ?

2) மேசைக் கணிப்பொறி எங்கு பயன்படுத்தப்படுகிறது ?

**II. *மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :***

1) தனிநபர் கணிப்பொறியின் இரண்டு பிரிவுகளினைக் கூறுக.

2) பெரிய நிறுவனங்களில் சிறு கணிப்பொறியின் செயல்பாடு யாது ?

3) யாருடைய பணிகளைக் கணிப்பொறி எளிதாக்குகிறது?

4) மடித்துச் செல்லும் கணிப்பொறி என்றால் என்ன ?

©KTBS Not to be republished

## III. *ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :*

*1)* சூப்பர் கணிப்பொறி என்றால் என்ன ? விளக்குக.

*2)* அச்சுப் பணியில் அறையில் அமர்ந்து செய்யும் வேலைகள் எவை ?

*3)* தகவல் திரட்டுவதில் கணிப்பொறியின் மூலம் எந்தெந்த நிகழ்ச்சிகளைப் பெறமுடியும் ?

*4)* செய்தியாளர்களுக்கு மடி க்கணினியுடன் சென்றால் எ□ளிதாகும் பணிகள் எவை ?

## IV. *பத்து வரிகளில் விடை எழுதுக :*

*1)* கணிப்பொறியின் மூன்று வகைகளை விளக்கி எழுதுக.

*2)* அச்சுப்பணியில் கணிப்பொறியின் பங்கினைக் கூறுக.

*3)* தகவல் திரட்டுவதில் அமையும் கணிப்பொறியின் முக்கிய செயல்பாடுகள் இரண்டினை விளக்குக.

*4)* ஊடகப்பணிகளி ல் கணிப்பொறி ஆற்றும் பங்கினை விளக்கி வரைக.

### *செயல்பாடு :*

ஒரு நண்பருக்குப் பிறந்த நாள் வாழ்த்தினை மின் அஞ்சல் மூலம் அனுப்புக.

©KTBS
Not to be republished

# 5. போர் துறந்த புனிதர்

– தே.ப. பெருமாள்

(அசோகன் கலிங்கப் போர் புரிந்து வெற்றி பெற்ற பின்பு சங்கமித்திரை (அசோகனின் மகள்) போரின் கொடுமை குறித்து விளக்குகிறாள். வெற்றி இறுமாப்புடன் இருந்த அசோகன் போரின் கொடுமை பற்றி உணர்ந்து மனமாற்றம் அடைகின்றான். போரைக் கைவிடும் நிலைக்குத் திருந்துகின்றான். சங்க மித்திரையின் தெளிவான உரையாடல் நாடகத்தின் உயிர் நாடியாக மிளிர்கிறது.)

போர்க் கொடுமையின் சின்னம் ஆயிரக்கணக்கான உயிர்களையும் அளவற்ற செல்வத்தையும் அழிக்கும் அரக்கனாக அமைகின்றது. இன்று நாம் போரை நாகரிகத்தின் எதிரியாகக் கருதுகிறோம். ஆனால் போர் ஒரு காலத்தில் அரசர்களின் வாழ்க்கை முறையாக இருந்தது. அன்றும் போரை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியவர் இருந்தனர். அதனால் போரைத் துறந்தான் ஒரு மன்னன்)

காலை நேரம். அரண்மனையில் தனியாக வீற்றிருக்கிறான் அசோகன். அவன் மனம் குழம்பிக் கொண்டிருப்பதை அவனது முகத் தோற்றம் எடுத்துக் காட்டுகிறது.

காவலன் ஒருவன் வந்து நகைப் பெட்டி ஒன்றை மன்னவன் கையில் கொடுத்து வணங்கிச் செல்கிறான்.

சங்க மித்திரையை அழைத்து வர அங்கே வந்த பணியாளிடம் கட்டளையிடுகிறான் மன்னன். அவன் ஓடோடிச் சென்று அந்தப் புரத்தை அடைகிறான்.

சிறிது நேரத்தில் சங்கமித்திரை அங்கே வந்து தன் தந்தையை வணங்கிக் கொண்டு நிற்கிறாள். மன்னன் அவளைத் தன்னருகில்

Not to be republished ©KTBS

அமர்த்திக் கொள்கிறான்.

அசோகன் : என் அருமை மகளே. பார்த்தாயா ? இந்த நகைகள் வேலைப்பாடு கொண்டவை எளிதில் எங்கும் பெற முடியாதவை.

சங்கமித்திரை : அப்படியா ?.... தங்களுக்கு இவை எவ்வாறு கிடைத்தனவோ ?

அசோகன் : இவையனைத்தும் நமக்குக் கலிங்கத்திலிருந்து கிடைத்தவை.

சங்கமித்திரை : யாரேனும் அன்பளிப்பாகத் தந்தவையோ ?

அசோகன் : (நகைத்துக்கொண்டே) உன் கேள்வி வேடிக்கை யாக இருக்கிறதே யாரேனும் அன்பளிப்பாகத் தருகின்ற பொருள்களா இவை !

சங்கமித்திரை : தந்தையே ! பின் எவ்வாறு இவை தங்களுக்குக் கிடைத்தன ?

அசோகன் : மகளே! நமது வீரர்கள் கலிங்கத்திலிருந்து கொண்டு வந்தவை.

சங்கமி : இதை அறியவே நானும் விரும்பினேன். அவர்கள் இவற்றை எப்படிக் கொண்டு வந்திருப்பார்கள் ? சூறையாடியே கொண்டு வந்திருக்க வேண்டும் ! இந்நகைகளை அணிந்திருந்தவர்கள் இப்போது ஒரு வேளை இறந்து கூட இருக்கலாம். இல்லையா தந்தையவர்களே ?

அசோகன் : இவற்றையல்லாம் நாம் நினைத்துக் கொண்டிருக்க முடியுமா ? போரில் சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சிகள் தாம் இவை! நமது கையில் கிடைத்திருக்கும் அந்தப் பொருள்களுக்கு நாம் இப்போது

©KTBS Not to be republished

உரிமையாளர்கள். இவற்றை நாம் பயன் படுத்திக் கொள்ளலாம்.

சங்கமி : நீங்கள் நாட்டைக் காக்கும் மன்னரல்லவா ?

அசோகன் : (நகையரும்பியவண்ணம்) என் மகளே ! இதில் உனக்குச் சந்தேகமா ?

சங்கமி : தந்தையே ! நான் பேசியபேச்சுக்கள் தங்கள் மனதைப் புண்படுத்தியிருந்தால் என்னை மன்னிக்க வேண்டும். எப்போதும் நான் எதிர் வாதிட்டுப் பேசுகின்றவள். இது தந்தையவர்களுக்கும் தெரியுமே ?

அசோகன் : என் அருமைப் புதல்வியே ! உனது பேச்சும் எதிர் கேள்விகளும் எனக்கு இன்பத்தையே அளிக்கின்றன. நீ எதையும் மனம் திறந்து பேசுகிறாய் ! களங்கமின்றி எதையும் கேட்டு விடுகின்றாய் ! உனது கேள்விகளும் பேச்சும் எனக்கு ஓர் அமைச்சரின் ஆலோசனைகளை விட அதிகம் பயனளிக்கின்றன. அம்மா ! எதையும் என்னிடம் மனம் திறந்து பேசலாம்.

சங்கமி : தந்தையே நாட்டைக்காக்கும் மன்னர்களின் உள்ளம் அன்பையும் இரக்கத்தையும் கொண்டிருக்க வேண்டாமா? என்று கேட்கிறேன்.

அசோகன் : அவசியம் கொண்டிருக்க வேண்டும். உன் தந்தையை நீ....

சங்கமி : அப்பா. தங்களை நான் ....

அசோகன் : அன்பும் அருளும் இல்லாத நெஞ்சம் கொண்டவன் என்று எண்ணுகிறாயா ?

சங்கமி : அப்பா, நான் தங்களை ஒரு போதும் அவ்வாறு

©KTBS Not to be republished

எண்ணவில்லை. தங்கள் இதய அன்புப் பாசக்கடலில் நான் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருப்பவள். ஆனால் அண்மைக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தங்களைக் கொடியவராகக் காட்டிவிட்டன.

அசோகன் : கலிங்கப் போரை வைத்துத் தானே அதெல்லாம் பேசுகிறாய் ?

சங்கமி : ஆமாம், தந்தையே ! அது இலேசான கொலைக்காண்டமா ?

அசோகன் : கொலைக்காண்டம் என்று சொல்லாதே. யுத்தமென்றால் இப்படித்தான் இருக்கும். போரில் இத்தகைய கொடூர நிகழ்ச்சிகள் ஏற்படாமல் வெற்றி இல்லை. இது நமது முன்னோர்களின் யுத்த தர்மம் மட்டுமல்ல ; உலகம் முழுவதிலும் வரலாறு காட்டுகின்ற உண்மைகளே இவை !..... நாம் நமது அரசாங்கத்துக்கு ஓர் இலட்சியத்தை வகுத்துக் கொண்டோம். அதை வெற்றிகரமாக நிறைவேற்றினோம்.

சங்கமி : தந்தையே ! நம் அரசாங்கத்தின் இலட்சியம் என்ன?

அசோகன் : ஒரு பேரரசை உருவாக்குவது.

சங்கமி : பிற அரசர்களுடன் போராடி அவர்களை வென்று அவர்களது நாடுகளை நமது நாட்டோடு சேர்த்துக்கொள்ள வேண்டும். இது தானே இலட்சியம் ?

அசோகன் : ஆம். இதுவே இலட்சியம். ஆனால் இதை நாம் நிறைவேற்றுகிற வழியையும் நீ கவனித்துக்

©KTBS Not to be republished

கொள்ள வேண்டும் ! சங்கமித்திரை !

சங்கமி : எவ்வாறு தந்தையே ?

அசோகன் : பிற மன்னர்கள் நம் அரசுக்குக் கட்டுப்பட இணங்கிவிட்டால் போரே இல்லை. கலிங்க மன்னர் இறுமாப்பைக் காட்டி இழிவு படுத்தினார். எனவே தான் அங்கே போரைத் தொடங்கி வெற்றி கண்டோம்.

சங்கமி : மகதத்தின் மீது நமக்கும் நம் குடிகளுக்கும் எவ்வளவு பற்றுதலும் சுதந்திர வேட்கையும் இருக்கிறதோ அதைப்போலவே கலிங்க மன்னருக்கும் அந்நாட்டு மக்களுக்கும் இருக்கத்தானே செய்யும் ?

அசோகன் : .......

சங்கமி : ஏனப்பா மௌனமாக இருக்கிறீர்கள். என் கேள்விக்குத் தங்களிடமிருந்து பதில் இல்லையே? நாட்டுப் பற்றும் சுதந்திர வேட்கையும் அனைவருக்கும் உள்ள பொதுமை உணர்ச்சி தாமே ?

அசோகன் : மகளே ! வீரமாகப் போராடி வெற்றிக் கொடி நாட்டி புகழாட்சி நடத்த வேண்டுமானால் இந்தத் தத்துவங்களை ஒன்றும் கவனிக்க இயலாது. நமது சக்தியைக் கொண்டு, வாய்ப் பினைக் கொண்டு நம் நிலையை உயர்த்திக் கொள்ளவேண்டும்.

சங்கமி : நிலையை உயர்த்திக் கொள்வதை நான் மறுத்துப் பேசவில்லை தந்தையே ! உயர்வு என்பது மக்களின் மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த

©KTBS Not to be republished

வாழ்வையே குறிக்கும். நாம் உயர்வைத் தேடிக்கொள்ளும் போது அதனால் ஏனையவர்களுக்குத் துன்பமோ அழிவோ ஏற்படக் கூடாதல்லவா ! அப்பா, நான் தங்களிடம் இன்னொன்று கேட்கலாமா ?

அசோகன் : (புன்முறுவலுடன்) கேள்விகளைக் கேட்டுத்தான் நீ என்னை மடக்கிக் கொண்டிருக்கிறாயே ! எதை வேண்டுமானாலும் கேள் மகளே !

சங்கமி : கலிங்கத்தின் மீது நாம் தொடுத்த போரில் எத்தனை பேரப்பா இறந்திருப்பார்கள் ?

அசோகன் : நமது பக்கத்திலா ?

சங்கமி : இரு பக்கங்களிலுந்தான்.

அசோகன் : ஏறக்குறைய ஒரு லட்சம் பேர் இறந்திருப்பார்கள்.

சங்கமி : அப்பாடா, எவ்வளவு பயங்கரம் தந்தையே இந்தப் போரில் இறந்தவர்கள் தொகை ஓர் இலட்சத்திற்கும் மேலாக இருக்கிறது ! அத்தனை பேரையும் தங்களது ஆற்றல் கொன்று தீர்த்து விட்டது! இச்செயல் உங்கள் மொழியில் வீரம் என்றும் வெற்றி என்றும் போற்றப்படுகிறது !

அசோகன் : (குழம்பிய நிலையில்) நீ எதைப் பற்றி என்ன பேசுகிறாய். என்பதே எனக்குத் தெளிவில்லாமல் இருக்கிறது சங்கமித்திரை ?

சங்கமி : தந்தையே தங்கள் பேராற்றலைக் கண்டு இந்தியத் துணைக் கண்டமே நடுங்குகிறது தங்களால் உயிரிழக்கப்பட்டவர்கள் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள். தந்தையே ! இறந்த இந்தப் பெருந்தொகையினரில் யாரேனும் ஒருவருக்கு உயிர் கொடுத்துப் பிழைப்பித் எதுழவைத்து

©KTBS Not to be republished

விட்டீர்களானால் தங்கள் போராற்றலை நான் பெரிதும் மதிப்பேன்.

அசோகன் : செத்தவரை எழுப்பி விட நம்மால் முடியுமா ?

சங்கமி : அப்படியானால் பிழைத்து வாழும் ஒருவரைச் சாகடிக்கத் தங்களுக்கேது உரிமை ?

அசோகன் : என் மகளே ! இது என்ன வேடிக்கையான கேள்வி?

சங்கமி : இல்லையப்பா... விவேகமான கேள்வி ! இந்த உலகத்தில் உயிர்களைப் படைத்தவன் இறைவன். இதுவே ஞானிகள் கூறும் தத்துவம். அந்த உயிர்களை அழிக்கும் உரிமை இறைவனுக்கன்றி வேறு யாருக்கும் கிடையாது. (அசோக மன்னன் தன்சிந்தையில்அப்படியே அசைவற்றிருக்கிறான். தன் புதல்வியின் கேள்விகளுக்கு அவனால் பதிலளிக்க இயலவில்லை. சங்கமித்திரை தொடர்ந்து பேசுகிறாள்)

தந்தையே ! கலிங்கப் போரில் உயிர் இழந்தவர் தொகை ஓர் இலட்சத்துக்கும் மிகுதியென்று சொல்லப் பட்டது. தங்கள் உறவினர் இக்கொடிய போரில் இறந்தவர்கள் எல்லாரும் கண்ணீர்க் கடலில் மூழ்கிக் கதறித் துடிப்பார்களல்லவா ! ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் முதியவர்களும் தங்களைச் சபிக்க மாட்டார்களா? எத்தனை இளம் பெண்கள் மங்கல அணியை இழந்து விதவைக் கோலம் பூண்டு நெஞ்சுருகப் புலம்பிக் கொண்டிருப் பார்கள் ? எனக்குத் தரவிருக்கின்ற இந்த நகைகளை அந்தக் கைம்பெண்களுக்கும் கஞ்சிக்கே வழியின்றி வாடுகின்ற குடும்பங்களுக்கும் ஏழை எளியவர்களுக்கும்

©KTBS Not to be republished

பயன்பட அனுப்பிவையுங்கள். அப்பா ! தாங்கள் செய்த மாபெரும் கொடுமைக்கு இது ஒரு சிறு பரிகாரமாக கழுவாய் அமையலாம்.

அசோகன் : (தெளிவுடன்) சங்கமித்திரை. என் அன்பு மகளே, உன் நியாயம் மிக்க கேள்விகளால் என் அறிவை மூடியிருந்த இருள் படலம் அகன்றது. ஆயிரக்கணக்கானவர் பதினாயிரக் கணக்கானவர் இல்லை.... இலட்சக்கணக்கானவர் கொலையாகவும் குற்றுயிராகவும் ஆக நான் ஆளாகிவிட்டேன். நீ சொல்லியது போல் எத்தனையோ குடும்பங்களைச் சோக ஆற்றில் மித க்க விட்டு விட்டேன். கையிழந்தும் காலிழந்தும் கண்ணிழந்தும் பிற உறுப்புக் களையிழந்தும் ஆயிரமாயிரம் மக்கள் இந்த மண்ணகத்திலேயே நரக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவற்றுக் கெல்லாம் நான்தானே காரணம்! என் அறிவீனத்தால் என்னொருவனின் அகந்தைச் செயலால் எத்தனை மக்கள் மாண்டு மடிந்து போனார்கள். ஐயோ, தெய்வமே ! எனக்கு இனி விடுதலை - என் மனத்திற்கு அமைதி...

நான் பெற்ற அருள் செல்வமே ! அன்புத் திருமகளே ! இப்போது நடந்து முடிந்திருக்கிறதே இந்த கலிங்கப் போர். என் வாழ்வில் இதுவே முதல் போரும் முடிவுப் போரும் ஆகும். இனி உன்தந்தை இந்த அசோகன் (தன்னைச் சுட்டிக் காட்டியபடி) போர் செய்யப் போவதே இல்லை. அவனது ஆட்சி அன்பின் ஆட்சியாக ஒளிரப் போகின்றது. மக்கள் இந்த உலகில் வாழுகின்ற காலம்வரை போர்ப் பயம் இல்லாது மலர்ச்சியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டும்.

©KTBS Not to be republished

சங்கமி : அப்பா, அப்பா, நான் கேட்பது உங்கள் வாய் மொழி தானே !...

உங்கள் மனம் திருந்தி விட்டதா ?

அசோகன் : ஆம் ! மகளே என் கொள்கைகளை நிறைவேற்ற ஆணை பிறப்பிக்கின்றேன். அசோகனின் பழைய இலட்சியம் மாறி விட்டதென்பதையும் மலர்ந்துள்ள புதிய தர்மத்தையும் உலகுக்குப் பறை சாற்றுகிறேன். எங்கும் அமைதியும் மகிழ்ச்சியும் பெருக, வேண்டியன செய்யப்படும் மகளே ! நம் கொள்கைகளை – புதிய சித்தாந்தத்தை விளக்க எங்கும் ஆட்களை அனுப்பி வைப்போம்.

சங்கமித்திரை : தந்தையே ! தாங்கள் குறிப்பிடும் தன்மைகளே ஓர் உண்மையான அரசின் அழகுகள் ! பண்புகள்! சமாதானமும் சாந்தியும் நமது ஆட்சியில் மலருமாக ! (பல குரல்கள் முழக்கும் வாழ்த்தொலி தொலைவில் கேட்கிறது)

**நூல் குறிப்பு :** 'ஆறு ஓரங்க நாடகங்கள்' என்னும் நூலினின்று எடுக்கப் பெற்றது.

**ஆசிரியர் குறிப்பு :** இந்நூலின் ஆசிரியர் தே.ப. பெருமாள் ஒரு நாடக ஆசிரியர். கவிஞர், நாவலாசிரியர், மொழிபெயர்ப் பாளர். பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

**அருஞ்சொற் பொருள் :**

அண்மை – அருகில், இறுமாப்பு – கர்வம்,

வேட்கை – விருப்பம், அகந்தை – ஆணவம்

ஆணை – கட்டளை, பற்று – விருப்பம்

©KTBS Not to be republished

## பயிற்சி

**எதிர்ச்சொல் தருக :** அழிவு, அருமை, மண்ணகம்.

**பிரித்தெழுதுக**

கட்டளையிடுகிறான்

தெளிவில்லாமல்

இறைவனுக்கன்றி

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) காவலன் அசோகனிடம் என்ன கொடுத்துச் சென்றான்?

2) பணியாளிடம் அசோகன் என்ன கட்டளையிட்டார் ?

3) நகைகள் அசோகனுக்கு எங்கிருந்து கிடைத்தன ?

4) நாட்டைக் காக்கும் மன்னர் உள்ளம் எப்படியிருக்க வேண்டும் ?

5) கலிங்கப் போர் தொடுக்க அசோகன் கூறிய காரணம் என்ன ?

**II. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) கலிங்கப் போருக்கான காரணங்கள் குறித்து அசோகன் கூறியனவற்றை விளக்குக.

2) போரில் இறந்தவர்களின் குடும்பத்தினர் குறித்தும் அதற்குரிய கழுவாய் குறித்தும் சங்கமித்திரை கூறியதனைக் குறிப்பிடுக.

**தெரிந்து கொள்க :**

பீகார் மாநிலமும் அதையொட்டிய பகுதிகளையும் முற்காலத்தில் மகதநாடு என அழைத்தனர். இந்நாட்டை ஆண்ட அரசன் அசோகன். கலிங்கம் – இன்றைய ஒரிசாவைச் சேர்ந்த பகுதிகளே அன்று கலிங்க நாடாக இருந்தது.

©KTBS Not to be republished

# 6. அழகுமிகு அந்தமான்

**– திரு. முருகு சுப்பிரமணியம்**

(இப்பாடம் அந்த மான் தீவுகளைப் பற்றிய பயணக்கட்டுரை யாகும். அந்தமான் தீவுகளின் சிறப்பு பற்றியும் செல்லுலார் சிறை பற்றியும், பவளப்பாறைகள் பற்றியும் அழகாக வருணித்ததுடன் தனது பயண அனுபவத்தை நம்மிடம் பகிர்ந்திருக்கும் திறன் மிகவும் சிறப்பாக உள்ளது)

அந்தமான் நிக்கோபர் தீவுகள் வங்காள விரிகுடாக் கடலில் தென்கோடியில் அமைந்துள்ளன. ;சிறியதும் பெரியதுமாய் துண்டு துண்டான சங்கிலி போன்று ஒழுங்கற்ற நிலையில் அமைந்துள்ளன. இவை 'பொன்னொளியில் சிதறிக்கிடக்கும் பசுந்தீவுகள்' எனப் பெயர் பெற்றவை. இவற்றில் 38 தீவுகள் தான் மக்கள் குடியேற்றம் பெற்றுள்ளன. இன்னும் பெயரில்லாத மக்கள் குடியேறாத பாறைகளாக 556 உள்ளன. இவற்றில் 500-க்கும் மேற்பட்டவை மிகச் சிறியவை.

**வரலாற்றுக் குறிப்புகள் :**

முதன் முதலில் அந்தமான் நிக்கோபர் தீவுகளைப் பற்றிய குறிப்புகளை ஜெரினி, டாலமி முதலான கிரேக்க எழுத்தாளர்கள் தங்களுடைய நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த சீனநாட்டு புத்த பிட்சு டீசில் கி.பி. 851 - இல், தான் எழுதிய குறிப்பேட்டில் இத்தீவுகளை லங்பாலூரஸ் என்று குறிப்பிட்டுள்ளார்.

இத்தீவுகள் பற்றிய குறிப்புகள் தஞ்சைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. கி.பி. 1050-இல் சோழ மன்னர்களின் கடற்படையினர் இத்தீவுகளுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்பதையும் இதனை "நக்கவரம்" என்று குறிப்பிட்டுள்ளதையும் அறியலாம்.

©KTBS Not to be republished

**மேகபாட் நெஸ்ட் :**

சென்னையிலிருந்து எங்கள் கப்பல் போர்ட் பிளேயரை அடைய மூன்று நாட்களாயிற்று. சுற்றிலும் தீவுகள் தெரிந்தன. அந்தமானைச் சுற்றிலும் டால்பின் மீன்கள் உள்ளன என்று படித்திருக்கிறேன். டால்பின் மீன்கள் பலவற்றை அமெரிக்காவில் உள்ள கடல் உலகத்தில் (Sea world) கண்டு களித்திருக்கிறேன். அவை மனிதர்களுடன் பழகும் ஆற்றல் கொண்டவை மனிதன் கற்றுக் கொடுக்கும் அனைத்தையும் கற்றுக் கொள்ளும் திறம் படைத்தவை. கடலில் ஓரிரு கருமீன்கள் துள்ளிக் குதிப்பதைக் காண முடிந்தது.

நாங்கள் "மேகபாட் நெஸ்ட்" விடுதியில் தங்க முன்னரே ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. "மேகபாட் கூடு" என்று பெயர் வைக்கக் காரணமென்ன ? என்று எங்கள் சுற்றுலா மேலாளர் கிருஷ்ணமாச்சாரியை வினவினேன். அவர், "நிக்கோபர் காடுகளில் மேகபாட்" என்ற ஒருவகைப் பறவை உள்ளது. பழுப்பு நிறம் கொண்ட கோழிக் குஞ்சுவைப் போன்ற இப்பறவைக்கு சரியாகப் பறக்கவோ ஓடவோ தெரியாது. நம் ஊர் காடை கவுதாரியைப் போன்றது. இவ்வூரில் உள்ள சிறப்புப் பறவையின் பெயரை இவ்விடுதிக்கு வைத்துள்ளனர் என்றார்.

**ஜாலிபாய் பவளப் பாறைகள் :**

மறுநாள் ஜாலிபாய் என்றழைக்கப்படும் வாண்டூர் பவளத்தீவிற்குச் சென்றோம். அங்கிருந்து சிறு விசைக் கப்பல்களில் ஜாலிபாய் ரெட்ஸ்கின் (செந்தோல்) கான்கியூ (Conque) தீவுகளுக்குச் செல்லலாம். இத்தீவுகளில் ஆழம் குறைவாக உள்ள தண்ணீருக்கடியில் பல வண்ணப் பவளப் பாறைகள் நிறைந்துள்ளன. அத்துடன் வண்ண மீன்களும் கடல் உயிரினங்களும் துல்லியமான நீரில் இருப்பதைக் காணலாம். இத்தகைய பவளப் பாறைகளை அமெரிக்காவில் பிளோரிடா

©KTBS Not to be republished

மாநிலத்தை ஒட்டியுள்ள கடற்கரைகளிலும் தீவுகளிலும் காணலாம். ஜாலிபாய்த் தீவில் நீந்துவதற்கும் காற்று வாங்கியை முகத்தில் அணிந்து நீரில் மூழ்கி பவளப் பாறைகளைக் கண்டு களிக்கவும் ஒன்று கூடி உண்டு மகிழவும் மக்கள் செல்வர். நாங்கள் அடிப்பாகம் கண்ணாடியினால் அமைந்த படகில் அமர்ந்து கண்டு களித்தோம்.

### சிடியா தாப்பு மற்றும் முண்டா பஹாட் கடற்கரை :

போர்ட் பிளேயரிலிருந்து 30 கிலோ மீட்டர் தூரத்தில் சிடியா தாப்பு என்ற காட்டுப் பகுதியும் அங்கிருந்து 1½ கி.மீ. தொலைவில் முண்டா பஹாட் கடற்கரையும் உள்ளன. நாங்கள் எட்டு மணிக்கெல்லாம் வேன் (Van) ஒன்றில் புறப்பட்டோம். வழிநெடுக அழகிய இயற்கைக் காட்சிகள் மனத்தை மகிழ்ச்சியில் மூழ்கடித்தன!

அந்தமானில் குதிரைகள், எருமைகள், செம்மறி ஆடுகள் எங்குமே காணப்படவில்லை. அங்கிருந்த வெள்ளாடுகள் குட்டையாக இருந்தன. எங்கும் தூய்மையான வீதிகள். மக்கள் நடமாட்டமே இல்லாத கடற்கரைகள்! மரத்தின் நிழல்கள் கடல் நீரின் மேல் படர்வதால் கடற்கரையோரங்களில் கடல் நீர் பச்சை நிறத்தில் தெரிந்தது.

கோடிக்கணக்கில் சிதறிக்கிடக்கின்ற சங்கு, கிளிஞ்சல் ஓடுகள். அவற்றில் உயிரோடு இருக்கும் கிளிஞ்சல்களைக் கையில் எடுக்கும்போது அவை உள்ளே புகுந்து மறைவதும் ஒரு சில விநாடிகளில் மீண்டும் வெளியே வந்து விரல்களின் மேல் ஓடித் தரையில் விழுந்து மறைவதும் விந்தையாக இருந்தது. மிகத் தெள்ளிய நீர் ஆழமும் இல்லாமல் அலைகளும் இல்லாமல் ஏரியைப் போன்றுள்ள கடலில் ஐந்தடி ஆழத்தில் நின்றாலும் மணல் தெரிகிறது என்றால் கடல் நீரின் தூய்மையை ஊகிக்கலாம்.

©KTBS Not to be republished

*பழங்குடிகள் :*

இத்தீவுகளில் பல்வேறு இனத்தைச் சார்ந்த பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் ஜாவா இனத்தவரும் சென்னல்ஸ் இனத்தவரும் இன்னும் நம்மீது பகை மாறாமல் இருக்கின்றனர். மங்கோலிய இனத்தைச் சார்ந்த மக்களையும் நிக்கோபர் தீவுக் கூட்டங்களில் காணலாம். லிட்டில் நிக்கோபரில் "சோம்பன்" என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர். கருப்பாகவும் உயரமாகவும் உள்ளனர்.

காடுகளில் கிடைக்கும் கனிவகைகள் நதிகளில் கிடைக்கும் மீன் வகைகள் இவற்றைக் கொண்டே இவர்கள் வாழ்கின்றனர். மரவள்ளிக் கிழங்கு, சேனை, வாழை, புகையிலை ஆகியவற்றைப் பயிரிடுகின்றனர். அந்தமான் தீவுக்கூட்டங்களில் சிறப்பான மரவகைகள் உள்ளன. "கின்யாயா" என்ற பெரிய மரத்தின் கூர்மை வடிவான பெரிய விதைகள் மீன்களைப் பிடிக்கப் பயன் படுகின்றன. இவ்விதைகளை உடைத்து கடல் நீரில் போட்டவுடன் மீன்கள் அந்த நீரில் நீந்தும் போது மயக்க நிலையை அடைகின்றன. அப்போது அவைகளைப் பிடிப்பது எளிதாகி விடுகிறது.

இத்தீவுகளில் 90 விழுக்காடு நிலப்பகுதிகளில் பயன் தரும் மரங்கள் கொண்ட காடுகள் உள்ளன. கடற்கரை ஓரங்களில் மேங்குரோவ் (Mangrove) என்ற ஒரு வகைக் காடுகள் அடர்ந்துள்ளன.

***செல்லுலார் சிறை : (Cellular Jail)***

"போனிக்ஸ் பே" விலிருந்து செல்லுலார் சிறையைப் பார்வையிடச் சென்றோம். சிறைச்சாலையின் எதிரில் இருந்த சிறிய பூங்காவில் வீர சாவர்கரின் சிலை இருந்தது. கொலைக் குற்றம் செய்து ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை வாழ்நாள் வரை அடைத்து வைக்க 'வைப்பார் தீவை' ஆங்கில அரசாங்கம் பயன் படுத்தியது. ஆயிரக்கணக்கான தியாகிகளைச் சிறைப்படுத்த

Not to be republished ©KTBS

போர்ட்பிளேயரில் தனிமைச் சிறை கட்டப்பட்டது. முதன் முதலில் 1858 ஆம் ஆண்டில் சுதந்திரப் போராட்ட வீரர்களைச் சிறையிட அந்தமான் கொண்டு சென்றனர். போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பெருகியவுடன் 1876 ஆம் ஆண்டு கட்டத் தொடங்கி 1906 ஆம் ஆண்டில் செல்லுலார் சிறையைக் கட்டி முடித்தனர். அப்போது தண்டனை பெற்றோரின் எண்ணிக்கை ஆண்கள் 13634, பெண்கள் 722 ஆவர்.

சிறையின் மையத்தில் வட்ட வடிவில் ஐந்து அடுக்குக் காவல் கோபுரம் உள்ளது. அதைச் சுற்றிலும் உள்ள வட்டத்தை ஏழாகப் பிரித்து ஏழு மூன்றடுக்கு நீண்ட கட்டிடங்களில் தனிமைச் சிறைகளை அமைத்தனர். அந்தச் சிறையின் உள்ளே செல்பவர்கள் காவல் கோபுரத்தின் வழியாகத்தான் செல்ல இயலும். ஏழு சிறைக்கூடங்களின் வழிகள் காவல் கோபுரத்தை இணைக்கின்றன. அதனால் ஒரு கைதியும் சிறையில் இருந்து தப்பிக்க இயலாது. அதே நேரத்தில் காவல் கோபுரத்தின் மேல் தளத்தில் நின்று பார்க்கும் போது ஏழு திசைகளில் நீண்டிருக்கும் கட்டிடங்களில் உள்ள சிறைகளும் காவல்காரருக்குத் தெரியும்படி வைத்துள்ளனர்.

கரங்களுக்கு மட்டுமல்ல கால்களுக்கும் விலங்கிட்டு இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட விடுதலை வீரர்களின் புகைப்படங்களைக் காணும் போது உடல் புல்லரித்தது. அவர்களின் பிறப்பு இறப்பு தேதிகளையும் அவர்கள் சிறையில் அடைபட்ட ஆண்டுகளின் விவரங்களும் அங்கே உள்ளன. அத்துடன் சிறைக் கைதிகளைத் துன்புறுத்திய காட்சிகளை வண்ண ஓவியமாக வரைந்து அப்படங்களை மாட்டியுள்ளனர்.

இன்று நாம் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதற்காக தங்களுடைய சுவாசத்தைத் தியாகம் செய்த செம்மல்களை நினைக்கும் போது இவ்வளவு கொடுமைக்கும் பிறகா நாம் சுதந்திரம் பெற்றோம் என்ற பெருமூச்சு தோன்றத்தான் செய்யும். தியாகிகளைத் தூக்கிலிட்டுக்

©KTBS Not to be republished

கொன்ற மரண மண்டபம் (Gallow) அங்கே உள்ளது. அவற்றைக் காணும்போது நம்மால் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியவில்லை.

***ஆசிரியர் குறிப்பு :*** திரு முருகு சுப்ரமணியம் பணியால் பொறியாளர். இவர் பயணக்கட்டுரைகள் எழுதுவதில் வல்லுநர். இவர், தான் பயணம் செய்த, சீனாவைப்பற்றியும், ஜப்பானைப் பற்றியும், அமெரிக் காவைப் பற்றியும் அழகான பயண நூற்களைப் படைத்தளித்துள்ளார்.

### *பயிற்சி :*

**I** ***ஒரு வாக்கியத்தில் விடை தருக :***

*1)* அந்தமான் நிகோபர் தீவுகள் எங்கு அமைந்துள்ளன ?

*2)* முதன் முதலில் அந்தமான் நிகோபர் தீவுகளைக் குறித்து தங்கள் நூல்களில் குறிப்பிட்டவர்கள் யாவர் ?

*3)* அந்தமான் நிகோபர் தீவுகளுடன் தொடர்பு வைத்திருந்தவர் யார் ? எப்போது ?

*4)* அந்தமானுக்குச் சுற்றுலாச் சென்றவர்கள் தங்கியிருந்த விடுதி எது ?

*5)* டால்பின் மீன்கள் எத்தகைய ஆற்றல் உடையவை ?

*6)* ஜாலிபாய்த் தீவுக் கடலில் பயணிகள் எத்தகைய படகில் சென்று கண்டு களித்தனர் ?

*7)* கடற்கரை ஓரங்களில் கடல்நீர் பச்சை நிறத்தில் தெரியக் காரணம் யாது ?

*8)* அந்தமான் தீவுகளில் பகை மாறாமல் இருக்கும் பழங்குடியினர் யாவர் ?

©KTBS Not to be republished

9) நிகோபர் தீவுக் கடற்கரையில் அடர்ந்துள்ள காடுகள் எவை?

10) வீர சாவர்கரின் சிலை எங்குள்ளது ?

11) வைப்பார் தீவை ஆங்கில அரசாங்கம் எதற்குப் பயன்படுத்தியது?

12) அந்தமானில் தனிமைச் சிறை எதற்காகக் கட்டப்பட்டது?

13) செல்லுலார் சிறையில் எத்தகைய காட்சிகள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன ?

## II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :

1) அந்தமான் நிகோபர் தீவுக் கூட்டங்கள் குறித்து தஞ்சைக் கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் யாவை ?

2) மேக பாட் பறவை குறித்து எழுதுக.

3) அந்தமானில் ஆழம் குறைவான தண்ணீருக்கடியில் நாம் எவற்றைக் காணலாம் ?

4) அந்தமானில் உடல் புல்லரிக்கச் செய்யும் காட்சி யாது ?

5) அந்தமானில் கண்ணீர் சிந்த வைக்கும் காட்சி எது ?

## III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :

1) அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டங்கள் எவ்வாறு அமைந்துள்ளன ?

2) டால்பின் மீன்கள் குறித்து பயண ஆசிரியர் கூறுவன யாவை?

3) "மேகபாட் கூடு" என்று விடுதிக்குப் பெயர் வைக்கக் காரணம் என்ன ?

©KTBS Not to be republished

4) ஜாலிபாய் தீவிற்கு மக்கள் எதற்காகச் செல்வர் ?

5) சிடியா தாப்பு, முண்டா பஹாட் - செல்லும் வழியில் காணப்படும் காட்சிகள் யாவை ?

6) அந்தமான் நிகோபர் தீவுகளில் வாழும் பழங்குடிகள் யாவர்?

7) கின்யாயா மரத்தின் பயன் யாது ?

8) அந்தமானில் தண்டனை பெற்றோர் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

9) அந்தமான் சிறைகளில் வீரர்கள் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப் பட்டனர் ?

**IV. எட்டு வரிகளில் விடை தருக :**

1) அந்தமான் நிகோபர் தீவுகள் குறி த்த வரலாற்றுக் குறிப்புகளை எழுதுக.

2) பயணம் சென்றவர்கள் ஜாலிபாய்த் தீவுகளின் பவளப் பாறைகளின் அழகை எவ்வாறு கண்டு களித்தனர் ?

3) முண்டா பஹாட் - கடலின் அழகுக் காட்சிகளை விளக்குக.

4) செல்லுலார் சிறையின் கட்டிட அமைப்பை விவரி.

**V. இடம் சுட்டி விளக்குக :**

1) "பொன்னொளியில் சிதறிக் கிடக்கும் பசுந்தீவுகள்"

2) "நம் ஊர் காடை கவுதாரியைப் போன்றது"

3) "மக்கள் நடமாட்டமே இல்லாத கடற்கரை"

©KTBS Not to be republished

4) "ஒரு கைதியும் சிறையில் இருந்து தப்பிக்க முடியாது"

5) "இவ்வளவு கொடுமைக்குப் பிறகா நாம் சுதந்திரம் பெற்றோம்?"

**VI. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) சீன நாட்டு புத்த பிட்சு டீசில் அந்தமான் நிகோபார் தீவுகளை .............. என்று குறிப்பிட்டுள்ளார்.

2) மனிதர்களுடன் பழகும் ஆற்றல் கொண்டவை ............

3) லிட்டில் நிகோபரில் ............ என்ற பழங்குடியினர் வாழ்கின்றனர்.

4) கடற்கரை ஓரங்களில் .............. என்ற ஒருவகைக் காடுகள் அடர்ந்துள்ளன.

5) செல்லுலார் சிறையில் தியாகிகளைக் தூக்கிலிட்டுக் கொன்ற ................ மண்டபம் உள்ளது.

**VII. சேர்த்து எழுதுக :**

1) பொன் + ஒளி ; 2) இ + விடுதி

3) கடல் + கரை 4) செம்மை + மறி

**VIII. பிரித்தெழுதுக :**

1) தென்கோடி 2) குடியேற்றம்

3) கருமீன்கள் 4) உயிரினங்கள்

**IX. வாக்கியத்தில் அமைத்தெழுதுக :**

1) போக்குவரத்து 2) கண்டுகளித்து

3) கடற்கரை 4) வாழ்நாள்

©KTBS Not to be republished

**X. எழுத்து வேறுபாடும் பொருள் மாறுபாடும் :**

| | | |
|---|---|---|
| *1)* | த ...... ம் | ள / ல |
| *2)* | பா ....... | ரை / றை |
| *3)* | ப ...... த்து | டி / ழி |
| *4)* | ...... ஞ்சு | ப / ம |
| *5)* | வி ..... | சை / தை |

**செயல்பாடு :**

வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்குச் சுற்றுலா மேற்கொண்டு நீ கண்டு களித்த காட்சிகளை விவரித்து ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக :

©KTBS
Not to be republished

# 7. யக்ஷகான ஆட்டம்

**மூலம் : க. சிவராம காரந்த்**

**மொழியாக்கம் : முனைவர் அ. சங்கரி**

(இக்கட்டுரையில் யக்ஷகான ஆட்டத்தின் முக்கியத்துவம், இவ்வாட்டம் நிகழும் மாவட்டங்கள், தாள, மத்தள சேவை, யக்ஷகான அரங்கம் அமைக்கும் முறை, பாகவதரின் பங்கு, வேடதாரிகளின் பங்கு, போன்ற பல நிலைகள் இடம்பெற்றுள்ளன. சிவராமகாரந்த் அவர்கள் இக்கலையின் கூறுகளைப் பற்றி மிகத்தெளிவாகத்தந்துள்ளார்.

யக்ஷகான ஆட்டம் கருநாடகத்தில் வழங்கும் முக்கியமான நாட்டுப்புறக் கலைகளிலொன்று. இந்த ஆட்டம் பதினாறாம் நூற்றாண்டின் கால கட்டத்தில் விஜய நகரப் பேரரசர்கள் கருநாடகத்தின் மிகுதியான பகுதியை ஆண்டு வந்தபொழுது வழக்கத்திலிருந்துள்ளது. விஜயநகர அரசர்கள் விஜயநகரத்தைத் (தற்போதைய பள்ளாாரி) தலைநகரமாகக் கொண்டு ஆண்டனர். யக்ஷகானத்தின் அங்கமாக விளங்கும் தாள மத்தள சேவையைப் பாராட்டி, இரண்டு அந்தணர்களுக்கு கி.பி. 506 இல் முத் தூட்டு (தானம்) வழங்கப்பட்ட செய்தியை, பள்ளாாரி மாவட்டத்திலுள்ள சோமசமுத்திரமென்கிற லட்சுமி நாராயணன் கோவிலின் வரலாற்றுச் செய்தியின் வாயிலாக அறியலாம்.

தாள மத்தள சேவை என்பது யக்ஷகான ஆட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். தாள மத்தள சேவையில் கதையைப் பாடும் பாகவதரைச் சுற்றி ஆட்டத்தில் பங்கு பெறும் பாத்திரங்கள் தம்முடைய வழக்கமான வேடத்தில் அமர்ந்தவாறு உரையாடல் மூலமாகக் கதையைக் கூறி வந்துள்ளனர். தாள மத்தள சேவையானது கருநாடக மாநிலத்தில் இந்நாள்வரை வழக்கத்தில் அமைந்துள்ளது.

©KTBS Not to be republished

யக்ஷ கானம் ஆடுகின்ற குழுவினரை யாராவது தம்முடைய ஊருக்கு அழைத்தால், அக்குழுவினர் அந்த ஊருக்கு வந்தவுடன் தம்மை அழைத்தவர் வீட்டிலும் அதன் பிறகு அவ்வூரிலுள்ள கோவிலில் அமர்ந்தும் தாள மத்தள, சேவையினைச் செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். இச்சேவையில் கடவுள் வாழ்த்தினைப் பாகவதர் பாடுவார். தாளம் (ஜால்ரா) போடுபவர், மத்தளம் அடிப்பவர் ஆகியோர் தம்முடைய இசைக்கருவிகளை அப்பொழுது வாசிப்பர். கதையின் அம்சம் இங்கு வருவதில்லை.

யக்ஷகான ஆட்டத்தின் மற்றொரு பகுதி அழகிய பொம்மைகளின் உதவியால் ஆட்டம் ஆடுகின்ற பொம்மலாட்ட வகையாகும். பழங்காலத்திலிருந்து இன்று வரை, இக்கலை அழியாமல் எஞ்சி வந்துள்ளது. கருநாடகத்திலுள்ள விஜயபுரா மாவட்டத்திலும் அதற்கு அருகிலுள்ள வேறு மாவட்டங்களிலும் யக்ஷ கானத்தின் சாயலை ஒட்டியுள்ள 'தொட்டாட்ட', 'மூடலம்பாளய' என்ற ஆட்டங்களை ஆடி வந்துள்ளனர். இதே போன்று, பழைய மைசூரு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் ஒன்றோ, அல்லது பல்வேறு விதமான யக்ஷகான, ஆட்டத்தின் வடிவங்கள் எஞ்சியிருப்பதைக் காணலாம்.

யக்ஷகான ஆட்டம் அல்லது பிரசங்கம் திறந்த வெளிகளில் ஆடப்படுவது வழக்கம். அவற்றை தசாவதார ஆட்டம் அல்லது பாகவதர் ஆட்டம் என்றழைப்பர். இங்கு ஆட்டம் என்னும் சொல்லிற்கு அரங்கத்தில் வெளிப்படுத்தும் நாடகம் என்று பொருள் கூறலாம். இவ்வாட்டத்திற்குப் பாகவதர் உயிர்நாடி போன்றவர். அவரே இதனை இயக்குபவர் எனலாம். திருமாலின் பத்து அவதாரங்களைப் பற்றிய கதைகளை ஆடிவந்ததால் தசாவதாரம் என்னும் பெயர் ஏற்பட்டது. புராண நூலில் விஷ்ணுவை பகவான், "பகவந்தா" என்று குறிப்பிட்டுள்ளனர். அப்பகவானின் கதையையே பாகவதம் என்பர். அதற்குத் தொடர்பான கதைகளை அரங்க இடத்தின் முன்னால் நடத்திக் காட்டுபவருக்கு பாகவதர்

©KTBS Not to be republished

என்னும் பெயர் வழங்கலாயிற்று. இத்தகைய ஆட்டத்தை பகவானிற்குரிய சேவையெனக் கருதினர். தொடக்க காலத்திலிருந்து பகவானுக்கு த் தொடர்பான கதைகளை வைத்து ஆடப்பட்டு வந்ததால் "பாகவத ஆட்டம்" எனப்பெயர் பெற்றது கருநாடகத்தில் இந்த ஆட்டம் (கன்னட பாகவதம்) கி.பி. 1530 இல் தோன்றியது. யக்ஷகானத்தின் ஒவ்வொரு கதையும் "பிரசங்க" என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது.

அரங்க மேடையில் கதையை ஆடிக்காட்டுவதற்கு முன் நிகழ்த்தும் அறிமுக உரை "சபா லக்ஷுணா" என அழைக்கப்படுகிறது. அரங்கமேடையின் இயல்புகளை விளக்குவதே இவ்வறிமுக உரையாகும். மேலும் கடவுள் வாழ்த்துடன் கதைக்குரிய உட்கருத்தும் இங்கே கூறப்படும்.

அரங்கமேடை சமமாக இருக்கும் ஒரு களத்தில் சுமார் இருபது அடி அகலமும் முப்பது அடி நீளமும் கொண்டதாக அரங்கமேடை இருக்கும். அதன் ஒரு பக்கத்தில் நான்கு அல்லது ஆறு மூங்கில் குச்சிகளை நட்டு அவ்விடத்தைத் தயாராக்குவர். மூங்கில் கம்பங்களில் மாவிலைத் தோரணங்களைக் கட்டுவர். இதனை "ரங்கஸ்தல" எனக்கூறுவர் அதன் முன் நூற்றுக் கணக்கான மக்கள் அமர்ந்து பார்க்கக்கூடிய சமதளத்து நிலம் இருக்கும். அதற்காக பெரும்பாலும் அறுவடை முடிந்து உலர்ந்தவயல்களைப் பயன் படுத்துவர்.

தேவாலயங்களின் முன்பு அமைந்துள்ள திறந்த வெளிகளையும் பயன்படுத்துவர். அரங்கத்தின் பின்புறம் உயரமான மரக் கட்டிலையோ அல்லது மேசைகளையோ அடுக்குவர். இதன் மீது பாகவதர், சங்கீதக்காரர்கள், மத்தளம் வாசிப்போர் என அனைவரும் இருப்பர். பாகவதர் இடப்பக்கத்திலிருந்தும், வேறு கலைஞர்கள் வலப்பக்கத்திலிருந்தும் வந்து போவார்கள். பாகவதரின் பக்கத்தில் இருக்கும் கொட்டுவாத்தியம், இரண்டு கோல்களால் அடிக்கப்பட்டு, பேரொலியை எழுப்பும் ஒருவகைத்

©KTBS Not to be republished

தோல் கருவி. இந்த சத்தம் ஒருமைலுக்கு மேலாகக் கேட்கும். மற்றொரு பக்கவாத்தியம் மிருதங்கம் (மத்தளெ). மிருதங்கம் வாசிப்பவன் பாகவதரின் இடப்பக்கம் நின்றோ அமர்ந்தோ வாசிப்பான். அரங்கத்தின் இடப்பக்கம், வலப்பக்கம் முன்பக்கம் ஆகியன பார்வையாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும்.

அரங்க இடத்திலிருந்து சற்று தூரத்தில் ஒப்பனை அறை அமைந்திருக்கும். வேடதாரிகள் தங்கள் ஒப்பனை அறையை மேடையின் பின்பக்கமாக அமைப்பர். இதனை ஓலைகளால் மறைத்திருப்பர். ஒப்பனை அறையில் இருப்பவர் அனைவரும் ஆண்களே. ஒப்பனை அறையிலிருந்து மேளதாளத்தோடு பாகவதர் அரங்க மேடைக்கு வருவார். அரங்க மேடையைச் 'சொக்கர்' என்றும் அழைப்பர்.

பெண்வேடதாரிகளாக ஆண்களே ஒப்பனை செய்துகொள்வர். அவர்கள் கூந்தலைப் பின்னிப் போட்டுக் கொள்வர். அவர்கள் மஞ்சள் தூளை தேங்காய் எண்ணெயில் கலந்து முகத்தில் பூசிக் கொள்வர். புருவங்களில் கறுப்பு நிற மை தீட்டி, உதடுகளில் சாயம் பூசிக் கொள்வர்.

பாகவதர் பின்னால் அனுமன் வர, அதற்குப் பின்னால் குழந்தைகளின் கூட்டமே வரும். நகைச்சுவைக்குரிய பாரத்திரங்களை கோடங்கி என்று கூறுவர்.

ஆட்டம் தொடங்குவதற்குமுன் சில வழி முறைகள் கையாளப்படும். முதலில் வினாயகர், சுப்பிர மணியர், ஊர்த் தேவதை முதலிய தெய்வங்களை வணங்கிய பின்னரே யக்ஷகான ஆட்டம் ஆரம்பிக்கப் படும்.

இத்தகு ஆட்டத்தின் முதல் நபர் எனக் கருதப் படுபவர் பாகவதராவர். ஆடுகளத்தில் பாட்டு மற்றும் வசனங்களுக்கு 'ஸ்ருதி' மிகமிக முக்கியம். இது மிகவும் சிரமமான ஒன்று.

Not to be republished ©KTBS

பாகவதரின் கையில் உருக்கினால் செய்யப்பட்ட இரண்டு தாளங்கள் இருக்கும். இதனுடைய தாளத்திற்கும் கொட்டு வாத்திய ஒலிக்கும் ஒற்றுமை இருந்தேயாக வேண்டும்.

பாகவதர் கதையின் பாடல்களை ஒன்றொன்றாக எடுத்துக் கொள்வார். அதற்கேற்றபடி மற்றபாத்திரங்களை அறிமுகம் செய்வார். ஒவ்வொரு பாத்திரமும் ஆடுகள மேடைக்கு வந்து அந்த தாள மத்தள ஒலிக்கேற்ப சமனாக ஆடியும் பாடியும் அவற்றை வெளிப்படுத்துவர். இவ்வாறு யக்ஷ கான ஆட்டம் நிகழ்கிறது.

***ஆசிரியர் குறிப்பு :*** *சிவராம காரந்த் கி.பி. 1902 இல் மங்களூருக்கருகே உள்ள 'கோடா' என்னும் ஊரில் பிறந்தார். கோடாவிலும் குந்தாபுராவிலும் படித்த இவர், மகாத்மா காந்தியால் ஈர்க்கப்பட்டு, தேசீய இயக்கத்தில் பங்கு பெற்றார். இவருடைய மூகஜ்ஜிய கனசுகளு (ஊமைப் பாட்டியின் கனவுகள்) என்னும் நாவலுக்கு ஞான பீடப் பரிசு வழங்கப்பட்டது. இவர் கருநாடகத்தில் நசிந்த நிலையிலிருந்த 'யக்ஷகான' என்ற தெருக்கூத்துக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர்.*

***நூல் குறிப்பு :*** *சிவராம காரந்தர் எழுதிய 'யக்ஷ கான ஆட்ட' என்னும் இக்கட்டுரை, 'கராவளி யக்ஷகானா' என்னும் கன்னட நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்நூல் பல அறிஞர்களால் எழுதப்பட்ட நாட்டுப்புறக்கலை பற்றிய தொகுப்பு நூலாகும். இந்நூல் கி.பி. 2000 இல் வெளிவந்துள்ளது.*

***மொழி பெயர்ப்பாளர் குறிப்பு :*** *'யக்ஷகான ஆட்ட' என்னும் இக்கட்டுரையை முனைவர் அ. சங்கரி கன்னடத்திலிருந்து தமிழிற்கு மொழியாக்கம் செய்து கட்டுரையாக எழுதியுள்ளார். கல்லூரி முதல்வராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் மாண்புமிகு அமைச்சர் டாக்டர் எம். வீரப்ப மொய்லி அவர்களின் இராமாயண மகா அன்வேஷனம் என்ற நூலின் ஐந்தாம் தொகுதியை (ஸ்ரீ இராமாயணப் பெருந்தேடல்) கன்னடத்திலிருந்து தமிழிற்கு*

©KTBS Not to be republished

மொழியாக்கம் செய்துள்ளார். சங்க இலக்கியங்களாகிய குறுந்தொகை, புறநானூறு, சிறுபாணாற்றுப்படை முல்லைப்பாட்டு ஆகிய நூல்களைக் கன்னடத்திற்கு மொழியாக்கம் செய்யும் பணியை மேற் கொண்டுள்ளார்.

### *அருஞ்சொற் பொருள் :*

அங்கம் - பாகம், உறுப்பு ; சபா லக்ஷண - அறிமுக உரை ; வேடதாரி - வேடம் போடுபவர் ;

## *பயிற்சி*

### I. *ஒரு வாக்கியத்தில் விடை தருக :*

*1)* யக்ஷகான ஆட்டம் எந்த மாநிலத்திற்குரியது ?

*2)* யக்ஷகான ஆட்டத்திற்குரிய கடவுள் வாழ்த்தினைப் பாடுபவர் யார் ?

*3)* யக்ஷகான ஆட்டக்குழுவினரின் வழக்கம் எது ?

*4)* பொம்மைகளின் உதவியால் ஆடும் ஆட்டத்தின் பெயர் என்ன ?

*5)* 'தொட்டாட்ட' என்னும் ஆட்டம் எந்த மாவட்டத்திற்குரியது ?

*6)* பிரசங்கம் எவ்விடத்தில் வழக்கமாக நடைபெறும் ?

*7)* கன்னட பாகவதம் எப்பொழுது தோன்றியது ?

*8)* அறிமுக உரைக்குரிய பெயர் எது ?

*9)* அரங்க மேடையின் அகலம் எத்தனை அடிகள் ?

*10)* மூங்கில் கம்பங்களில் எதைக் கட்டுவர் ?

### II. *மூன்று வாக்கியங்களில் விடை தருக :*

*1)* யக்ஷகான ஆட்டத்தில் 'பாகவதர்' பங்குபற்றி எழுதுக.

*2)* யக்ஷகான ஆட்ட அரங்கு குறித்து எழுதுக.

*3)* யக்ஷகானக் குழுவினர் குறித்து எழுதுக.

*4)* பொம்மலாட்டம் குறித்து எழுதுக.

*5)* பாகவத ஆட்டம் பற்றி எழுதுக.

©KTBS Not to be republished

6) சபாலட்சணம் குறித்து வரைக.

7) ஒப்பனை அறை பற்றி எழுதுக.

8) வேடதாரிகள் குறித்து எழுதுக.

9) ஆட்டம் தொடங்கு முன் அமையும் சில வழி முறைகளைக் குறிப்பிடுக.

**III. ஐந்து வாக்கியங்களில் விடை தருக :**

1) யக்ஷகான ஆட்டம் குறித்து எழுதுக.

2) பாகவதரின் முக்கியத்துவம் குறித்து எழுதுக.

3) மத்தள சேவை குறித்து எழுதுக.

**IV. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) __________ என்பது யக்ஷகான ஆட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகும்.

2) யக்ஷகான ஆட்டத்தை தசாவதார ஆட்டம் அல்லது __________ என்றழைப்பர்.

3) கடவுள் வாழ்த்துடன் கதைக்குரிய __________ இங்கே கூறப்படும்.

4) பெண் வேடதாரிகளாக __________ ஒப்பனை செய்து கொள்வர்.

### மொழிப் பயிற்சி

**V. சேர்த்து எழுதுக.**

1) வருவது + இல்லை __________

2) எஞ்சி + இருப்பது __________

3) மேளம் + தாளம் __________

**VI. பிரித்து எழுதுக.**

1) நாட்டுப்புறக்கலை

2) வழங்கலாயிற்று

3) கதைக்குரிய

4) மரக்கட்டில்

©KTBS Not to be republished

# 8. புதுக்கவிதை உத்திகள்

**- சி.சு. செல்லப்பா**

(புதுக்கவிதை முதன் முதலில் பாரதியாரால் வசனகவிதை என்ற பெயரில் எழுதப்பட்டது. பின்னர் 1960 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் 'புதுக்கவிதை' என்ற சொல்லாட்சி உருவானது. 'நியூ பொயட்ரி' என்ற ஆங்கிலச் சொல்லிலிருந்து மொழி பெயர்த்த சொல்லாகப் 'புதுக்கவிதை' என்ற சொற்றொடரைப் பயன்படுத்தியதாக சி.சு. செல்லப்பா அவர்கள் கூறுகிறார்கள். புதிய பரிமாணம், புதிய நடை கொண்டு மரபுகளை மீறி இயங்குவது புதுக்கவிதை.)

இருபதாம் நூற்றாண்டு, இலக்கிய உலகிற்குத் தந்த பரிசுகளில் புதுக்கவிதையும் ஒன்று. தமிழைப் பொறுத்த வரை இம்முயற்சி 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கியது. 19 ஆம் நூற்றாண்டில் கவிதை நடையிலும் உரைநடையிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கருக்கொண்ட புதுமைக்கு இருபதாம் நூற்றாண்டில் ஒரு வடிவம் கொடுத்தவர் பாரதியார். ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து நின்று போராட்டப்பாடல் பாடியும், பாப்பாவுக்குப் புதிய துணிவான அறிவுரைகளைத் தந்தும் பாரதியார் பாடியுள்ளதற்கு அவர்காலத்துச் சமுதாயச் சூழலும் மேனாட்டுக் கவிதைத் தாக்கமும் தான் காரணமாகும்.

பாரதியாருக்குப்பின் தமிழில் புதுக்கவிதைப் பயிர் வளர்த்தவர்களுள் ந. பிச்சமூர்த்திக்குப் பெரும் பங்கு உண்டு. அவரைத் தொடர்ந்து பலர் புதுக்கவிதைகள் படைக்கத் தொடங்கினர்.

புதுக்கவிஞர்கள் இன்றைய சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளையும், சீரழிவுகளையும் கண்டு கோபம் கொள்கிறார்கள், இன்றைய இழிநிலை மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

©KTBS Not to be republished

புதுக்கவிதைகளில் பலவகையான உத்திகள் காணப்படுகின்றன. இவற்றுள் கீழ்க்காணும் நான்கு உத்திகளே பெரிதும் பயன்படுத்தப் பெற்றுள்ளன என்று கூறலாம்.

*1.* படிமம் (Image)

*2)* குறியீடு (Symbol)

*3)* அங்கதம் (Satire)

*4)* முரண் (Paradox)

### படிம உத்தி

எப்பொழுதோ தன்மனத்தில் பதிந்துள்ள காட்சிகளையும் அனுபவங்களையும் கவிஞன் தன்னுடைய கற்பனைத்திறனால் சொற்களைக் கொண்டு பிறருக்கு உணர்த்துகின்ற நிலையில் அமைவதே படிமம் எனப்படும்.

“இருட்டைப் பிழிந்து
எடுத்து வைத்தது போல்
படுத்திருந்தது ஆட்டுக்குட்டி
பாதை ஓரம்
காலை நேரம்....”

இப்பாடலில் ‘இருட்டைப் பிழிந்து எடுத்தல்’ என்னும் நுண்செயல் பரு உருவாகிய கரிய ஆட்டுக் குட்டியால் நம் கண்ணுக்குத் தெரிவதைக் காணமுடிகிறது.

“அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை ஏமாற்றிவிட்டு
மேட்டை நோ க்கியே பாய்கிறது”

©KTBS Not to be republished

இக்கவிதையில் ‘அடிமை வாழ்வு’ என்ற அணைக்கட்டில் தேக்கி வைக்கப்பட்ட சுதந்திரமாகிய தண்ணீர், திறக்கப்படும் போது, பள்ளங்களாகிய ஏழை மக்களை ஏமாற்றி விட்டு, மேட்டு நிலங்களாகிய செல்வந்தர்களை நோக்கியே சுதந்திரம் செல்கிறது என்பதை உருவகமாகக் கூறி கவிஞர் உணர வைத்துள்ளார்.

## குறியீட்டு உத்தி

கவிஞன் தான் சொல்ல நினைத்த ஒரு பொருளின் உண்மைத் தன்மையை நேரடியாகச் சொல்லாமல் அதனையொத்த இன்னொரு பொருளின் துணை கொண்டு விளக்குவதே குறியீட்டு உத்தி எனப்படுகிறது.

“பூக்களிலே நானுமொரு
பூவாய்த் தான் பிறப்பெடுத்தேன்
பூவாகப் பிறந்தாலும்
பொன் விரல்கள் தீண்டலையே
பொன் விரல்கள் தீண்டலேயே - நான்
பூமாலை யாகலையே”

என்பது அரளிப்பூ அழுகிறது என்னும் தலைப்பில் கவிஞர் மு. மேத்தா எழுதியுள்ள கவிதை. இதில் அரளிப்பூ அழுவது பாடப்பட்டிருந்தாலும் நமக்கு அது மணமாகாமல் ஏங்கிக் கிடக்கும் மங்கையரின் குமுறலாகவே கேட்கிறது. மணமாகாத முதிர் கன்னியர்களின் உள்ளக் குமுறலுக்கு இக்கவிதை ஒரு குறியீடு. அந்தப் பூவின் - மங்கையரின் புறத்தோற்றம் அழகாயிருந்தாலும் உள்ளுக்குள் எவ்வளவு வாட்டம் உள்ளது என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. ‘மணமாலை கழுத்தில் ஏறவில்லையே’ என்ற ஏக்கத்தைப் ‘பூமாலையாகலையே’ என்னும் குறியீட்டால் கவிதை புலப்படுத்தி விடுகிறது.

©KTBS Not to be republished

## அங்கத உத்தி

நல்ல உடல் நலத்திற்குத் தேவையான சூழ்நிலையைச் சிரிப்பு உண்டாக்குகிறது. ‘சிரிப்பு, திருத்தும் இயல்புடையது என்பது மட்டுமின்றி கொடுமையை வலியத்தாக்கும் தன்மையும் உடையது. மனித குலத்தின் குற்றங்களைக் கண்டு சினங்கொண்டு சிரிப்பதே அங்கதமாகும்’ என்பர். இப்படிச் சிரிக்க வைத்துச் சீர்கேட்டைக் குத்திக்காட்டும் அங்கத உத்தியைப் பாடாத புதுக்கவிஞர்களே இல்லை எனலாம்.

“எங்கள்
சிவில் வழக்குகளில்
வாதியும் செத்துப் போவான்
பிரதிவாதியும்
செத்துப் போவான்
வழக்கு மட்டும் சாகாது”

என்று புனையப்பட்டுள்ள கவிதை இவ்வகையைச் சார்ந்தது.

மூல நூலாசிரியனின் பாணியைப் பின்பற்றி இக்காலத்து இழி வுகளைப் பாடிச் செல்லுதல் ஒரு வகை அங்கதம் ஆகும். ஆண்டுகள் பலவாகியும் தனக்கு நரையில்லாததற்குக் காரணம் சொல்லும் புறநானூற்றுப் பாடல் ஒன்று உண்டு. அப்பாடலின் பாணியைப் பின்பற்றி

“யாண்டு சில ஆக நரை பல ஆதல்
ஈண்டு எப்படி எனத் தூண்டிக் கேட்கிறீர்
பொல்லா அரசியல் புகுந்ததனாலும்
கல்லா மனைவி குடித்தனத்தாலும்
கல்லூரிப் படிப்புப் பிள்ளைகளாலும்

©KTBS Not to be republished

ஒழுக்கம் இன்மையின் அழுத்தத்தாலும்

என்தலை மட்டுமா ? இன்று பிறந்த

குழந்தையின் தலையும் விடும்பஞ்சு நரையே''

என இக்காலத்தே இளமையிலேயே நரை தோன்றி விடுவதை பகடி செய்கிறது இப்பாடல். சிறுமைகளைச் சுட்டிக்காட்டி அதே வேளை உரியவர்களின் சினத்திற்கு ஆளாகாதவாறு கவிஞர்களைக் காப்பாற்றுகிறது இவ்வுத்தி.

**முரண் உத்தி**

ஒன்றுக்கொன்று முரணான இரண்டினை வைத்துக் கவிதை பாடும் பாங்கும் புதுக் கவிதையில் காணப்படுகிறது. இந்நிலை முரண் உத்தி எனப்படும். கருத்தளவிலும், சொல்லளவிலும் முரண்கள் அமைகின்றன.

''இவர்கள்

பகல் நிலவுகள்

இரவுச் சூரியன்கள்''

என்றும்,

''இரவில் வாங்கினோம்

இன்னும் விடியவில்லை''

என்றும் வரும் கவிதைகளில் இவ்வுத்தி கையாளப் பட்டுள்ளதைக் காணலாம். ஒன்றைப்பற்றி ஒரு வகையில் நாம் அறிந்திருக்கும் செய்தியையே முரணாகக் காட்டிப்பாடும் பாங்கு காணப்படுகிறது. முரண் உத்தி கையாளப்படும் போது அங்கதமும் முரணும் இணைந்து வருவது போன்ற அமைப்பே மிகுதியும் பாடப்பட்டுள்ளமை தெரிகிறது.

''புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்

போலி நளன்களின் கூட்டம்

©KTBS Not to be republished

கையில் மாலையுடன்

குருட்டுத் தமயந்தி''

என்னும் அப்துல் ரகுமானின் கவிதையில் படிமம், குறியீடு, அங்கதம், முரண் ஆகிய நான்கு உத்திகளும் இணைந்து வருவதைக் காணலாம்.

புதுக் கவிதை இருபதாம் நூற்றாண்டில் தமிழில் புதிதாகத் தோன்றியது. புதுக்கவிதைகளில் கையாளப்படும் உத்திகள் படிப்போரின் உள்ளத்தே செய்திகளை நறுக்கெனப் படிய வைப்பதற்குத் துணை செய்வனவாக உள்ளன. ஆயினும் புதுக்கவிதை என்னும் பெயரில் பொருளே இல்லாமல் எழுதப்படும் வெற்றுக் கவிதைகளையும், வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களைத் திணித்து எழுதுகின்ற கலப்புக் கவிதைகளையும் விலக்கித் தகுதியானவற்றை மட்டும் கொள்ள வேண்டியது நம் கடமையாகும்.

## நூற்குறிப்பு :

இக்கட்டுரை சி.சு. செல்லப்பா அவர்களால் எழுதப்பட்டது. இவர் 'எழுத்து' என்ற இதழை 1959 இல் தொடங்கி நடத்தி வந்தார். அந்த இதழில் 1960 ஆம் ஆண்டு முதல் புதுக்கவிதை என்ற பெயரில் கவிதைகளை எழுதி, பிற கவிஞர்களையும் அந்தத் துறையில் கவிதைகளை எழுத ஊக்குவித்து புதுக்கவிதையை வளர்த்தவர். புதுக்கவிதையைப் பல தலைப்புகளில் ஆய்வு செய்தவர் சி.சு. செல்லப்பா அவர்கள்.

### பயிற்சி :

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) புதுக்கவிதை தோன்றிய காலம் .................

2) பாரதியாருக்குப்பின் புதுக்கவிதையை வளர்த்தவர்களுள் முக்கியமானவர் ....................

©KTBS Not to be republished

3) நல்ல உடல் நலத்திற்குத் தேவை ....................

4) மனித குலத்தின் குற்றங்களைக் கண்டு சினங் கொண்டு சிரிப்பதே ................... ஆகும்.

5) இரவில் வாங்கினோம், இன்னும் .................... இல்லை.

**II. ஒரு வாக்கியத்தில் விடை எழுதுக :**

1) புதுக்கவிதைக்கு ஒரு வடிவம் கொடுத்தவர் யார் ?

2) புதுக்கவிஞர்கள் எவற்றைக் கண்டு கோபம் கொள்கிறார்கள் ?

3) அரளிப்பூ அழுகிறது என்னும் கவிதையை இயற்றியவர் யார் ?

4) சிரிக்க வைத்துச் சீர்கேட்டைக் குத்திக் காட்டும் உத்தி எது ?

5) உத்திகள், படிப்போர்க்கு எவ்வாறு துணை செய்கின்றன?

**III. மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) புதுக்கவிதைகளில் பெரிதும் பயன்படுத்தப்படும் நான்கு உத்திகளைத் குறிப்பிடுக.

2) படிமம் என்றால் என்ன ?

3) குறியீடு குறித்து எழுதுக.

4) அங்கதம் பற்றி எழுதுக.

5) முரண் உத்தி குறித்து எழுதுக.

**IV. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) தமிழில் புதுக்கவிதை தோன்றிய வரலாற்றை விவரி.



©KTBS Not to be republished

2) ‘‘அரளிப்பூ அழுகிறது’’ என்னும் - கவிதையில் காணப்படும் குறியீட்டு உத்தியை விவரி.

## V. மொழிப் பயிற்சி :

**1) சேர்த்து எழுதுக.**

அ ங்கு + ஒன்றும் =

ஏற்றம் + தாழ்வு =

சீர் + அழிவு =

நூறு + ஆண்டு =

**2) பிரித்து எழுதுக.**

இங்கொன்று =

அதனையொத்த =

நானுமொரு =

சினங்கொண்டு =

©KTBS Not to be republished

# 9. மூவலூர் வீராங்கனை

– பா. ஜீவசுந்தரி

(பெண்கள் எவரும் வீட்டை விட்டு வெளியே வர முடியாது என்றிருந்த இருண்ட காலத்தில் ‘தேவதாசிகள்’ என்றழைக்கப் பட்ட குலத்திலேயே பிறந்து தேவதாசிகள் ஒழிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு சாதனைகள் படைத்த வீராங்கனை மூவலூர் இராமாமிர்தம் அம்மையார். அவர்தம் போராட்ட வாழ்க்கை வரலாற்றை இப்பாடத்தின் வாயிலாக அறியலாம்)

**இளமைப் பருவம் :** இராமாமிர்தம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவாரூரில் 1883 ஆம் ஆண்டு கிருஷ்ணசாமிப் பிள்ளை – சின்னம்மா ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். குடும்பம் வறுமையில் வாடியது. தான் பெற்ற மகளைப் பத்து ரூபாய் பணத்துக்கும் ஒரு பழையபுடவைக்கும் ஆச்சிக்கண்ணு என்ற தாசிப் பெண்ணிடம் விற்று விட்டு இரவோடு இரவாகச் சென்னை சென்று விட்டனர். தாசி அம்மாள் இராமாமிர்தத்திற்குக் கல்வி கற்பிக்க ஓர் ஆசிரியரை நியமித்தார் இராமாமிர்தம் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றார். புகழ் பெற்ற நட்டுவனார் சுயம்பு பி ள்ளை அவர்களிடம் நாட்டியமும் இசையும் கற்றுத் தேர்ந்தார். இளம் வயதிலேயே புராண வேத வழக்கங்களைக் கற்றுத் தேர்ந்தார்.

இளமைப்பருவம் எய்திய இராமாமிர்தம் நாட்டுப் பற்றும் நாட்டு விடுதலை உணர்வும். கொண்ட இளைஞரான ஆசிரியர் சுயம்புப் பிள்ளையைத் திருமணம் செய்து கொண்டார். ஒரு சமூகப் போராளியாக அம்மையார் வளர்ச்சி பெற சுயம்புப் பிள்ளையின் ஆதரவு முதுகெலும்பாக இருந்தது.

**தேவதாசி முறை :** அக்காலத்தில் தமிழ் நாட்டில் தஞ்சை, நெல்லை, மதுரை மாவட்டங்களிலும் புதுக்கோட்டை

©KTBS Not to be republished

சமஸ்தானத்திலும் தேவதாசி முறை வலுவாக வேரூன்றி இருந்தது. குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களுக்குப் பொட்டுக்கட்டி கோயிலில் கடவுளின் அடிமையாக ஆக்கினர். அவர்களுக்கு திருமண உரிமையும் வேறு தொழில் செய்து வாழும் உரிமையும் மறுக்கப்பட்டது. அவர்கள் வழிவழியாக நிலப்பிரபுக்களையும் ஜமீன்தார்களையும் சார்ந்தே வாழ நேரிட்டது.

***போராட்டம் :*** 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தேவதாசிகள் முறை எங்கும் பரவியிருந்தது. இது இந்தியப் பண்பாட்டிற்கே அவமானம் என்பதை உணர்ந்த இராமாமிர்தம் இம்முறையை அடியோடு அழிக்கப் போராடினார். பெண் விடுதலை என்பது சமுதாயத் தளைகளிருந்து பெண் விடுவிக்கப் படுவதோடு இணைந்துள்ளதை நம்பினார். ஆடம்பரத் திருமணங்களை எதிர்த்தும் மூடவழக்கங்களைக் கண்டித்தும் மேடைதோறும் முழங்கினார். ஊர் ஊராகச் சென்று நாடகங்களை நடத்தினார். தேவதாசி முறைக்கு எதிரான அவரது கருத்துகள் அவரது உரையாடலிலும் நடிப்பிலும் கூர்மையாக எதிரொலித்தன. இதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் அம்மையாரை மிரட்டி வந்தனர். ஒரு முறை கடுங்கோபத்துடன் அவர்கள் கும்பலாகப் பந்தலுக்குள் புகுந்து மேடையில் ஏறினர். நடிப்பில் ஆழ்ந்திருந்த மூவலூர் அம்மையாரின் கூந்தலைப் பிடித்து இழுத்து அரிந்து விட்டனர். ஆனால் இந்த இழிசெயலைக் கண்டு மூவலூர் அம்மையார் அச்சம் கொள்ளவில்லை. மாறாக தன் சமூகப் பணியை வலுவாக்கிக் கொண்டார்.

இந்நிகழ்ச்சி அப்பகுதி முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. அப்போதிருந்தே அம்மையார் நீண்ட கூந்தல் வளர்ப்பதை நிறுத்தியதோடு தனது இறுதிக்காலம் வரை தானே கூந்தலைக் குறைத்து ‘கிராப்’ வைத்துக் கொள்ளப் பழகிவிட்டார்.

***காந்தியின் அறிமுகம் :*** தேவதாசி முறை இந்தியாவில் எங்கு நடந்தாலும் அதை அடியோடு ஒழிக்கவும் விழிப்புணர்வு

©KTBS Not to be republished

ஏற்படுத்தவும் பிரச்சாரம் செய்யும்படி காங்கிரஸ் தலைவர்களுக்கு காந்தி அழைப்பு விடுத்தார். தேவதாசி முறை ஒழிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மூவலூராரின் தீவிரத்தை அறிந்த காந்தியடிகள், அம்மையாருக்குப் பாராட்டுக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.

காந்தியடிகள் முன்மொழிந்த ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் போர்வாள் கதராடை அணிதலாகும். வெள்ளையன் கொள்ளை வெறிக்கு கதராடை மூலம் அணை போடப் பட்டது. காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்த பின்னர் ராட்டையும் கதரும் அம்மையாரின் வாழ்க்கையோடு இணைந்த அங்கமாக மாறின. சமூக சீர்திருத்த, மறுமலர்ச்சிக் கருத்துகளில் மட்டுமல்லாது கதராடை இயக்கத்திலும் காந்தி, பெரியார் வழியை மூவலூர் அம்மையார் தீவிரமாகப் பின்பற்றினார். ஊர் ஊராகக் கதர்ப் பொதியைச் சுமந்து சென்றார். தெருத் தெருவாக விற்றார். அவரும் கதராடை தான் அணிந்தார்.

***களவு போன கதராடைகள் :*** ஒரு சமயம் அவர்வீட்டில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கதராடைகள் களவு போய்விட்டன. விசாரணையில் ஒரு பெண்தான் கதராடைகளைத் திருடியிருக்கிறாள் என்று தெரிய வந்தது. நீதி மன்றத்தில் வழக்கு நடந்தபோது குற்றவாளிக் கூண்டில் நின்ற அப்பெண்ணுக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று நீதிபதி மூவலூர் அம்மையாரிடமே கேட்டார். 'இந்தப் பெண் கதராடைகளைத் திருடினாலும் அதை உடுத்திக் கொள்வதற்குத் தான் திருடியிருக்கிறார். கதர் கட்டியுள்ள அவரை நான் பாராட்டுகிறேன். எனவே அவர் மீது உள்ள வழக்கையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்' என்று கூறிவிட்டாராம்.

***நடமாடிய கொடி : 1923*** ஆம் ஆண்டு காக்கிநாடாவில் காங்கிரஸ் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. அதில் கொடிபிடித்துச்

Not to be republished ©KTBS

செல்லக் கூடாது என்று வெள்ளையர்கள் திடீரென உத்தரவு பிறப்பித்தனர். கொடி பிடித்தால் தானே தடை செய்வாய் ! நான் கொடியையே புடவையாக உடுத்திக் கொள்கிறேன்பார் என்பது போல கொடிகளை இணைத்துப் புடவையாக அணிந்து கொண்டு நடமாடும் கொடியாக ஊர்வலத்தில் வந்தபோது அம்மையாரை எதுவும் சொல்ல முடியாமல் வெள்ளைக்கார அரசு திகைத்து நின்றது.

***தேவதாசி ஒழிப்புச் சட்டம் :*** டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்றத் துணைத் தலைவராக இருந்தபோது தேவதாசி முறையை அடியோடு ஒழிக்க 'தேவதாசி முறை ஒழிப்புச்' சட்டத்தை நிறைவேற்றும் முயற்சிகள் மேற்கொண்டார். இச்சட்டம் நிறைவேற முழு ஒத்துழைப்பு அளித்தவர்களுள் சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த தந்தை. ஈ.வே.ரா. பெரியார் மற்றும் மூவலூர் இராமாமிர்தம் ஆகியோரின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இது தொடர்பாக முத்துலட்சுமி ரெட்டிக்கும் மூவலூர் அம்மையாருக்கும் இடையே கடிதப்போக்குவரத்து நடைபெற்றுள்ளது. ஒரு கடிதத்தில் தேவதாசி முறை குக்கிராமங்கள்வரை ஒழிக்கப்பட வேண்டுமென்று அம்மையார் வலியுறுத்தியுள்ளார். இறுதியாக அந்தச் சட்டம் 1929 ஆம் ஆண்டில் நிறைவேறியது.

பெண்களை இழிவாக நடத்தும் இந்தச் சமுதாயத்தில் சீர்திருத்தமும் மறுமலர்ச்சியும் ஏற்பட வேண்டும் என்று மூவலூரார் நடத்திய போராட்டம் அன்பையும் கருணையையும் அடிப்படையாகக் கொண்டது. இதற்காக எல்லாவிதமான வலிகளையும் அவமானங்களையும் தாங்கிக் கொண்டார். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஒரு பெண் என்பதால் மேலும் கூடுதலான அவமானங்களைச் சந்திக்க நேர்ந்தது.

***இறுதிக் காலம் :*** அம்மையார் தொடர்ச்சியான மக்கள் பணியால் விரைவில் உடல் தளர்ந்தார். செல்வச் செழிப்பான குடும்பப்

©KTBS Not to be republished

பின்னணியோ வசதி வாய்ப்புகளோ அதிகம் இல்லாததால் முதுமை அவரை விரைவிலேயே ஆட்கொண்டது. அவரது கடைசி ஆண்டுகள் மயிலாடு துறையில் கழிந்தன. இருப்பினும் அவரது சுறுசுறுப்பிற்குக் குறைவில்லை. மயிலாடுதுறையில் கௌரவ துணை நீதிபதியாகப் பணியாற்றியுள்ளார்.

வாரந்தோறும் கூடும் சித்தர்க்காடு சந்தை, இப்பகுதியில் சிறப்பானது. வாரந் தவறாமல் சந்தைக்குச் சென்று உண்டியல் குலுக்கி நிதிதிரட்டுவதை வழக்கமாக வைத்திருந்தார். இதில் கிடைக்கும் நிதியைக் கொண்டு வசதி வாய்ப்புகளற்ற ஏழைக் குழந்தைகளின் கல்விச் செலவுக்கு உதவி செய்வது இவரது வழக்கம். பெரிய கடைகள், நிறுவனங்கள் இங்கெல்லாம் உண்டியல் வைத்து நிதி திரட்டி உதவியதுண்டு.

ஆதரவற்ற பெண்களை எங்கு கண்டாலும் வீட்டுக்கு அழைத்து வந்துவிடுவாராம். அவர்களைப் பாதுகாப்பான இடங்களு க்கு அனுப்பி வைப்பதையும் கடமையாகவே செய்து வந்துள்ளார். முதுமைக் காலத்தில் தன் ஒரே மகன் செல்லப்பாவின் வீட்டில் வசித்தார். ‘மதிபெற்ற மைனர்’ ‘இஸ்லாமும் இந்தியர்களின் நிலைமையும்’ என்ற நூல்களை எழுதினார்.

பெரியார் காட்டிய பாதையில் பயணித்து பெரியார் கொள்கைகளைத் தனதாக்கிக் கொண்டு வாழ்ந்து காட்டிய சுயமரியாதை இயக்க வீராங்கனை இராமாமிர்தம் அம்மையார், **26.6.1962** அன்று மறைந்தார். வீரத்தாயை இழந்தோம். அவர் தந்த வீர உணர்வை என்றும் வளர்ப்போம்.

***ஆசிரியர் குறிப்பு :*** ஜீவசுந்தரி சமதர்ம இயக்கம் சார்ந்த குடும்பத்தில் பிறந்தவர். பள்ளிப் பருவத்திலேயே ஏராளமான நூல்களைத் தேடிப் படிக்கும் பழக்கம் உடையவராக இருந்திருக்கிறார். ‘புதிய பார்வை’ ‘பெண்ணே நீ’ போன்ற சிற்றிதழ்களிலும் ‘ஆறாம் திணை’ என்ற இணைய தளத்திலும்

Not to be republished ©KTBS

பணியாற்றியபோது ஏராளமான ஆய்வுக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ‘மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்’ என்ற நூலிலிருந்து இக்கட்டுரை தொகுக்கப்பட்டுள்ளது.

### பயிற்சி

**I. ஒரு வாக்கியத்தில் விடை தருக :**

1) இராமாமிர்தம் அம்மையாரின் பெற்றோர் யாவர் ?

2) இராமாமிர்தம் அம்மையார் கற்ற மொழிகள் யாவை ?

3) இராமாமிர்தம் அம்மையார் யாரைத் திருமணம் செய்து கொண்டார் ?

4) இராமாமிர்தம் அம்மையார் காலத்தில் தேவதாசி முறை எங்கெங்கு வேரூன்றி இருந்தது ?

5) தேவதாசிகளின் பறிக்கப்பட்ட உரிமை யாது ?

6) இராமாமிர்தம் அம்மையார் மீது கோபம் கொண்ட சிலர் மேடை மீதேறி செய்த செயல் யாது ?

7) காந்தியடிகள் முன்மொழிந்த ஒத்துழையாமை இயக்கத்தின் முதல் போர்வாள் யாது ?

8) இராமாமிர்தம் அம்மையார் யாருடைய வழியைத் தீவிரமாகப் பின்பற்றினார் ?

9) நீதிமன்றத்தில் நீதிபதி இராமாமிதம் அம்மையாரை நோக்கிக் கேட்டது என்ன ?

10) காக்கிநாடாவில் நடந்த அகில இந்திய மாநாட்டின் போது வெள்ளையர்கள் பிறப்பித்த உத்தரவு யாது ?

11) சுயமரியாதை இயக்க வீராங்கனை இராமாமிர்தம் யாருடைய வழியில் பயணித்தார் ?

©KTBS Not to be republished

12) இராமாமிர்தம் அம்மையார் சித்தர்க்காடு சந்தைக்குச் சென்றது ஏன் ?

13) இராமாமிர்தம் அம்மையார் எழுதிய நூல்கள் யாவை ?

14) சட்டமன்றத் துணைத் தலைவராக இருந்து தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறக் காரணமாய் இருந்தவர் யார் ?

15) இராமாமிர்தம் அம்மையார் முத்துலட்சமி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியது யாது ?

**II. மூன்று வாக்கியங்களில் விடை தருக :**

1) இராமாமிர்தத்தின் பெற்றோர் தன் மகளை யாரிடம் எவ்வளவிற்கு விற்றனர் ?

2) இராமாமிர்தம் அம்மையார் காலத்தில் தேவதாசிகளின் வாழ்க்கை எவ்வாறு இருந்தது ?

3) தன்மீது நடந்த இழிசெயலைக் கண்டு அச்சம் கொள்ளாத இராமாமிர்தம் தன் கூந்தலை என்ன செய்து கொண்டார்?

4) இராமமிர்தம் அம்மையார் கதராடைகளை எவ்வாறு விற்றார் ?

5) இராமாமிர்தம் அம்மையாரை எதுவும் செய்ய முடியாமல் வெள்ளைக்கார அரசு திகைக்கக் காரணம் யாது ?

6) இராமமிர்தம் அம்மையாரை முதுமை விரைவிலேயே ஆட்கொள்ளக் காரணம் யாது ?

7) இராமாமிர்தம் அம்மையார் ஆதரவற்ற பெண்களுக்குச் செய்த கடமைகள் யாவை ?

©KTBS Not to be republished

**III. ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக :**

1) சுயம்பு பிள்ளையை பற்றி எழுதுக.

2) ஏழைக் குழந்தைகளுக்கு இராமாமிர்தம் எவ்வாறு நிதி திரட்டி உதவினார் ?

3) இராமாமிர்தம் தேவதாசி முறையை ஒழிக்க எவ்வாறு போராடினார் ?

**IV. எட்டு வாக்கியங்களில் விடை தருக :**

1) இராமாமிர்தம் அவர்களின் கூந்தலை அரிந்த நிகழ்ச்சியை விவரி !

2) கதராடை களவு போன நிகழ்ச்சியை விவரி.

3) இராமாமிர்தம் 'நடமாடும் கொடியாக வந்த நிகழ்ச்சியை விவரி'.

4) இராமாமிர்தம் அம்மையார் தன் இறுதிக் காலத்தில் செய்த உதவிகளை விளக்குக :

**V. இடம் சுட்டி விளக்குக :**

1) "அப்பெண்ணு க்கு என்ன தண்டனை வழங்கலாம் ?"

2) "கொடியையே ஆடையாக உடுத்திக் கொள்கிறேன்" 'பார்'.

**VI. கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1) குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த பெண்களுக்கு ............ கட்டி, கடவுளின் அடிமைகளாக ஆக்கப்பட்டனர்.

2) தேவதாசி ஒழிப்புச் சட்டம் ............ ஆம் ஆண்டு நிறைவேறியது ?

©KTBS Not to be republished

*3)* இராமாமிர்தம் அம்மையார் ஒரு ............ என்பதால் கூடுதலான அவமானங்களைச் சந்திக்க நேர்ந்தது.

*4)* இராமாமிர்தம் ............ காட்டிய பாதையில் பயணித்தார்.

**VII. *கீழ்க்காணும் தொடர்களை எதிர்மறைத் தொடர்களாக மாற்றுக :***

எ.கா : சாதனை **படைத்த** பெண் ; சாதனை - **படைக்காத** பெண்.

*1)* வறுமை வேரூன்றி இருந்தது ................

*2)* கொடி பிடித்துச் சென்றனர் ..............

*3)* ஜமீன்தாரைச் சார்ந்து வாழ்ந்தனர் ..............

*4)* உடல் தளர்ந்து இருந்தார் ...............

***அறிந்துகொள்க :***

குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த குழந்தைக்கும் கடவுளுக்கும் திருமணம் செய்து வைக்கும் சடங்குகளை கோயில் குருக்களே நடத்தி வைப்பார். அப்போது கடவுளின் சார்பாக அவரே அக்குழந்தையின் கழுத்தில் தாலி கட்டுவார் இதுவே பொட்டுக் கட்டுதலாகும்.

©KTBS
Not to be republished

# இலக்கணம்

## 1. எழுத்து

சொல்லுக்கு முதற் காரணமாக இருப்பது ஒலி ஆகும். அதற்கு வரிவடிவம் கொடுத்து எழுதுவதை எழுத்து என்கிறோம்.

தமிழ் எழுத்துக்கள், முதல் எழுத்து, சார்பெழுத்து என இரு வகைப் படும்.

***முதல் எழுத்துக்கள் :*** தமிழ் மொழியில் உள்ள உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், மெய் எழுத்துக்கள் பதினெட்டும் முதல் எழுத்துக்கள் எனப்படும். இவ்வெழுத்துக்கள் எல்லாம் பிற எழுத்துக்கள் தோன்றுவதற்கு முதலாவதாக இருப்பதால் இவற்றை முதல் எழுத்துக்கள் என்பர்.

***சார்பு எழுத்துக்கள் :*** தமிழ் மொழியில் உள்ள உயிர் எழுத்துக்களையும், மெய் எழுத்துக்களையும் சார்ந்து பிறக்கும் எழுத்துக்கள் சார்பு எழுத்துக்கள் எனப்படும். அவை பத்து வகைப்படும்.

அவையாவன : (1) உயிர்மெய், (2) ஆய்தம், (3) உயிரளபெடை (4) ஒற்றளபெடை (5) குற்றியலுகரம் (6) குற்றியலிகரம் (7) ஐகாரக் குறுக்கம் (8) ஔகாரக் குறுக்கம் (9) மகரக் குறுக்கம் (10) ஆய்தக் குறுக்கம்.

1) ***உயிர்மெய் :*** உயிர் எழுத்துக்களும், மெய் எழுத்துக்களும் தனித்தனியே சேர்ந்து தோன்றும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். இது (12 x 18 = 216) இரு நூற்றுப் பதினாறு ஆகும்.

2) ***ஆய்தம் :*** மூன்று புள்ளி (-ஃ) வடிவாக எழுதப்படும் எழுத்து ஆய்தம் எனப்படும். இதனைத் தனிநிலை என்றும் கூறுவர். இது குறிலுக்குப் பின்னும் வல்லின மெய்க்கு முன்னும் வரும்.

(எ-டு) அஃது, எஃகு, அஃறிணை

Not to be republished ©KTBS

3) ***உயிரளபெடை :*** செய்யுளில் ஓசை குறையும்போது, உயிர் எழுத்துக்களில் நெடில் எழுத்துக்கள் ஏழும், குறில் எழுத்துக்களும் நெடிலாகித் தமக்குரிய ஓசை அளவில் இருந்து நீண்டு ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பது உயிரளபெடை எனப்படும், அளபெடுத்ததற்கு அடையாளமாக, அவற்றிற்கு இனமாகிய குறில் எழுத்துக்கள், அவற்றின் பின் எழுதப்படும்.

(எ-டு) ஓஒதல், தொழாஅர், எடுப்பதூ உம்.

4) ***ஒற்றளபெடை :*** ஒற்றெழுத்துக்கள் (மெய் எழுத்துக்கள்) அனைத்தும் அரை மாத்திரை அளவு ஒலிக்கும். அந்த அளவிலிருந்து நீண்டு ஒலிப்பதற்கு ஒற்றளபெடை எனப்படும்.

மெய்யெழுத்துக்களில் ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்து எழுத்துக்களும், ஆய்த எழுத்தும், செய்யுளில் ஓசை குறையும்போது, அவ்வோசையை நிறைக்க அளபெடுத்து ஒலிக்கும். அவ்வாறு அளபெடுக்கின்ற ஒற்றெழுத்தின் பின் அவ்வொற்றெழுத்தே அடையாளமாக எழுதப்படும்.

(எ-டு) இலங்ங்கு வெண்பிறை, எஃஃ ஃகிலங்கிய

5) ***குற்றியலுகரம் :*** தனி நெடிலை அடுத்தும், இரண்டும் இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்ட சொல்லின் இறுதியிலும், வல்லின மெய்களின் மேல் ஏறிவரும் உகரம் (கு, சு, டு, து, பு, று) தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து அரை மாத்திரையளவில் இருந்து அரை மாத்திரையளவில் ஒலிப்பதையே குற்றியலுகரம் என்பர்.

கடைசி எழுத்திற்கு முந்தைய எழுத்தை நோக்கக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

***அவை :*** (1) வன்தொடர்க்குற்றியலுகரம், (2) மென்தொடர்க் குற்றியலுகரம் (3) இடைத் தொடர்க்குற்றியலுகரம்

Not to be republished ©KTBS

(4) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் (5) நெடில் தொடர்க்குற்றியலுகரம் (6) ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

எ-டு பட்டு, காற்று - வன்தொடர்க்குற்றியலுகரம்

அன்பு, சங்கு - மென்தொடர்க் குற்றியலுகரம்

சால்பு, மார்பு - இடைத் தொடர்க் குற்றியலுகரம்

அழகு, தராசு - உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

நாடு, ஆறு - நெடில் தொடர்க் குற்றியலுகரம்

அஃது, எஃகு - ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

6) **குற்றியலிகரம் :** நிலைமொழி ஈற்றில் குற்றியலுகரம் நின்று, வருமொழி முதலில் யகரம் வந்தால், அவ்வுகரம் இகரமாகத் திரியும். அவ்வாறு திரிந்து வரும் இகரமும், 'மியா' என்னும் அசைச் சொல்லில் உள்ள இகரமும் குற்றியலிகரம் ஆகும்.

இந்த இகரமும் தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் இருந்து குறைந்து அரை மாத்திரையாக ஒலிக்கும் ஆகவே குற்றியலிகரம் எனப்பட்டது.

(எ-டு) நாடு + யாது = நாடியாது

வரகு + யாது = வரகியாது

கேண் + மியா = கேண்மியா

செல் + மியா = சென்மியா

### வினாக்கள்

1) தமிழில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

2) தமிழ் முதல் எழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

3) சார்பெழுத்துக்கள் என்றால் என்ன ? அவை யாவை ?

Not to be republished ©KTBS

4) உயிர் மெய் எழுத்து என்றால் என்ன ? அது எத்தனை ? அவை யாவை ?

5) ஆய்த எழுத்து பற்றி எழுதுக.

6) உயிரளபெடை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

7) குற்றியலுகரம் என்றால் என்ன ? விளக்குக.

8) குற்றியலிகரம் என்றால் என்ன ? விளக்குக.

9) குற்றியலுகரம் எத்தனை வகைப்படும் ? எடுத்துக் காட்டுகள் தருக.

## போலி

ஒரு சொல்லில் ஓர் எழுத்து இருக்க வேண்டிய இடத்தில் வேறு ஓர் எழுத்து வந்து பொருள் மாறாமல் இருந்தால் அவ்வெழுத்து போலி எனப்படும்.

(எ-டு) அறம் - அறன் ; பந்தல் - பந்தர்

இது மொழி முதல் போலி, மொழியிடைப் போலி, மொழியிறுதிப் போலி என மூன்று வகைப்படும்.

1) **மொழி முதற்போலி :** ஒரு சொல்லின் முதலில் வரும் எழுத்து வேறுபட்டுப்பொருள் மாறாமல் வருவது 'மொழி முதற்போலி' எனப்படும்.

(எ-டு) ஞாயிறு - நாயிறு ; மையல்-மயல்

2) **மொழியிடைப்போலி** ஒரு சொல்லின் இடையில் வரும் எழுத்து மாறுபட்டுப் பொருள் மாறாமல் வருவது 'மொழியிடைப்போலி' எனப்படும்.

(எ-டு) அரசன் - அரைசன்

Not to be republished ©KTBS

3) ***மொழியிறுதிப் போலி :*** இறுதியில் வரும் எழுத்து மாறுபட்டுப் பொருள் மாறாமல் வருவது மொழியிறுதிப் போலி (கடைப் போலி) எனப் படும்.

(எ-டு) அறம் அறன் ; முகம் - முகன்.

### வினாக்கள்

1) போலி என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

2) போலி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? ஒவ்வொன்றிற்கும் ஓர் எடுத்துக் கா ட்டு தருக.

### பதம்

எழுத்து தனித்து நின்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்தோ ஒரு குறிப்பிட்ட பொருளைத் தருவது சொல் ஆகும். இதனைப் பதம் என்றும் சொல்லுவர். இது பகாப்பதம், பகுபதம் எனஇருவகை ப்படும்.

1) **பகாப் பதம் :** பிரித்தால் பொருள் தராதது பகாப்பதம் எனப்படும். இது பெயர், வினை, இடை, உரி என்று நான்கு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| (எ-டு) | மண், பொன் | - பெயர்ப் பகாப் பதம் |
| | நட, ஓடு | - வினைப் பகாப் பதம் |
| | மற்று, உம் | - இடைப் பகாப் பதம் |
| | தவ, நனி | - உரிப் பகாப் பதம் |

2) **பகுபதம் :** பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிந்து நிற்கும் சொற்கள் பகுபதம் எனப்படும். அவ்வாறு பிரிந்து நிற்கும் சொற்கள் பொருள் தரும் ; அல்லது பயன் நோக்கி நிற்கும் இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரு வகைப்படும்.

©KTBS Not to be republished

(எ-டு) கண்ணன் (கண்+அன்) பெயர்ப் பகுபதம்

உண்டான் (உண்+ட்+ஆன்) வினைப் பகுபதம்

**பகுபத உறுப்புக்கள் :**

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறும் பகுபத உறுப்புகள் ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நடந்தனன் - | நட | + த் | + த் | + அன் + | அன் |
| | பகுதி | சந்தி(ந்) | இடைநிலை | சாரியை | விகுதி |

இதில் 'த்' சந்தி. இது 'ந்' - ஆகி மாறியது விகாரம் ஆகும். சொல்லின் முதலில் இருக்கும் பகாப்பதமே பகுதி எனப்படும். சொல்லின் இறுதியில் இருப்பது விகுதி எனப்படும் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் இருப்பது இடைநிலை எனப்படும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வருவது சாரியை எனப்படும்.

பகுதியையும் அதற்கடுத்த உறுப்பையும் ஒன்றுசேர்ப்பது சந்தி சந்தியில் தோன்றும் மாறுபாடுகளே விகாரம் எனப்படும்.

(எ-டு)

| சொல் | பகுதி | சந்தி | இடைநிலை | சாரியை | விகுதி |
|---|---|---|---|---|---|
| உண்க | உண் | - | - | - | க |
| உண்டான் | உண் | - | ட் | | ஆன் |
| உண்டனன் | உண் | - | ட் | அன் | அன் |
| படித்தனன் | படி | த் | த் | அன் | அன் |
| நடந்தனன் | நட | த்(ந்) | த் | அன் | அன் |

**காலம் காட்டும் இடை நிலைகள் :** வினைச் சொல்லில் வரும் இடைநிலைகள் காலம் காட்டும். காலம் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

1) **இறந்த கால இடைநிலைகள் :** த், ட், ற், இன், ஆகிய நான்கும் இறந்த கால இடை நிலைகள் ஆகும். இவை ஐம்பால், மூவிடங்களிலும் வரும்.

(எ-டு)

| | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|
| செய்தான் | செய் | + | த் | + | ஆன் |
| உண்டான் | உண் | + | ட் | + | ஆன் |
| தின்றான் | தின் | + | ற் | + | ஆன் |
| கூறினான் | கூறு | + | இன் | + | ஆன் |

2) **நிகழ்கால இடைநிலைகள் :** ஆநின்று, கின்று, கிறு ஆகிய மூன்றும் நிகழ்கால இடைநிலைகள் ஆகும். இவையும் ஐம்பால், மூவிடங்களிலும் வரும்.

(எ-டு)

| | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|
| நடவா நின்றான் | நட | + | ஆநின்று | + | ஆன் |
| உண்கின்றான் | உண் | + | கின்று | + | ஆன் |
| உண்கிறான் | உண் | + | கிறு | + | ஆன் |

**எதிர்கால இடைநிலைகள் :** ப், வ் ஆகிய இரண்டும் எதிர்கால இடைநிலைகள் ஆகும். இவையும் ஐம்பால், மூவிடங்களிலும் வரும்.

(எ-டு)

| | பகுதி | | இடைநிலை | | விகுதி |
|---|---|---|---|---|---|
| காண்பான் | காண் | + | ப் | + | ஆன் |
| பாடுவான் | பாடு | + | வ் | + | ஆன் |

©KTBS Not to be republished

## வினாக்கள்

1) பதம் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

2) பகுபதம், பகாப்பதம் - விளக்குக.

3) பகுபத உறுப்புக்கள் யாவை ?

4) பகுபதத்தை ஒரு எடுத்துக்காட்டுடன் பிரித்துக் காட்டுக.

5) இறந்தகால இடைநிலைகள் யாவை ? எடுத்துக்காட்டுகள் தருக.

6) நிகழ்கால இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

7) எதிர்கால இடைநிலைகள் யாவை ? எடுத்துக்காட்டு தருக.

©KTBS Not to be republished

# 2. சொல்

## i) வழக்கு

நம் முன்னோர்களைப் பின்பற்றிச் சொற்கள் வழங்கும் முறையை வழக்கு என்பர். இது இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என இரு வகைப்படும்.

*1)* ***இயல்பு வழக்கு :*** ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லாலேயே அப்பொருளை வழங்குவது இயல்பு வழக்கு எனப்படும். இது இலக்கணமுடையது, இலக்கணப் போலி, மரூஉ என மூவகைப்படும்.

i) ***இலக்கணமுடையது :*** இலக்கண முறைப்படி சொற்கள் வழங்குவது இலக்கணம் உடையது எனப்படும்.

(எ-டு) நிலம், நீர், காற்று, வந்தான்.

ii) ***இலக்கணப் போலி :*** இலக்கண முறைப்படி சொற்கள் இல்லா விட்டாலும், இலக்கணம் உடையது போலச் சான்றோரால் தொன்று தொட்டு வழங்கப்படுவது ‘இலக்கணப் போலி’ எனப்படும்.

| (எ-டு) | ***இலக்கணம் உடையது*** | - | ***இலக்கணப் போலி*** |
|---|---|---|---|
| | இல்வாய் | - | வாயில் |
| | இல்முன் | - | முன்றில் |
| | நகர்ப்புறம் | - | புறநகர் |
| | புல்நுனி | - | நுனிப்புல் |

iii) ***மரூஉ :*** தொன்று தொட்டு வருதல் இன்றி, இடையிலே சொற்களும், எழுத்துக்களும் இலக்கண முறைப்படி இல்லாமல் திரிந்தும் சிதைந்தும் வழங்குவதை ‘மரூஉ’ என்பர்.

| | | | |
|---|---|---|---|
| (எ டு) | அருமருந்தன்ன பிள்ளை | - | அருமந்த பிள்ளை |
| | சோழ நாடு-சோணாடு | - | தஞ்சை |

Not to be republished ©KTBS

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | - | தஞ்சை |
| பெயர் | - | பேர் |
| யார் | - | ஆர் |
| யானை | - | ஆனை |

***தகுதி வழக்கு :*** ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை நீக்கி, தகுதியான வேறு சொல்லால் அப்பொருளைக் கூறுவது 'தகுதி வழக்கு' எனப்படும். இது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என்று மூன்று வகைப்படும்.

1) ***இடக்கரடக்கல் :*** சொல்லத்தகாத சொற்களை மறைத்து, வேறு நல்ல சொற்களால் கூறுவது 'இடக்கரடக்கல்' எனப்படும்.

(எ-டு) கால் கழுவி வந்தான் (மலம் கழுவி வந்தான்)
ஒன்றுக்குப் போனான் (சிறுநீர் கழிக்கப் போனான்)

2) ***மங்கலம் :*** மங்கலம் அல்லாத சொல்லை நீக்கி மங்கலமான சொல்லால் கூறுவது 'மங்கலம்' எனப்படும்.

(எ-டு) செத்தார் - இயற்கை எய்தினார்
சுடுகாடு - நன்காடு

3) ***குழூஉக்குறி :*** ஒரு கூட்டத்தார் ஒரு பொருளுக்கு இயல்பாய் அமைந்த சொல்லை நீக்கிப் பிறர் அறியாதபடி, தம்மைச் சார்ந்தவர்க்கு மட்டும் பொருள் விளங்குமாறு வேறொரு சொல்லால் அப் பொருளைக் கூறுவது 'குழூஉக்குறி' எனப்படும்.

| (எ-டு) | குழூ | | குழூஉக்குறி | | பொருள் |
|---|---|---|---|---|---|
| 1) | வேடர் | - | சொல்விளம்பி | - | கள் |
| 2-) | மருத்துவர் | - | காட்டுத்திருடி | - | கள்ளிச்செடி |
| 3) | வணிகர் | - | குணவெள்ளை (வெள்ளரிக்காசு) | - | மூன்று ரூபாய் |

©KTBS Not to be republished

## வினாக்கள்

1) வழக்கு என்றால் என்ன ? அது எத்தனை வகைப் படும் ?

2) இயல்பு வழக்கு என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும்? அவை யாவை ?

3) இலக்கணப் போலி என்றால் என்ன ? எடுத்துக் காட்டுகள் தருக.

4) தகுதி வழக்கு என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை?

5) இடக்கரடக்கல் என்றால் என்ன ? விளக்குக.

6) குழூஉக் குறியை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

## ii) ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். இது பதினாறு வகைப்படும். அவற்றுள் பொருளாகு பெயர், இடவாகுபெயர், காலவாகுபெயர், சினையாகு பெயர், குணவாகு பெயர், தொழிலாகு பெயர் ஆகியவை பற்றி இங்குக் காண்போம்.

1) **பொருளாகுபெயர் :** ஒரு முதற்பொருளின் பெயர், அதன் சினைப் பொருளுக்குப் பெயராகி வருவது பொருளாகு பெயர் எனப்படும். இதனைத் தொழிலாகு பெயர் என்றும் கூறுவர்.

(எ-டு) : தாமரை போன்ற முகம்.

இதில் தாமரை என்னும் கொடியின் பெயர், அதன் உறுப்பாகிய மலருக்கு ஆகி வந்ததால், இது பொருளாகு பெயர் ஆயிற்று.

2) **இடவாகு பெயர் :** ஒரு இடத்தின் பெயர், அந்த இடத்திலுள்ள பொருளுக்குப் பெயராகி வருவது இடவாகு பெயர் எனப்படும்.

(எ-டு) : ஊர் சிரித்தது.

©KTBS Not to be republished

இதில் ஊர் என்னும் இடத்தின் பெயர், அங்குள்ள மக்களுக்கு ஆகி வந்ததால், இது இடவாகு பெயர் ஆயிற்று.

3) **காலவாகு பெயர் :** ஒரு காலத்தின் பெயர், அக்காலத்தோடு தொடர் புடைய பொருளுக்குப் பெயராகி வருவது காலவாகு பெயர் எனப்படும்.

(எ-டு) : கார் அறுத்தான்.

இதில் கார் என்னும் மழைக்காலத்தின் பெயர், அக்காலத்தில் விளையும் நெற் பயிருக்கு ஆகி வந்ததால் இது காலவாகு பெயர் ஆயிற்று.

4) **சினையாகு பெயர் :** ஒரு சினைப் பொருளின் பெயர் அதன் முதற்பொருளுக்குப் பெயராகி வருவது சினையாகு பெயர் எனப்படும்.

(எ-டு) வெற்றிலை நட்டான்.

இதில் வெற்றிலை என்னும் சினை (உறுப்பு)யின் பெயர் அதன் முதற்பொருளாகிய கொடிக்கு ஆகிவந்ததால் இது சினையாகு பெயர் ஆயிற்று.

5) **குணவாகு பெயர் :** ஒரு குணத்தின் பெயர், அக்குணம் உடைய பொருளுக்குப் பெயராகி வருவது குணவாகு பெயர் எனப்படும். இதனைப் பண்பாகு பெயர் என்றும் கூறுவர்.

(எ-டு) வெள்ளை அடித்தான்.

இதில் வெள்ளை என்னும் குணப்பெயர், அக்குணத்தை உடைய சுண்ணாம்பிற்கு ஆகி வந்ததால், இது குணவாகு பெயர் ஆயிற்று.

6) **தொழிலாகு பெயர் :** ஒரு தொழிலின் பெயர், அத்தொழிலை உடைய பொருளுக்குப் பெயராகி வருவது தொழிலாகு பெயர் எனப்படும்.

(எ-டு-) பொங்கல் உண்டான்.

©KTBS Not to be republished

இதில் பொங்கல் என்னும் தொழிலின் பெயர், அத்தொழிலை உடைய உணவுப் பொருளுக்கு ஆகிவந்ததால் இது தொழிலாகு பெயர் ஆயிற்று.

**வினாக்கள்**

1) ஆகுபெயர் என்றால் என்ன ? ஓர் எடுத்துக்காட்டு தருக.

2) பொருளாகுபெயர், சினையாகு பெயர் - விளக்குக.

3) இடவாகுபெயர், குணவாகு பெயர் - விளக்குக.

4) தொழிலாகு பெயரை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**iii) வினைச் சொல்**

ஒரு பொருளின் தொழில் (செயல்) நிகழ்ச்சியை உணர்த்தும் சொல் வினைச் சொல் எனப்படும்.

வினைச் சொல் முற்று, எச்சம் என இருவகைப்படும். முற்று தெரிநிலை வினைமுற்று, குறிப்பு வினைமுற்று என இருவகைப்படும்.

**1. தெரிநிலை வினைமுற்று :** காலமும் செயலும் வெளிப் படையாகத் தெரிய நிற்கும் வினைச்சொல் தெரிநிலை வினைமுற்று ஆகும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினையும் உணர்த்தும். (எ-டு) வனைந்தான்.

1) செய்பவன் - குயவன் 2) கருவி - மண், சக்கரம்

3) நிலம் - வனைந்த இடம் 4) செயல் - வனைதல் (தொழில்)

5) காலம் - இறந்தகாலம் 6) செய்பொருள் - குடம்

இவற்றுள் செய்பவன், செயல், காலம் மூன்றும் முறையே விகுதி, பகுதி, இடைநிலை என்னும் உறுப்புக்களால் வெளிப்படையாகத் தெரியும். மற்றவை குறிப்பாகத் தோன்றும்.

Not to be republished ©KTBS

***2) குறிப்பு வினைமுற்று :*** காலத்தையும், செயலையும் குறிப்பாக உணர்த்தும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும். இது பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு வகைப் பொருள் அடிப்படையாகப் பிறந்து விகுதியால் செய்பவனை (கருத்தா) மட்டும் காட்டும்.

(எ-டு) பொன்னன் - பொருள் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

பெங்களூரான் - இடப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

சித்திரையான் - காலப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

மூக்கன் - சினைப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

தீயன் - குணப்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

தச்சன் - தொழிற்பெயர் அடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று

இவற்றில் பொன்னன், பெங்களூரான், சித்திரையான், மூக்கன், தீயன், தச்சன் என்பவை காலத்தை வெளிப்படையாகக்காட்ட வில்லை, ஆகவே இவை குறிப்பு வினைமுற்றுக்கள் ஆகும்.

## எச்சம்

சொல்லின் பொருள் முற்றுப் பெற்று நிற்கும் வினைச்சொல் முற்று எனப்படும். பொருள் முற்றுப் பெறாமல் நிற்கும் வினைச் சொல் ‘எச்சம்’ எனப்படும். இது பெயரெச்சம், வினை யெச்சம் என இரு வகைப்படும். இது எதிர்மறைப் பொருளில் வரும்போது எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினை யெச்சம் எனப்படும்.

©KTBS Not to be republished

***1) பெயரெச்சம் :*** காலத்தை வெளிப்படையாகக் காட்டிப் பெயரைக் கொண்டு பொருள் முடியும் எச்ச வினை, 'தெரிநிலைப் பெயரெச்சம்' எனப்படும்.

(எ-டு) படித்த பையன் - இறந்த காலம்

படிக்கின்ற பையன் - நிகழ் காலம்

படிக்கும் பையன் - எதிர் காலம்.

***2) வினையெச்சம் :*** காலத்தை வெளிப்படையாகக்காட்டி வினையைக் கொண்டு முடியும் எச்ச வினை தெரிநிலை வினையெச்சம் எனப்படும்.

(எ-டு) படித்து வந்தான் - இறந்த காலம்

படிக்க வந்தான் - நிகழ்காலம்

***3) எதிர்மறைப்பெயரெச்சம் :*** ஒரு தொழிலின் நிகழ்ச்சியை எதிர் மறுக்கும் பெயரெச்சம் 'எதிர்மறைப் பெயரெச்சம்' எனப்படும்.

(எ-டு) உண்ணாத குதிரை

படிக்காத பெண்

எதிர்மறைப் பெயரெச்சத்தின் ஈறு (கடை எழுத்து) கெட்டுவரின் அது 'ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்' எனப்படும்.

((எ-டு) வாழா கவரிமான்

ஓடா குதிரை

***4) எதிர்மறை வினையெச்சம் :*** ஒரு தொழிலின் நிகழ்ச்சியை எதிர் மறுக்கும் வினையெச்சம் 'எதிர்மறை வினையெச்சம்' எனப்படும்.

(எ-டு) உண்ணாது வந்தான்

செய்யாது இருந்தான்

எதிர்மறை வினையெச்சத்தின் ஈறு (கடைசி எழுத்து) கெட்டுவரின் அது 'ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம் எனப்படும்.

©KTBS Not to be republished

(எ-டு) உண்ணாச் சென்றான்

செய்யாக் கிடந்தான்

## வினாக்கள்

1) வினைச் சொல் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும்?

2) தெரிநிலை வினை முற்று - எடுத்துக் காட்டுடன் விளக்கு.

3) குறிப்பு வினைமுற்று என்றால் என்ன ? ஓர் எடுத்துக் காட்டுடன் விளக்குக.

4) எச்சம் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

5) தெரிநிலைப் பெயரெச்சம் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

6) தெரிநிலை வினையெச்சத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

7) எதிர்மறைப் பெயரெச்சம், எதிர்மறை வினையெச்சம் ஆகியவற்றை விளக்குக.

©KTBS Not to be republished

## iv) புணர்ச்சி

சொற்கள் ஒன்றோடொன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். இது வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரு வகைப்படும்.

முதலில் நிற்கும் சொல் 'நிலைமொழி' என்றும், அதை அடுத்து வந்து சேர்வது 'வருமொழி' என்றும் கூறப்படும்.

*1)* ***வேற்றுமைப் புணர்ச்சி :*** இரண்டு சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபுகள், (ஐ, ஆல், கு, இன், அது, கண்) மறைந்தோ வெளிப்பட்டோ புணரும் புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும்.

வேற்றுமை உருபுகள் மறைந்து வருவது 'வேற்றுமைத் தொகை' எனப்படும். வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு வருவது வேற்றுமை விரி எனப்படும்.

| | |
|---|---|
| சோறு உண்டான்<br>கல் எறிந்தான்<br>குறத்தி மகன்<br>மலைவீழ் அருவி<br>முருகன் வேல்<br>மாடப்புறா | வேற்றுமைத் தொகை |
| சோற்றை உண்டான்<br>கல்லால் எறிந்தான்<br>குறத்திக்கு மகன்<br>மலையின் வீழ் அருவி<br>முருகனது வேல்<br>மாடத்தின்கண் புறா | வேற்றுமை விரி |

Not to be republished ©KTBS

***2. அல்வழிப்புணர்ச்சி :*** *வேற்றுமை அல்லாத வழியில் புணரும் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி எனப்படும்.*

*அல்வழியில் புணரும் தொடர்கள் தொகைநிலைத் தொடர் என்றும், தொகா நிலைத் தொடர் என்றும் இரு வகைப்படும்.*

***1) தொகைநிலைத் தொடர் :*** *ஒரு தொடருக்கு இடையில் ஏதேனும் ஒரு சொல் தொக்கி (மறைந்து) நின்றால் அது தொகை நிலைத் தொடர் எனப்படும். இது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, வேற்றுமைத் தொகை அன்மொழித் தொகை என ஆறு வகைப்படும்.*

***வினைத்தொகை :*** *இரண்டு சொற்கள் இணைந்து காலம் மறைந்து வருதல் வினைத் தொகை எனப்படும்.*

*(எ-டு-) குடிநீர், ஆடு பாம்பு, விடுகதிர்.*

***பண்புத்தொகை :*** *இரண்டு சொற்களுக்கு இடையில் ஆகிய, ஆன என்ற பண்பு உருபுகள் மறைந்து வருவது பண்புத்தொகை ஆகும்.*

*(எ-டு) செந்தமிழ் - செம்மையாகிய தமிழ்.*

*கருங்கூந்தல் - கருமையான கூந்தல்.*

***உவமைத்தொகை :*** *இரண்டு சொற்களுக்கு இடையில் போல, போன்ற ஆகிய உவம உருபுகளில் ஒன்று மறைந்து வருவது உவமைத் தொகை எனப்படும்.*

*(எ-டு) பவள வாய் - பவளம் போன்ற வாய்*

*மதி முகம் - மதி போன்ற முகம்.*

***உம்மைத் தொகை :*** *இரண்டு சொற்களுக்கு இடையில் 'உம்' என்ற இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகை எனப்படும்.*

*(எ-டு-) சேர, சோழ, பாண்டியர் - சேரரும் சோழரும் பாண்டியரும்.*

*பொரி கடலை - பொரியும் கடலையும்.*

©KTBS Not to be republished

**வேற்றுமைத் தொகை :** இரண்டு சொற்கள் சேரும்போது இடையில் இரண்டாம் வேற்றுமை உருபு முதல் ஏழாம் வேற்றுமை உருபு வரை (ஐ, ஆல், இன், குஅது, கண்) ஏதாவது ஓர் உருபு மறைந்து வருவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

(எ-டு) மோர் குடித்தான் - மோரைக் குடித்தான்.

**அன்மொழித்தொகை :** வினை, பண்பு, உவமை, உம்மை, வேற்றுமை ஆகிய தொகை நிலைத் தொடர்களில் இணைந்தசொற்களை உணர்த்தாமல், அவற்றோடு தொடர்புடைய வேறொரு பொருளை உணர்த்துவது அன்மொழித் தொகை எனப்படும்.

(எ-டு) பூங்குழல் வந்தாள்.

இத்தொடரில் பூவை அணிந்த கூந்தலை உடைய பெண் வந்தாள் என்பது விளக்கப்படுகிறது. கூந்தலைக் கூறாமல் அதோடு தொடர்புடைய பெண்ணைக் கூறுவதால், இது அன்மொழித் தொகை எனப்படும்.

2) **தொகாநிலைத் தொடர் :** இரண்டு சொற்கள் சேரும்போது இடையில் ஏதும் மறையாமல் இருந்தால் அது 'தொகாநிலைத் தொடர்' எனப்படும். இது பின் வருமாறு.

| | | |
|---|---|---|
| எழுவாய்த் தொடர் | - | முருகன் வந்தான் |
| விளி த்தொடர் | - | முருகா, வா |
| தெரிநிலை வினைமுற்றுத்தொடர் | - | வந்தான் முருகன் |
| குறிப்பு வினைமுற்றுத் தொடர் | - | பொன்னன் அவன் |
| பெயரெச்சத்தொடர் | - | வந்த பையன் |
| வினயெச்சத் தொடர் | - | படிக்க வந்தான் |
| இடைச் சொல் தொடர் | - | மற்றும் ஒன்று |
| உரிச் சொல் தொடர் | - | உறுபொருள் |
| அடுக்குத் தொடர் | - | வருக ! வருக ! |

©KTBS Not to be republished

## உயிர் ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழியில் இறுதி எழுத்து உயிராக இருந்தால், உயிரீறு என்றும், மெய்யாக இருந்தால் மெய்யீறு என்றும் கூறப்படும். (உயிர் ஈறு என்பது உயிர் மெய்யாக இருக்கும்.)

***உயிரோடு உயிர் புணர்தல் :*** நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர் ஈற்றுடன், வருமொழி முதலில் உள்ள உயிர் சேரும்போது, வ், ய் என்னும் மெய்யெழுத்துக்கள் தோன்றும். இவை 'உடம்படுமெய்' எனப்படும்.

(எ-டு) மணி + அழகு = மணியழகு (மணி+ய்+அழகு)

திரு + அடி = திருவடி (திரு+வ்+அடி)

***உயிரீற்று முன் வல்லினம் புணர்தல் :*** சொல்லின் இறுதியில் நின்ற உயிர்முன் வருமொழி முதலில் உள்ள க், ச், த், ப் என்னும் வல்லின மெய்கள் பெரும்பாலும் மிகும்.

(எ-டு) பலா + காய் = பலாக்காய்
ஆடூஉ + கை = ஆடூஉக்கை } இயல்பீறு

வட்டம் + கல் = வட்டக்கல்
மறம் + குலம் = மறக்குலம் } விகுதியீறு நீங்கும்.

***குற்றியலுகரத்தின் முன் உயிரும், யகரமும் புணர்தல் :***

குற்றியலுகரம், வருமொழி முதலில் உயிர்வந்தால், தான் ஏறி நின்ற மெய்யை விட்டுக் கெடும் ; யகரம் வந்தால் இகரமாகத் திரியும். சில சமயம் முற்றியலுகரம் இவ்விரு விதிகளையும் பெறும்.

(எ-டு) வரகு + அரிசி = வரகரிசி
எஃகு + அரிது = எஃகரிது } குற்றியலுகரம் கெட்டது

நாகு + யாது = நாகியாது
வரகு + யாது = வரகியாது } குற்றியலுகரம் இகரமாகத் திரிந்தது

©KTBS Not to be republished

கதவு + அழகிது = கதவழகிது
கதவு + யாது = கதவியாது
அது + ஐ = அதை
} முற்றியலுகரம் அவ்விரு விதிகளையும் பெற்றது.

**வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வல்லினம் புணர்தல் :**

வன்தொடர்க் குற்றியலுகரத்தை ஈறாக உடைய மொழிகளின் முன் வரும் வல்லினம் மிகும்.

(எ-டு) சுக்கு + கொடு = சுக்குக்கொடு
பாட்டு + பாடு = பாட்டுப்பாடு

நெடில் தொடர்க்குற்றியலுகரத்திலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்திலும், உகரம் ஏறி நின்ற டகர, றகர மெய்கள் (டு, று) வேற்றுமைப் புணர்ச்சியிலும் பெரும்பாலும் இரட்டிக்கும்.

(எ-டு) நாடு + பற்று = நாட்டுப்பற்று
ஆறு + மணல் = ஆற்று மணல்
} நெடில்தொடர்க் குற்றியலுகரம்

முரடு + மனிதன் = முரட்டு மனிதன்
வயிறு + வலி = வயிற்று வலி
} உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

**மென்தொடர்க் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகர மாகத்திரிதல் :**

சில மென்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள், வேற்றுமையிலும் அல்வழியிலும் பண்புத் தொகையிலும் உவமைத் தொகையிலும் வன்தொடர்க்குற்றிலுகரச் சொற்களாகத் திரியும்.

(எ-டு) மருந்து + பை = மருந்துப்பை
வேம்பு + இலை = வேப்பிலை
கன்று + ஆ = கற்றா
} வேற்றுமை

அன்பு + தளை = அற்புத்தளை
என்பு + உடம்பு = எற்புடம்பு
} பண்புத்தொகை

©KTBS Not to be republished

குரங்கு + மனம் = குரக்குமனம்
இரும்பு + நெஞ்சம் = இருப்பு நெஞ்சம் } உவமைத்தொகை

### மென்தொடர்க் குற்றியலுகரம் ஐகாரச் சாரியை பெறுதல் :

சில மென்தொடர்க் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள், இறுதியில் ஐகாரச் சாரியை பெற்று வரும்.

(எ-டு) பண்டு + காலம் = பண்டைக்காலம்
இன்று + நாள் = இற்றை நாள்
அன்று + கூலி = அற்றைக் கூலி
இன்று + நலம் = இற்றை நலம்

### வினாப் பெயர், விளிப்பெயர் முன் வல்லினம் புணர்தல் :

நிலைமொழி ஈற்றிலுள்ள ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துக்கள் முன்னும், எல்லா விளிப்பெயர்கள் முன்னும் வரு மொழி முதலில் வல்லெழுத்துக்கள் வந்தால் இயல்பாகும்.

(எ-டு) இராமனா + கண்டன் = இராமனாகண்டான்
நீயே + சொன்னாய் = நீயே சொன்னாய்
தம்பியோ + தந்தான் = தம்பியோ தந்தான்
மகனே + சொல் = மகனே சொல்
தம்பீ + போ = தம்பீ போ
தாயே + தா = தாயே தா

### சுட்டு எழுத்துக்களின் முன் எகர வினா புணர்தல் :

அ, இ, உ என்னும் மூன்று சுட்டின் முன்னும், எகரவினா முன்னும், யகரம் நீங்கிய மெய்கள் வந்தால் வந்த எழுத்து மிகும். யகரமும் உயிரும் வந்தால் இடையில் வகரம் தோன்றும்.

(எ-டு) அ + குதிரை = அக்குதிரை
இ + நாடு = இந்நாடு
எ -+ வீடு = எவ்வீடு } வந்தமெய்தோன்றல்



©KTBS Not to be republished

அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை
எ + யானை = எவ்யானை
அ + உயிர் = அவ்வுயிர்
எ + இலை = எவ்விலை

} வகரம் தோன்றியது

***மெய்யீற்றுப் புணர்ச்சி :***

தனிக்குற்றெழுத்தைச் சேராத மெய்யீற்றின் முன், உயிர் வந்தால், வந்த உயிர் அந்த மெய்யெழுத்தோடு சேர்ந்து உயிர்மெய்யாகும்.

(எ-டு) ஆண் + அழகு = ஆணழகு
உயிர் + எழுத்து = உயிரெழுத்து
வான் + ஒலி = வானொலி
தேர் + ஓட்டம் = தேரோட்டம்

தனிக்குற்றெழுத்தைச் சேர்ந்த மெய்யீற்றின்முன், உயிர் வந்தால் அம்மெய் இரட்டிக்கும் ; இரட்டித்த மெய்யெழுத்தோடு வந்த உயிர் சேர்ந்து உயிர்மெய்யாகும்.

(எ-டு) கல்+எறிந்தான் = கல்லெறிந்தான் (கல்+ல்+எறிந்தான்)
பொன்+அணி = பொன்னணி (பொன் + ன் + அணி)
விண் + அகம் = விண்ணகம் (விண் + ண் + அகம்)

**வினாக்கள்**

1) புணர்ச்சி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும்?

2) வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன ? எடுத்துக் காட்டுகள் தருக.

3) அல்வழிப் புணர்ச்சி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

©KTBS Not to be republished

4) தொகைநிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? விளக்குக.

5) தொகாநிலைத் தொடரினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

6) கீழ்க்கண்ட வற்றுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

தம்பி + போ

நாடு + பற்று

பண்டு + காலம்

மண் + குடம்

7) கீழ்க்கண்ட வற்றைப் பிரித்தெழுதுக.

வரகரிசி

பலாக்காய்

விண்ணகம்

மரவடி

கட்குடம்

©KTBS Not to be republished

# 3. பொருள்

நமது இலக்கியங்களுக்குப் பாடும் பொருள்களாக அமைவன அகப்பொருளும், புறப்பொருளும் ஆகும்.

இவற்றுள் அகப்பொருள் என்பது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் தாமே தம்முள் நுகரும் இன்பத்தைப் பற்றிப் பிறர்க்குக் கூற இயலாததாய் அவர்தம் அகத்தாலேயே உணரக் கூடியதாகலின் 'அகம்' எனப்பட்டது. இது உள்ளத்து உணர்வால் அனுபவிக்கும் இன்பம் ஆகும்.

புறப்பொருள் என்பது புறத்தார்க்குக் கூறக் கூடியதாய் அமைந்த அறம், பொருள் பற்றிக் கூறுவன ஆகும்.

***அகப்பொருள் :***

அகப்பொருள் பற்றிய விளக்கம் கூறுவது அகத்திணை ஆகும். திணை என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள்.

அகத்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என ஏழு வகைப்படும்.

இவற்றுள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன 'அன்பின் ஐந்திணை' என வழங்கப்படும்.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன அகத்திணைக்கு உரிய பொருள்களாகும்.

***முதற்பொருள் :*** முதற்பொருள் நிலமும், பொழுதும் என இரு வகைப்படும்.

### நிலம்

குறிஞ்சி - மலையும் மலையைச்சார்ந்த இடமும்.

முல்லை - காடும் காட்டைச் சார்ந்த இடமும்.

©KTBS Not to be republished

மருதம் - வயலும் வயலைச்சார்ந்த இடமும்.

நெய்தல் - கடலும் கடலைச்சார்ந்த இடமும்.

பாலை - வறண்ட சுரமும் (பாலைவனம்), சுரம் சார்ந்த இடமும்.

## பொழுது

பெரும்பொழுது, சிறுபொழுது என பொழுது, இரு வகைப்படும்.

| | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | – குளிர்காலம் முன்பனிக்காலம் | – யாமம் |
| முல்லை | – கார்காலம் | – மாலை |
| மருதம் | – ஆறுபெரும்பொழுதுகளும் | – வைகறை |
| நெய்தல் | – ஆறுபெரும்பொழுதுகளும் | – எற்பாடு |
| பாலை | – இளவேனில், முதுவேனில், பின்பனி | – நண்பகல் |

பெரும்பொழுது கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக் காலம், இளவேனிற் காலம், முதுவேனிற்காலம் என ஆறு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| கார் காலம் | - | ஆவணி, புரட்டாசி |
| குளிர் காலம் | - | ஐப்பசி, கார்த்திகை |
| முன்பனிக்காலம் | - | மார்கழி, தை |
| பின்பனிக் காலம் | - | மாசி, பங்குனி |
| இளவேனிற் காலம் | - | சித்திரை, வைகாசி |
| முதுவேனிற் காலம் | - | ஆனி, ஆடி. |

**வினாக்கள் :** 1) அகத்திணை பற்றிய கருத்தினைக் கூறுக.
2) அறுவகைப் பெரும்பொழுதினைக் குறிப்பிடுக.

©KTBS Not to be republished

## கருப்பொருள்

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், வழத்தியர் | சேர்ப்பன், பரதர், பரத்தியர் | எயினர், எயிற்றியர். |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல் வெண்ணொய் | மீன், உப்புக்குப் பெ ற்றபொருள் | சூறையாடலால் வரும்பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான் | எருமை, நீர்நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை, புலி |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழு நீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இருப்பை, பாலை |
| பறவை | கிளி, மயில் | காட்டுக்கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| நீர் | அருவி, சுனை | காட்டாறு | கிணறு, பொய்கை | மணற்கிணறு, உவர்க்கழி | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறுகோட்பறை | மணமுழா, நெல்லரி, கிணை | மீன் கோட்பறை | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | முல்லை யாழ் | மருதயாழ் | விளரியாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப் பண் | சாதாரிப் பண் | மருதப் பண் | செவ்வழிப்பண் | பஞ்சரப் பண் |
| தொழில் | தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல் களை பறித்தல் | மீன் பிடித்தல் உப்பு விளைவித்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

Not to be republished ©KTBS

# 4. யாப்பு

யாப்பு என்றால் கட்டுதல் எனப்பொருள்படும். அதாவது செய்யுளுக்குரிய உறுப்புக்களான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புக்களால் ஆக்கப்படுவது செய்யுள் எனப்படும்.

யாப்பு இலக்கணமானது, உறுப்பு இலக்கணம், செய்யுள் இலக்கணம் என இருவகைப்படும். செய்யுளுக்குரிய உறுப்புக்களின் இலக்கணம் பற்றிக் கூறுவது உறுப்பு இலக்கணம் ஆகும். செய்யுளுக்குரிய உறுப்புக்களால் ஆன செய்யுளின் இலக்கணம் கூறுவது செய்யுளிலக்கணம் ஆகும்.

இனி செய்யுளின் உறுப்பு இலக்கணம் பற்றி அறிவோம்.

செய்யுளின் உறுப்புகள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை யென ஆறுவகைப்படும் என மேலே கண்டோம். அவை பற்றிய விளக்கம் வருமாறு.

1) **எழுத்து :** இலக்கணத்தில் கூறப்பட்ட உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் சேர்ந்த முப்பது எழுத்துகளும், இவற்றைச் சார்ந்த சார்பெழுத்துகள் பத்தும் எழுத்துகள் ஆகும்.

2) **அசை :** எழுத்துக்களால் ஆக்கப்படுவது அசை எனப்படும். அது சீருக்கு உறுப்பாக வரும். அசை, நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

**நேரசை :** குறில் தனித்து வரினும், நெடில் தனித்து வரினும், குறில் ஒற்றடுத்து வரினும், நெடில் ஒற்றடுத்து வரினும் நேரசை எனப்படும்.

கற்க - என்பதில் கற் - என்பது குறில் ஒற்றடுத்து வந்த நேரசை

©KTBS Not to be republished

க - என்பது குறில் தனித்து வந்த நேரசை

பா - என்பது நெடில் தனித்து வந்த நேரசை

பால் - என்பது நெடில் ஒற்றடுத்துவந்த நேரசை.

***நிரையசை :*** இருகுறில் இணைந்து வரினும், இருகுறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசை எனப்படும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

இக்குறள் வெண்பாவில் கசடறக் என்ற சீரில்,

கச - என்பது இரு குறில் இணைந்த நிரையசை

டறக் - என்பது இருகுறில் இணைந்து ஒற்றடுத்த நிரையசை

பவை - என்பது குறில் நெடில் இணைந்த நிரையசை

***3. சீர் :*** அசை தனியாகவும், ஒன்றுக்கு மேற்பட்டு நான்கு வரை தொடர்ந்து வருவது சீர் எனப்படும். இது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச் சீர், நான்கு அசைச்சீர் என நான்கு வகைப்படும்.

***ஓரசைச்சீர் :*** நேரசையோ, நிரையசையோ தனித்துநின்று சீராய் வருவது ஓரசைச்சீர் எனப்படும். அவற்றிற்குரிய வாய்பாடுகள் நாள், மலர் எனபனவாகும்.

நேர் - நாள்

நிரை - மலர்

***ஈரசைச்சீர் :***

நேரசையும், நிரையசையும், இணைந்தும், மாறியும் வருவதால் ஈரசைச்சீர் நான்கு ஆகும்.

நேர் – நேர் – தேமா

©KTBS Not to be republished

நிரை நேர் – புளிமா

நிரை நிரை – கருவிளம்

நேர் நிரை – கூவிளம்

***மூவசைச் சீர் :*** மேலே கண்ட ஈரசைச்சீர் நான்கோடு இறுதியில் நேர் அசை சேர்க்க நான்கும், நிரை அசை சேர்க்க நான்கும் ஆக, மூவசைச் சீர் எட்டு ஆகும்.

***4. தளை :*** செய்யுள் என்பது சீர்களால் ஆக்கப்படுவது. செய்யுளில் □நின்ற சீரின் ஈற்றசையோடு வரும்சீரின் முதல் அசை ஒன்றியோ, ஒன்றாமலோ சேர்வது தளை எனப்படும்.

நின்ற சீரின் இறுதி நேரசையாக இருந்து, வரும்சீரின் முதல் நேரசையாக இருந்தால் ஒன்றி வருதலாம், நின்றசீரின் இறுதி நேரசையாக இருந்து, வரும் சீரின் முதல் நிரையசையாக இருந்தால் ஒன்றாது வருதலாகும்.

இது 1) நேரொன்றாசிரியத்தளை

2) நிரையொன்றாசிரியத் தளை

3) இயற்சீர் வெண்டளை

4) வெண்சீர் வெண்டளை

5) கலித்தளை

6) ஒன்றிய வஞ்சித்தளை

7) ஒன்றா வஞ்சித்தளை

என ஏழு வகைப்படும்.

| | | |
|---|---|---|
| மா முன் நேர் | - | நேரொன்றாசிரியத்தளை |
| விளம் முன் நிரை | - | நிரையொன்றாசிரியத்தளை |
| மா முன் நிரை<br>விளம் முன் நேர் | - | இயற்சீர் வெண்டளை |

©KTBS Not to be republished

காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை

காய் முன் நிரை - கலித்தளை

கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை

கனி முன் நேர் - ஒன்றா வஞ்சித்தளை

**அலகிடுதல் :**

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| புளிமா | புளிமா | புளிமாங்காய் | தேமா |
| நிரை நேர் | நிரை நேர் | நிரை நேர் நேர் | நேர் நேர் |
| அக/ர | முத/ல | எழுத்/தெல்/லாம் | ஆ/தி |

| 5 | 6 | 7 |
|---|---|---|
| புளிமா | புளிமா | பிறப்பு |
| நிரை நேர் | நிரை நேர் | நிரை நேர் |
| பக/வன் | முதற்/றே | உல/கு |

1) மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை

2) மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை

3) காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை

4) மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை

5) மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை

6) மா முன் நிரை - இயற்சீர் வெண்டளை

இக்குறட்பா இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் வந்த வெண்பா ஆகும். கடைசிச்சீர் பிறப்பு என்ற வாய்பாட்டில் முடிந்து உள்ளது.

©KTBS Not to be republished

## வினாக்கள்

1) யாப்பு என்றால் என்ன ? விளக்குக.

2) யாப்பிலக்கண உறுப்புக்கள் யாவை ?

3) அசை என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

4) நேரசை, நிரையசை ஆகியவற்றை விளக்குக.

5) சீர் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

6) ஓரசைச் சீர்களையும், அவற்றின் வாய்பாடுகளையும் எழுதுக.

7) ஈரசைச் சீர்களையும், அவற்றின் வாய்பாடுகளையும் எழுதுக.

8) மூவகைச் சீர்கள் யாவை ?

9) “கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக”

இக்குறளின் சீர்களை அலகிட்டு, வாய்பாடு, தளை- ஆகியவற்றை எழுதுக.

©KTBS Not to be republished

# 5. அணி

செய்யுளுக்கு அழகு செய்வது அணி எனப்படும். இது பொருளணி, சொல்லணி என இருவகைப்படும்.

தன்மை நவிற்சி அணி, உயர்வு நவிற்சி அணி, உவமை அணி, உருவக அணி போன்றவை பொருளணி எனப்படும்.

மடக்கு, திரிபு, சிலேடை என்பவை சொல்லணி எனப்படும்.

***1. தன்மை அணி :*** ஒரு பொருளின் உண்மையான தன்மையை உள்ளவாறு அழகுபடக் கூறுவது தன்மையணி அல்லது தன்மை நவிற்சி அணி எனப்படும். இதனை இயல்பு நவிற்சி அணி எனவும் கூறலாம்.

(எ-டு) தோயும் வெண்தயிர் மத்தொலி துள்ளவும்
ஆய வெள்வளை வாய்விட்டரற்றவும்
தேயும் நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆய மங்கையர் அங்கை வருந்துவர்.

இப்பாடலில் பெண்கள் தயிர் கடையும்போது உண்டாகும் ஒலியும், கை வளையல்கள் ஒலியும், இடுப்பின்துன்பமும், கைகளின் வருத்தமும் இயல்பாக உள்ளவாறே கூறப்பட்டுள்ளன. இது தன்மை நவிற்சி அணியாகும்.

***2. உயர்வு நவிற்சி அணி :*** ஒரு பொருளின் சிறப்பைக் கூறும்போது, உள்ளவாறு கூறாமல், மிகைப்படுத்திக் கூறுவது உயர்வு நவிற்சி அணி எனப்படும்.

(எ-டு) ‘வானுற வளர்ந்த செந்நெல்’

இப்பாடலடியில் நெல் உயரமாக வளர்ந்திருந்தது என்பதை வானைத் தொடுமளவு வளர்ந்திருந்தது என மிகைப்படுத்திப் பாடியுள்ளார். ஆகவே இப்பகுதி உயர்வு நவிற்சிஅணியானது.

***3. எடுத்துக்காட்டுவமை அணி :***

உவமையும் பொருளும் தனித்தனியே நிற்க, இடையில் பொருள் தொடர்பு படுத்தும். அதுபோல் என்னும் உவம உருபு மறைந்து வருவது எடுத்துக் காட்டுவமை அணி எனப்படும்.

©KTBS Not to be republished

(எ-டு) ‘வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு’

இக்குறட் பாவில் வெள்ளத்தின் அளவைப் பொறுத்து, மலரின் உயர்வு இருக்கும். (அதுபோல) மனிதனின் உயர்வு அவன் கொண்ட உள்ளக் கருத்தின் அளவைப் பொறுத்திருக்கும். இங்கு ‘அதுபோல’ என்ற உருபு மறைந்து வந்துள்ளதால் இப்பாடல் எடுத்துக் காட்டு உவமையணி பயின்று வந்த பாடலாகும்.

**4. சிலேடை அணி :** ஒரு சொல் அல்லது ஒரு தொடர் பல பொருள் தருமாறு வருவது சிலேடை எனப்படும். இதனை இரட்டுற மொழிதல் எனவும் கூறுவர்.

(எ-டு) ‘வஞ்சியேன் என்றவன்தன் ஊருரைத்தான் யானுமவன்
வஞ்சியான் என்பதனால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியேன் என்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ’

இப்பாடலில் வஞ்சியேன் என்னும் சொல், நான் வஞ்சி மாநகரைச் சேர்ந்தவன் என்று ஒரு பொருளும், வஞ்சிக்க மாட்டேன் என்று ஒரு பொருளும் தருகின்றது.

வஞ்சியான் என்னும் சொல் வஞ்சிமாநகரைச் சார்ந்தவன் என்னும் பொருளையும், வஞ்சிக்கமாட்டான் என்னும் பொருளையும் தருகின்றது.

இவ்வாறு ஒரே சொல்லுக்குப் பலபொருள் உள்ளதால், இப்பாடல் சிலேடை அணி அமைந்த பாடலாகும்.

### வினாக்கள்

1) அணி என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?
2) தன்மை நவிற்சி அணியை விளக்குக.
3) உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன ? விளக்குக.
4) எடுத்துக் காட்டு உவமை அணியை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
5) சிலேடை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

Not to be republished ©KTBS